கல்கி




KALKI


ஜனவரி 13, 1952

4 அணா

இச்சிறு கைகள் விளையாடுகின்றன, ஆனால்...



...விளையாடும் கைகளும் அழுக்கடைகின்றன!



அழுக்கடைந்த கைகள்
மறைந்திருக்கும்
அபாயத்தைத்
தாங்குகின்றன!

அழுக்கில் கண்களுக்கு
புலப்படாத கிருமிகள் இருப்பதால்!

லைப்பாயினால் அடிக்கடி கழுவுங்கள்

லைப்பாய் சோப்

அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
உங்களை காப்பாற்றுகிறது!

L. 181-50 TM

கல்கி


பொருளடக்கம்

மலர் 11 | இதழ் 24

1952 ஜனவரி 13

கர ௵ மார்கழி 29

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


சட்டத்தின்
இரும்புப் பிடியிலிருந்து
தப்பமுடிந்தது அவனால்!
ஆனால்
ஒரு மங்கையின்
தளிர்ப் பிடியிலிருந்து
விடுதலைப்பெற முடியவில்லை!
ஜூபிடரின்
கைதி
சென்னை
கெயிட்டி
தங்கம்
மற்றும் முக்கிய நகரங்களில்
நடைபெறுகிறது
டைரக்ஷன்: S. பாலசந்தர்... ஸ்டுடியோ: சென்ட்ரல்... நகர உரிமையாளர்கள்: வெல்பிக்சர்ஸ்

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 24

எங்கே? ஒரு மூச்சு!

நாடெங்கும் தேர்தல்கள் நடந்து வருகின்றன. வெளியாகியுள்ள வரையில் தேர்தல் முடிவுகளும் மொத்தத்தில் திருப்திகரமாக இருக்கின்றன.

முதலாவது திருப்திகரமான அம்சம், எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகமான வாக்காளர்கள் தங்கள் வோட்டுரிமையைப் பயன்படுத்த முன் வந்திருப்பதுதான். பெரும்பாலான தொகுதிகளில் அபேட்சகர்கள் பலர் போட்டியிடுவதால் தீவிரமான தேர்தல் பிரசாரம் நடந்திருக்கிறது. இதன் காரணமாக வோட்டுச் சாவடிகளுக்குத் திரளான வாக்காளர்கள் வந்து வோட்டுப் போட்டு வருகிறார்கள். ஜனநாயகத்தில் இது ஒரு நல்ல ஆரம்பப் படிப்பினையாகும். இதற்கு அடுத்தபடியாக மக்கள் ஜனநாயகத்தின் முக்கிய அம்சத்தை அறிந்து கொள்வார்கள். இரண்டு அல்லது மூன்று கட்சிகளுக்குள்ளே தங்களுக்கு உசிதமான கட்சியைத் தேர்ந்தெடுத்து வோட்டுப் போட வேண்டுமென்றும், சில்லறைக் கட்சிகளுக்கும் உதிரி அபேட்சகர்களுக்கும் போடும் வோட்டு வீண் போனதாகும் என்றும் கண்டு கொள்வார்கள்.

அடுத்த பொதுத் தேர்தல் வரும்போது இரண்டு அல்லது மூன்று வலுவான கட்சிகளுக்குள்ளே போட்டி நடைபெறும் என்றும், சில்லறைக் கட்சிகளும் சுயேச்சை அபேட்சகர்களும் மறைந்து விடுவார்கள் என்றும் எதிர்பார்க்கலாம்.

* * * *

இரண்டாவது திருப்திகரமான அம்சம், நாடெங்கும் மிக அமைதியான முறையில் நேர்மையாகத் தேர்தல்கள் நடைபெற்று வருவதாகும். இதன் பெருமை பெரும்பாலும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் காங்கிரஸ் அரசாங்கங்களுக்கும் சேரும். பூரண அதிகாரத்துடன் ஆட்சி நடத்தும் ஒரு கட்சியார் மற்றக் கட்சிக்காரர்களுக்கு இவ்வளவு தூரம் சகல விதமான பிரசார உரிமைகளும் கொடுத்திருப்பது மிக்க அதிசயமான காரியம். புரட்சியினால் அரசாங்கத்தைக் கவிழ்க்க விரும்பும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறையிலிருந்தபடியே தேர்தலில் ஈடுபடுவதற்கும் அநுமதித்திருக்கிறார்கள். இவ்வளவுடன், பந்தோபஸ்து ஏற்பாடுகள் மிகச் சிறந்த முறையில் நடத்தப்படுகின்றன. முதன் முதலில் சர்வஜன வாக்குரிமை அடிப்படையில் நடக்கும் பொதுத் தேர்தல் 'புதுச்சேரித் தேர்தல்' போல் நடைபெறாமல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெறுவது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இதற்காகக் காங்கிரஸ் அரசாங்கத்தினரையும் சர்க்கார் அதிகாரிகளையும் மற்றும் தேர்தலில் கலந்து கொள்ளும் எல்லாக் கட்சியினரையும் பாராட்டுகிறோம்.

* * * *

தேர்தல் முடிவுகளில் மிகவும் திருப்திகரமான அம்சம் நேருஜியின் தலைமையில் மகாஜனங்கள் தங்களுடைய பூரண நம்பிக்கையைத் தெரிவித்து வருவதுதான். இந்தியப் பார்லிமெண்டின் மக்கள் சபைக்கு இது வரை வெளியாகி இருக்கும் முடிவுகளில், மிகப் பெரும்பாலும் காங்கிரஸ் அபேட்சகர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள். கேரள ராஜ்யத்திலே கூடப் பார்லிமெண்டு சபைக்குரிய மொத்தம் ஆறு ஸ்தானங்களில் ஐந்து ஸ்தானங்களைக் காங்கிரஸ் அடைந்திருக்கிறது.

பாரத நாட்டின் வருங்கால சுபிட்சமும் புனர் நிர்மாண திட்டமும் அயல்நாட்டுக் கொள்கையும் மத்திய பார்லிமெண்ட் அமையும் முறையையே முக்கியமாகப் பொறுத்திருக்கின்றன. மத்திய பார்லிமெண்டில் காங்கிரஸ் பெருமிதமான மெஜாரிட்டி ஸ்தானங்களைப் பெற்றால்தான் நேருஜியின் கைகளுக்குப் பலம் ஏற்படும்; அதுவே ஜவாஹர்லால்ஜியின் தேசத் தலைமையை மக்கள் விரும்பி வரவேற்பதற்கு அறிகுறியாகும்.

ஆகவே, இதுவரையில் வெளியாகியிருக்கும் மக்கள் சபைத் தேர்தல் முடிவுகளில் காங்கிரஸ் பெருமித வெற்றி அடைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இராஜ்ய சட்ட சபைகளின் தேர்தல் முடிவு களில் அந்தந்த மாகாணத்துக் காங்கிரஸ் மந்திரி சபைகள்—காங்கிரஸ் நிர்வாகிகள் இவர்களிடம் பொதுமக்கள் கொண்டுள்ள திருப்தியும் அதிருப்தி யும் வெளியாகி வருவதைக் காண்கிறோம்.

பம்பாய் இராஜ்யத்தில் காங்கிரஸ் மந்திரி சபை கனம் பி. ஜி. கேர் அவர்களின் தலைமையில் மிக்க நல்ல பெயருடன் தொடர்ந்து வேலை செய்து வந்திருக்கிறது. ஆகவே பம்பாய் நகரில் சோஷ லிஸ்டுகள் முதலியோர் பிரமாதமான பிரயத்தனங் களைச் செய்தும் காங்கிரஸ் பெருவாரியான வெற்றி யடைந்து வருகிறது.

மத்திய பிரதேசத்தில் கனம் சுக்லா பிரதம மந்திரியாக இடைவிடாமல் தொடர்ந்து பதவி வகித்து நிர்வாகத்தை நடத்தி வருகிறார். அம் மாகாணத்தில் சமீபத்தில் ஸ்ரீ மிஸ்ரா என்பவர் தடபுடலாக ஜவாஹர்லால் நேருவைத் தாக்கி விட்டுக் காங்கிரஸை விட்டு வெளியேறி எதிர்ப் பிரசாரம் செய்தும் காங்கிரஸின் செல்வாக்கை அசைக்க முடியவில்லை. இன்று வரை (8-1-52) முடிவு வெளியாகி யிருக்கும் 67 ஸ்தானங்களில் 53 ஸ்தானங்களைக் காங்கிரஸ் கைப்பற்றி யிருக்கிறது.


திருவாங்கூர்—கொச்சி இராஜ்யத்தில் காங்கிரஸ் ஸ்தாபனங்களும் காங்கிரஸ் மந்திரிகளும் தங்க ளுக்குள் சண்டை போட்டுக் கொண்டு நாடு சிரிக் கும்படி செய்து கொண்டிருந்தார்கள். அங்கே இத்தேர்தலில் காங்கிரஸ் அடியோடு தொலைந்து விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் இன்று வரையில் 60 ஸ்தானங்களில் 41 ஸ்தா னங்கள் காங்கிரஸுக்குக் கிடைத்திருக்கிறது. எதிர்பார்த்ததைக் காட்டிலும் காங்கிரஸுக்கு அதிகவெற்றி என்றே இதைச் சொல்லலாம். ஜவா ஹர்லால்ஜி அந்த இராஜ்யத்தில் சுற்றுப் பிரயா ணம் செய்திராவிட்டால் காங்கிரஸ் அங்கே அடி யோடு முழுகிப் போயிருக்கும்.

ஆந்திரப் பிரதேசத்திலிருந்து வெளியாகி யிருக் கும் முடிவுகள் எதிர்பார்த்தபடியே மாகாண காங்கிரஸ் நிர்வாகிகளிடம் ஆந்திர மக்களின் அதிருப்தியைப் புலப்படுத்தி வருகின்றன.


*   *   *

இந்தப் பொதுத் தேர்தலில் வெளியாகி வரும் மற்றொரு முக்கியமான அம்சத்தைப் பொது மக்கள் கவனிக்க வேண்டும். காங்கிரஸுக்கு அடுத்தபடியாக நாடெங்கும் ஓரளவு வெற்றி யடைந்துவரும் ஸ்தாபனம் கம்யூனிஸ்ட் ஸ்தா பனந்தான். இதற்குக் காரணங்கள் வேண்டிய அளவு இருக்கின்றன. கம்யூனிஸ்டுகள் கட்சி அமைப்பு வேலையைப் பிரமாதமான முறையில் செய்திருக்கிறார்கள். நாட்டிலுள்ள வறுமை, பற்றாக்குறை முதலிய நிலைமைகளை நன்கு பயன் படுத்திப் பிரசாரம் செய்து வருகிறார்கள். காங் கிரஸ் மந்திரி சபைகள் அவ்வப்போது செய்த தவறுகளையும் நன்கு பயன்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். இவ்வளவுடன், காங்கிரஸ் வாதிகள் ஏற்கெனவே கையாண்டு வந்த தியாக முறை களை இப்போது அவர்கள் கையாண்டு சிறைவாசம் முதலிய கஷ்டங்களை அநுபவித்து வருகிறார்கள். அவர்களுடைய பிரசார முறையும் சுலபமானது. அன்பு முறையைக் காட்டிலும் துவேஷ முறை ஆரம்பத்தில் அதிக விரைவில் பலன் கொடுப்பது

கிழவரின் திணறல்!



மொத்தத்தில் நல்ல விளைச்சல்!



போல் காணப்படுவது இயல்பு. "பணக்காரர்களையும் நிலச்சுவான்தாரர்களையும் ஒழித்துவிடுகிறோம்; அவர்களுடைய பணத்தையும் நிலத்தையும் பங்கிட்டுக் கொடுத்து விடுகிறோம்" என்றால், அறியாமையில் மூழ்கியுள்ள ஏழை மக்களின் மனதில் உடனே அப் பிரசாரம் நிலைபெற்று விடுகிறது. "அவ்வாறு செய்வது சாத்தியமன்று; சாத்தியமானாலும் நாட்டின் பொருளாதாரம் நாசமாகும்; ஏழைகளுக்குப் பயன் ஒன்றும் கிட்டாது" என்னும் உண்மையை எடுத்துச் சொல்வோரும் இல்லை; எடுத்துச் சொன்னாலும் ஏழைகளின் மனதில் சுலபத்தில் பதியாது.

ஆகையால் காங்கிரஸுக்கு விரோதமாக இந்தப் பொதுத் தேர்தலில் வேலை செய்கிறவர்கள், வோட்டுப் போடுகிறவர்கள் எல்லாரும் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். காங்கிரஸுக்கு எதிராக வேறு எந்த அபேட்சகருக்கு வேலை செய்தாலும் அது கம்யூனிஸ்ட் கட்சிக்கே உதவி செய்வதாகும். காங்கிரஸ் இல்லையென்றால், இந்த நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சிதான் ஆதிக்கம் வகிக்கும் என்பது நிச்சயம். இராமராஜ்யக் கட்சி, கணதந்திரக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, குடியரசுக் கட்சி, பிரஜா கட்சி, பொது நலக் கட்சி, சுயநலக் கட்சி, உழைப்பாளர் கட்சி, உழைக்காதவர் கட்சி, — என்று இப்படி வேறு எந்தக் கட்சிக்கு வோட்டு அளித்தாலும் அது கம்யூனிஸ்டுக் கட்சிக்கே பலம் அளிப்பதாகும்.

சுயேச்சை அபேட்சகர்களுக்குக் கொடுக்கும் வோட்டும் அப்படியேதான். மூக்கர்ஜிகளும், காரேக்களும், கிருபாளினிகளும், ரங்காக்களும், பி. டி. ராஜன்களும், ஸி. டி. நாயுடுக்களும் செய்வது உண்மையில் கம்யூனிஸ்டுகளின் வேலையைத்தான். இதை நன்றாய்த் தெரிந்து கொண்டு இத்தகைய கட்சிக்காரர்களும் சுயேச்சையாளர்களும் தங்கள் போக்கை அமைத்துக்கொள்ள வேண்டும்.

*   *   *

தமிழ் நாட்டில் ஏறக்குறைய அரை வாசி தொகுதிகளில் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. மிச்சமுள்ள தொகுதிகளில் இந்த வாரத்திலும் அடுத்த வாரத்திலும் தேர்தல் நடைபெறும்.

நேருஜியின் தலைமையில் நம்பிக்கையுள்ள காங்கிரஸ் வாதிகளும் தேச பக்தர்களும் ஒரு கடைசி மூச்சுப் பிடித்துப் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

பாரதநாடு அமைதியான முறையில் சுபிட்சமும் நல் வாழ்வும் அடைந்து அகில தேசங்களின் மத்தியில் சிறந்து விளங்க வேண்டுமானால், இந்தப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற வேண்டியது அவசியம்.

இல்லாவிடில் அரசாட்சி பலவீனமடைந்து பலாத்காரக் குழப்பமும் கலகமும் பரவித் தேசம் குட்டிச்சுவராகி விடும்.

அத்தகைய விபரீதம் ஏற்படக் கூடாது என்று விரும்புவோர் காங்கிரஸின் வெற்றிக்கு உழைத்தே யாக வேண்டும்.

சில்லறைக் குறைகளையும் பரஸ்பர மனஸ்தாபங்களையும் எண்ணி நாட்டுக்குத் துரோகம் செய்யக் கூடாது. "எக்கேடாவது கெட்டுப் போகட்டும்" என்று அலட்சியமா யிருந்துவிடவும் கூடாது.

விஷயம் அறிந்த ஒவ்வொருவரும் இப் பொதுத் தேர்தலில் தங்கள் வோட்டுரிமையை அவசியம் பயன்படுத்த வேண்டும்; காங்கிரஸின் சின்னமாகிய

இரட்டை மாட்டுச் சித்திரம் உள்ள பெட்டியில் தங்கள் வோட்டைப் போட வேண்டும்.

அவரவர்களும் வோட்டுப் போடுவது மட்டும் போதாது. நாட்டின் நீடித்த நன்மையில் அக்கறையுள்ளவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு கிளம்ப வேண்டும். வருகின்ற ஒரு வாரத்தில் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரித்து வெற்றிபெறச் செய்ய அவரவர்களால் இயன்றவரை பிரயத்தனம் செய்ய வேண்டும். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அலட்சியமாயிருந்து விடாமல் தேர்தல் தினத்தன்று வோட்டுச் சாவடிக்குப் போய் வோட்டுப் போடும்படி தூண்ட வேண்டும். இன்னும் அவரவர்களுக்குச் செல்வாக்கு உள்ள இடங்களிலெல்லாம் சென்று தீவிரப் பிரசாரம் செய்ய வேண்டும். முக்கியமாக, குடும்பத்துப் பெண்மணிகள் "நமக்கென்ன இந்த வம்பு!" என்று இருந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தேர்தல் முடிவுகள் கடைசியாக வெளியாகும் போது, மொத்தத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் மகா சபையையும் நேருஜியின் தலைமையையும் பெருமிதமாக ஆதரித்திருக்கிறது என்ற நல்ல பெயர் நிலை நாட்டப்படும் என்று நம்புகிறோம்.

அவர்களை அலட்சியம் செய்யாதீர்!

சமீப காலத்தில் இந்நாட்டிலுள்ள மத்திய வகுப்பார் அடைந்துள்ள இன்னல்களைப் பற்றியும் சன ஸ்திதியைப் பற்றியும் ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியார் ஒரு பிரசங்கத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

இந்த நாடு சுதந்திரம் அடைந்ததற்கு முக்கிய காரணமாயிருந்தவர்கள் மத்திய வகுப்பார்தான். அவர்கள் அவ்வளவு பேரும் காங்கிரஸ் மகாசபையின் முன்னணிப் பிரசாரகர்களாக இருந்து எவ்விதப் பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் காங்கிரஸின் இலட்சியங்களை மக்களிடையே பரப்பி வந்தார்கள். பொதுக் கூட்டங்களுக்குத் திரண்டு வந்து "ஜே" போட்டவர்களும் விடுதலைப் போராட்டங்களின்போது மக்களிடையே தோன்றிய ஐயங்களை வாதப் பிரதிவாதங்களின் மூலம் போக்கிக் காங்கிரஸுக்குப் பலம் திரட்டியவர்களும் மத்திய வகுப்பார்தான்.

ஆயினும் சென்ற ஐந்து வருஷ காலத்தில் காங்கிரஸ் மேலிடத்தாரும் நடு இடத்தாரும் கீழ் இடத்தாரும் நாட்டின் மத்திய வகுப்பாரை வெகுவாக அலட்சியம் செய்து வந்தார்கள். அவ்வப்போது சிலர் முன் வந்து 'அவர்களை அலட்சியம் செய்யாதீர்!' என்று எச்சரிக்கை செய்ததையும் பொருட்படுத்தவில்லை.

நாட்டில் தொழிலாளிகள்—குடியானவர்களின் நிலை நாளுக்கு நாள் மேம்பட்டு வந்த காலத்தில் மத்திய வகுப்பாரின் நிலை மட்டும் மேலும் மேலும் பரிதாபமாகிக் கொண்டே வந்தது.

இதன் பலனை இந்தப் பொதுத் தேர்தலின் போது காங்கிரஸ் அபேட்சகர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டு அனுபவிக்கிறார்கள்.

தேசபந்து தாஸ் காலத்திய தேர்தல்களிலிருந்து ஐந்து வருஷங்களுக்கு முன் நடந்த தேர்தல் வரையில் மத்திய வகுப்பார் ஒவ்வொரு தேர்தலிலும் காங்கிரஸின் கௌரவ பிரசாரகர்களாயிருந்து உற்சாகத்துடன் உழைத்தார்கள். அங்கங்கே தேர்தல் பிரசாரம் சம்பந்தமாக வேண்டியிருந்த செலவுகளுக்கு அவரவர்களே பணம் வசூலித்துக் கொண்டார்கள். தத்தம் வீட்டில் நடக்கும் பண்டிகை நிகழ்ச்சிகள் என்று எண்ணிக்கொண்டு தேர்தல் முயற்சிகளை நடத்தி வைத்தார்கள். காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு எவ்வித சிரமமும் அவர்கள் வைக்கவில்லை. வெற்றியும் சுலபமாகவும் அபரிமிதமாகவும் கிடைத்தது.

இந்தத் தேர்தலில், மத்திய வகுப்பாரில் பெரும்பாலோர் தங்களுடைய இருதயத்திலும் இரத்தத்திலும் கலந்து விட்ட தேச பக்தி காரணமாகக் காங்கிரஸுக்கு விரோதமாய் வேலை செய்யவில்லை. ஆனால் முன்னெல்லாம் போல் உற்சாகமாக முன் வந்து காங்கிரஸ் பிரசாரத்தை நடத்தி வைக்கவும் இல்லை. ஐந்து வருஷங்களாகப் பட்ட கஷ்டங்கள் அவர்களுடைய மனம் கசந்து போகச் செய்திருக்கின்றன. ஆகையால் தங்கள் வோட்டுகளைக் காங்கிரஸுக்குப் போடுவதுடன் திருப்தி அடைந்து சும்மா இருந்து விடுகிறார்கள்.

ஆகையால் காங்கிரஸுக்கும் பொது மக்களுக்கும் இடையே சரியான தொடர்பு ஏற்படுத்த முடியவில்லை. சொந்தத்தில் பண வசதியும் மற்ற வசதிகளும் பெற்றுள்ள காங்கிரஸ் அபேட்சகர்கள் தங்கள் சொந்த செல்வாக்கைக் கொண்டு பிரசார இயந்திரத்தை இயக்க முடிகிறது.

மற்றக் காங்கிரஸ் அபேட்சகர்கள் திணறித் திண்டாடிப் போகிறார்கள். காங்கிரஸ் அபேட்சகர்களுக்காகப் பொது மக்கள் பண உதவி செய்ய முன் வரவில்லை. ஆர்வத்துடன் பிரசார முயற்சிகள் செய்யவும் முன்வரவில்லை.

இதற்கு நேர்மாறாக, கம்யூனிஸ்ட் அபேட்சகர்களின் சார்பில் ஆலைத் தொழிலாளிகளும் சேரிகளில் வாழும் ஹரிஜனங்களும் தங்களுக்குள் அரை ரூபாய் கால் ரூபாயாக வசூல் செய்து பணம் சேர்த்துத் தேர்தல் பிரசாரம் செய்யும் அதிசயத்தைக் காண்கிறோம்!

ஏழைகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பொதுவாக சகல மக்களுக்கும் அனுகூலமான எத்தனையோ காரியங்களைக் காங்கிரஸ் சர்க்கார் செய்து வந்தனர்.

ஆனால் அவற்றை அந்த ஏழைகளிடமும் பொது மக்களிடமும் எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்யக்கூடிய மத்திய வகுப்பாரை அடியோடு புறக்கணித்து விட்டனர். புறக்கணித்ததோடு மட்டுமல்ல; அவர்களுக்கு இன்னல்களையும் இழைத்தார்கள்; அதற்கு மேலே, புண்ணில் கோலெடுத்துக் குத்துவதுபோலப் பல காங்கிரஸ் மந்திரிகள் பேசியும் வந்தார்கள்.

அதன் பலன்கள் இந்தப் பொதுத் தேர்தலின் போது நன்கு வெளியாகின்றன.

காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெற்ற இடங்களிலும் வோட்டுக்கள் பெருமிதமாகக் கிடைக்கவில்லை என்பதைப் பார்க்கிறோம்.

காங்கிரஸ் மறுபடியும் அதிகாரத்துக்கு வரும்போது பழைய தவறை மீண்டும் செய்ய வேண்டாம்; மத்திய வகுப்பாரை அலட்சியம் செய்து விட வேண்டாம்.

மீண்டும் அத்தவறைச் செய்யும் பட்சத்தில், கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆயிரக் கணக்கிலும் லட்சக்கணக்கிலும் பிரசாரகர்களைத் தயார் செய்து கொடுத்ததாகவே முடியும்.


பொன்னியின்
செல்வன்
மூன்றாம் பாகம் • கொலை வாள்
மணியம்

பொன்னியின் செல்வன்



பூர்வ கதை

ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு சோழ நாட்டின் சிறு பகுதியை ஆண்டு வந்த விஜயாலய சோழன் தஞ்சை முத்தரையர்களிடமிருந்து தஞ்சாவூரைக் கைப்பற்றினான். சோழப் பேரரசுக்கு அவன் அஸ்திவாரம் அமைத்தான். விஜயாலய சோழன் குலத்தில் ஒருவர் பின் ஒருவராகப் பல வீர மன்னர்கள் தோன்றினார்கள். சிதம்பரம் கோயிலுக்குப் பொற்கூரை வேய்ந்த முதலாவது பராந்தக சக்கரவர்த்தி பாண்டிய நாட்டையும் ஈழத்தில் பெரும் பகுதியையும் வெற்றி கொண்டார். வடக்கே வடபெண்ணை வரையில் அவருடைய ஆதிக்கம் வியாபித்தது. பராந்தகரின் அந்திய காலத்தில் வடக்கேயிருந்து இரட்டை மண்டலத்து மாபெரும் சைன்யம் சோழ நாட்டின் மீது படையெடுத்து வந்தது. பராந்தகரின் மூத்த புதல்வர் இராஜாதித்யர் அரக்கோணத்துக்கு அருகில் உள்ள தக்கோலத்தில் அந்த மாபெரும் சைன்யத்துடன் வீரப் போர் புரிந்து உயிர் துறந்தார். யானை மீதிருந்தபடியே இறந்தபடியால் 'யானை மேல் துஞ்சிய தேவர்' என்று புகழ் பெற்றார். இராஜாதித்யர் இறந்தார் எனினும் இரட்டை மண்டலத்துப் படையெடுப்பு அதனால் தடுக்கப்பட்டது.

பராந்தக சக்கரவர்த்திக்குப் பிறகு அவருடைய இரண்டாவது புதல்வர் கண்டராதித்தர் சிம்மாதனம் ஏறினார். அச்சமயம் அவருக்குப் பிள்ளை இல்லை. ஆகையால் அவர் தமது சகோதரர் அரிஞ்சய சோழரின் புதல்வரான சுந்தர சோழருக்கு இளவரசுப் பட்டம் சூட்டினார்.

* * *

கண்டராதித்தர் சிறந்த சிவ பக்தர். முதிர்ந்த வயதில் அவர் மழவரையர் மகளை மணந்து கொண்டார். செம்பியன் மாதேவி என்ற பெயருடன் விளங்கிய இக்கோமகளும் சிவ பக்தியில் சிறந்தவள். கண்டராதித்தரின் அந்திய காலத்தில் செம்பியன் மாதேவிக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அவனுக்கு மதுராந்தகன் என்று பெயர் சூட்டினார்கள்.

பழைய ஏற்பாட்டின்படி கண்டராதித்தருக்குப் பிறகு அரிஞ்சயர் சிங்காதனம் ஏறி ஒரு வருஷத்துக்குள் உயிர் துறந்தார். அவருக்குப் பிறகு சுந்தர சோழர் சிங்காதனம் ஏறினார். சுந்தர சோழரின் காலத்தில் சோழ சாம்ராஜ்யம் மீண்டும் வளர்ந்து பரவலாயிற்று.

சுந்தர சோழர் திருக்கோவலூர் மலையமான் மகளாகிய வானமகாதேவியை மணந்து கொண்டார். இவர்களுக்கு ஆதித்த கரிகாலன், அருள்மொழி வர்மன் என்னும் இரு புதல்வர்களும் குந்தவைப் பிராட்டி என்னும் புதல்வியும் பிறந்தார்கள்.

ஆதித்த கரிகாலன் இளம் பிராயத்திலேயே மகா வீரன் எனப் புகழ் பெற்றான். மதுரையில் மீண்டும் தலைதூக்க முயன்ற வீர பாண்டியனைப் போரில் கொன்று 'வீர பாண்டியன் தலை கொண்டவன்' என்னும் பட்டமும் பெற்றான். பின்னர் இவன் பட்டத்து இளவரசனாகிக் காஞ்சியில் வசித்து வந்தான். காஞ்சியில் இவன் ஒரு பொன் மாளிகை கட்டினான். சுந்தர சோழர் காஞ்சிக்கு வந்து அந்தப் பொன் மாளிகையில் சில காலம் தங்கியிருக்க வேண்டும் என்று கோரி, வந்தியத்தேவன் என்னும் வாலிப வீரனிடம் தந்தைக்கு ஓலை கொடுத்து அனுப்பினான்.

* * *

அச்சமயம் சுந்தர சோழர் தஞ்சாவூர் அரண்மனையில் பாரிச வாயு நோயினால் பிடிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாயிருந்தார். தஞ்சையில் பழுவூர்க் குறுநில மன்னர்களாகிய பெரிய பழுவேட்டரையர் சின்னப் பழுவேட்டரையர் என்னும் சகோதரர்கள் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். இவர்களுடைய அநுமதியின்றி யாரும் சுந்தர சோழரைப் பார்க்க அநுமதிக்கப் படுவதில்லை.

பெரிய பழுவேட்டரையர் அறுபது வயதுக்கு மேல் நந்தினி என்னும் பெண்ணை மணந்து கொண்டிருந்தார். நாட்டின் பலருக்கும் அதிருப்தியை அளித்த இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பெரிய பழுவேட்டரையரின் அதிவுச் இராஜ பக்தியும் தடுமாற்ற மடைந்

தன. சோழ குலத்தின் மீது நந்தினி துவேஷங் கொள்ளச் சில அந்தரங்க காரணங்கள் இருந்தன. குந்தவைப்பிராட்டி நந்தினியை அவமதித்து அலட்சியம் செய்தது நந்தினியின் பகைமையை வளர்த்தது. இதிலிருந்து சோழ சாம்ராஜ்யத்தில் ஒரு பெரிய சதியாலோசனை தொடங்கியது. பழுவேட்டரையர்கள் கடம்பூர் சம்புவரையர்கள் முதலிய சோழ சாம்ராஜ்யத்தின் குறுநில மன்னர்களும் பெருந்தரத்து அதிகாரிகளும் இந்தச் சதியாலோசனையில் ஈடுபட்டார்கள். இவர்கள் சுந்தர சோழருக்குப் பிற்பாடு அவருடைய சந்ததிகளுக்குப் பட்டமில்லாமல் செய்து, கண்டராதித்தரின் புதல்வர் மதுராந்தகத் தேவருக்கு முடி சூட்டுவதென்று முடிவு செய்தார்கள்.

இந்த நிலைமையில், சுந்தர சோழரின் வம்சத்தை அடியோடு நிர்மூலம் செய்வதென்று கொலைகாரக் கூட்டம் ஒன்று மந்திரவாதி ரவிதாஸனின் தலைமையில் வேலை செய்து கொண்டிருந்தது. இந்தக் கூட்டத்தாருக்கு வேண்டிய பொருள் உதவியைப் பழுவூர் ராணி நந்தினி அந்தரங்கமாக அளித்து வந்தாள்.

* * *

வந்தியத் தேவன் காஞ்சியிலிருந்து தஞ்சை போகும் வழியில் கடம்பூர் மாளிகையில் ஓர் இரவு தங்கியிருந்த போது பழுவேட்டரையர்களின் சதியாலோசனையைப் பற்றித் தெரிந்து கொண்டான். அவன் பழுவூர் ராணி நந்தினியைத் தஞ்சைக்கு அருகில் தற்செயலாகச் சந்தித்தான். அவளுடைய உதவியினால் தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்துச் சுந்தர சோழரைப் பார்த்து ஓலையையும் கொடுத்தான். அவரிடம் சதியாலோசனையைப் பற்றி எச்சரிக்கை செய்ய யத்தனித்த போது தஞ்சைக் கோட்டைத் தளபதியான சின்னப் பழுவேட்டரையர் வந்து தடுத்து விட்டார். பிறகு வந்தியத்தேவன் தஞ்சைக் கோட்டையிலிருந்து பொக்கிஷ சாலைச் சுரங்க வழியின் மூலம் தப்பித்து வெளியேறிப் பழையாறையை அடைந்தான். அங்கே குந்தவை தேவியிடம் தான் அறிந்த விவரங்களைக் கூறினான். குந்தவையின் செல்வத் தம்பியும் பின்னால் இராஜராஜன் என்று சரித்திரப் பிரசித்தி பெற்றவனுமான அருள்மொழி வர்மன் அச்சமயம் இலங்கையில் போர் நடத்திக் கொண்டிருந்தான். அவனை உடனே புறப்பட்டு வரும்படி ஓலை எழுதிக் குந்தவை வந்தியத் தேவனிடம் அதைக் கொடுத்து அனுப்பினாள். 'பொன்னியின் செல்வ!' என்று அந்த ஓலை ஆரம்பமாகியிருந்தது.

அருள்மொழி வர்மன் குழந்தையாயிருந்த போது பெற்றோர்களுடன் காவேரி நதியில் உல்லாசப் படகில் போய்க் கொண்டிருந்தான். அப்போது நதியில் மிதந்த பூவை எடுக்கக் குனிந்து வெள்ளத்தில் விழுந்து விட்டான். அவனை ஒரு ஸ்திரீ தண்ணீரிலிருந்து எடுத்துக் காப்பாற்றிப் படகில் சேர்த்து விட்டு உடனே மறைந்து விட்டாள். அவள் யார் என்பது தெரியவில்லை. ஆகையால் காவேரி அம்மன் தான் அவ்விதம் மானிடப் பெண் உருவில் தோன்றிக் குழந்தையைக் காப்பாற்றினாள் என்று பலரும் நம்பினார்கள். இதனால் அவனுக்குப் 'பொன்னியின் செல்வன்' என்ற காரணப் பெயர் ஏற்பட்டது.

* * *

வந்தியத்தேவன் கோடிக்கரை சென்று அங்கே பூங்குழலி என்னும் பெண்ணின் உதவியால் ஈழ நாட்டை அடைந்தான். பொன்னியின் செல்வனைச் சந்தித்து ஓலையைக் கொடுத்தான். இருவரும் சந்தித்த தட்சணமே பரஸ்பரம் அழியா நேயம் கொண்ட நண்பர்கள் ஆயினர்.

இலங்கையில் தங்கியிருந்த சில தினங்களில் வந்தியத் தேவன் சில அதிசயமான விவரங்களை அறிந்தான்.

சுந்தர சோழர் பட்டத்து இளவரசராவதற்கு முன்னால் இலங்கையை யடுத்த பூதத் தீவில் சிலநாள் தங்கும்படி நேர்ந்தது. அங்கே அவரைத் தாக்க வந்த ஒரு கரடியிடமிருந்து ஒரு பெண் அவரைக் காப்பாற்றினாள். அவள் பிறவி ஊமையும் செவிடுமான பெண். ஆயினும் அவளிடம் சுந்தர சோழர் காதல் கொண்டார். விரைவில் அந்த ஊமைப் பெண்ணை அவர் பிரிந்து போகும்படி நேர்ந்தது.

அந்த ஊமைப் பெண்தான் பின்னொரு காலத்தில் குழந்தை அருள்மொழி வர்மரைக் காவேரி வெள்ளத்திலிருந்து காப்பாற்றியவள் ஆவள். அருள்மொழிவர்மர் இலங்கையில் சோழ சைன்யத்துடன் வந்து தங்கியிருந்தபோது மேற்கூறிய ஊமை ராணி அவரை மற்றும் பல அபாயங்களிலிருந்து தப்புவித்தாள். அவள் எழுதிக் காட்டிய சித்திரங்களிலிருந்து அவள் தமது பெரியன்னை முறைமையிலுள்ளவள் என்பதைப் பொன்னியின் செல்வர் உணர்ந்தார். அவளுக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் என்னவானார்கள் என்பதைப் பற்றியும் அருள்மொழிவர்மர் சில ஊகங்களைச் செய்து கொண்டார். ஆகையால் தம் தந்தையைச் சந்தித்து இவ்விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று அவர் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார்.

* * *

பொன்னியின் செல்வரைப் பழையாறைக்கு அழைத்துப் போவதற்காக வந்தியத்தேவன் வந்த அதே சமயத்தில் அவரைக் காஞ்சிக்கு அழைத்துப் போவதற்காக ஆதித்த கரிகாலன் அந்

தரங்க நண்பனும் படைத்தலைவனுமான பார்த்திபேந்திரனும் வந்திருந்தான். தற்சமயம் தஞ்சைக்கும் பழையாறைக்கும் போவது அனர்த்தமாக முடியும் என்று கூறிக் காஞ்சிக்கு வர வேண்டுமென்று பார்த்திபேந்திரன் வற்புறுத்தினான்.

எங்கே போவது என்பதுபற்றி இளவரசரின் மனதில் போராட்டம் நடந்துகொண்டிருந்தபோது, பூங்குழலி என்னும் பெண் ஒரு விந்தையான செய்தியைக் கொண்டு வந்தாள். சுந்தர சோழரின் கட்டளையின் பேரில் இளவரசரைச் சிறைப்படுத்தித் தஞ்சைக்குக் கொண்டு போவதற்காகப் பழுவேட்டரையர்களின் ஆட்கள் பலர் இரண்டு மரக்கலங்களில் வந்திருப்பதாக அவள் தெரிவித்தாள்.

உடனே இளவரசர் ஒரு முடிவுக்கு வந்தார். "நானே வலியச் சென்று அவர்களிடம் என்னை ஒப்புக் கொடுத்து விடப் போகிறேன்" என்றார். அதைத் தடுப்பதற்குக் கொடும்பாளூர் பெரிய வேளாராகிய சேநாதிபதி விக்கிரம கேசரியும் பார்த்திபேந்திரனும் முயன்றார்கள். அவர்கள் முயற்சி கைகூடவில்லை. இளவரசர் பிடிவாதமாகப் புறப்பட்டு விட்டார். வழி காட்டுவதற்காகப் பூங்குழலியையும் அவர் அழைத்துப் போனார்.

இவர்கள் போய்ச் சேர்வதற்குள் அந்த மரக்கலங்களில் ஒன்று தரை தட்டிச் சேற்றில் அமிழ்ந்து விட்டது. இன்னொரு மரக்கலத்தை அராபியர்கள் சிலர் கைப்பற்றிக் கொண்டு போனார்கள். அந்தக் கப்பலில் இளவரசர் போகிறார் என்று தவறாக எண்ணி வந்தியத் தேவன் முரட்டுத்தனம் செய்து அதில் ஏறிக்கொண்டான். அவனை அராபியர்கள் பிடித்துக் கட்டிப் போட்டார்கள். அதே கப்பலில் ஏறியிருந்த மந்திரவாதி ரவிதாஸனும் அவனுடைய தோழனும் அராபியர்களைக் கொன்று விட்டு வந்தியத் தேவனைத் தனியாகக் கப்பலில் விட்டு விட்டுப் படகில் ஏறிச் சென்றார்கள். அச்சமயம் அகோரமான சுழற் காற்று வந்து கப்பலைத் தாக்கியது.

வந்தியத்தேவன் அக்கப்பலில் போவதை அறிந்து பொன்னியின் செல்வர் பார்த்திபேந்திரனுடைய கப்பலில் ஏறி அதைப் பின்தொடர்ந்து சென்றார். இந்தக் கப்பலும் சுழற் காற்றில் அகப்பட்டுக் கொண்டு தத்தளித்தது. ஆயினும் கப்பலைச் செலுத்தக் கை தேர்ந்த மாலுமிகள் இருந்தபடியால் சமாளித்துக் கொண்டார்கள்.

வந்தியத் தேவன் தனியாக இருந்த கப்பலின் பாய்மரத்தின் மேல் இடி விழுந்து அது பற்றி எரியத் தொடங்கியது. அதனால் ஏற்பட்ட வெளிச்சத்தில் வந்தியத் தேவனைப் பார்த்து விட்ட அருள்மொழி வர்மர் அவனைக் காப்பாற்றுவதற்காகப் படகில் ஏறிச் சென்றார். மலை போன்ற அலைகளுடன் போராடிக் கொண்டு சென்று அவனைக் காப்பாற்றினார். ஆனால் அவர்கள் பின்னர் ஏறிய படகின் பேரில், முழுகிய கப்பலின் பாய் மரம் ஒன்று தாக்கிப் படகு உடைந்து போய் விட்டது. இருவரும் அப் பாய் மரத்தைப் பிடித்துக் கொண்டு மிதந்து வந்து பூதத் தீவை நெருங்கினார்கள். அச்சமயம் பூங்குழலி படகு விட்டுக் கொண்டு வந்து அவர்களைக் கரை சேர்த்துக் காப்பாற்றினாள்.

முதல் அத்தியாயம்

கோடிக்கரையில்

கடலில் அடித்த சுழிக்காற்று சோழ நாட்டுக் கடற்கரை யோரத்தில் புகுந்து தன் துரிதப் பிரயாணத்தைச் செய்து கொண்டு போயிற்று. "கல்லுளி மங்கன் போன வழி காடு மலையெல்லாம் தவிடு பொடி" என்பதுபோல அந்தச் சுழிக்காற்றுப் போன வழியெங்கும் பற்பல பயங்கர நாசவேலைகளைக் காணும்படி இருந்தது. கோடிக்கரையிலிருந்து காவேரிப்பூம்பட்டினம் வரையில் சோழ நாட்டுக் கடற்கரை யோரங்களில் வாயு பகவானின் லீலை செய்த வேலைகளை நன்கு பார்க்கும்படி யிருந்தது. எத்தனையோ மரங்கள் வேரோடு பெயர்ந்தும் கிளைகள் முறிந்தும் கிடந்தன. வீடுகளின் கூரைகளைச் சுழிக்காற்று அப்படியே தூக்கி எடுத்துக் கொண்டு போய்த் தூர தூரங்களில் தூள் தூளாக்கி எறிந்து விட்டிருந்தது. குடிசைகள் குட்டிச்சுவர்களாகி யிருந்தன. கோடிக்கரைப் பகுதியில் எங்கே பார்த்தாலும் வெள்ளக் காடாயிருந்தது. கடல் பொங்கி வந்து பூமிக்குள் புகுந்து விட்டதோ என்று தோன்றியது. ஆனால் பூமிக்கும் கடலுக்கும் மத்தியில் இருந்த வெண் மணல் பிரதேசம் அந்தக் கொள்கையைப் பொய்ப் படுத்தியது. அந்த வெண் மணல் பிரதேசத்தில் ஆங்காங்கு புதைசேறு இருந்த இடங்களில் மட்டும் இப்போது அதிகமாகத் தண்ணீர் தேங்கியிருந்தது. அப்படிப்பட்ட இடங்களில் இப்போது மனிதனோ மிருகமோ இறங்கி விட்டால், உயிரோடு சமாதி தான்! யானைகளைக் கூட அப் புதைசேற்றுக் குழிகள் இப்போது விழுங்கி ஏப்பம் விட்டு விடும்!

சுழிக்காற்று அடித்த இரண்டு நாளைக்குப் பிறகு கோடிக்கரைக்குப் பெரிய பழுவேட்டரையரும் அவருடைய பரிவாரங்களும் வந்து சேர்ந்தார்கள். பல்லக்கும் பின் தொடர்ந்து வந்தது. ஆனால் இம்முறை அந்தப் பல்லக்கில் அமர்ந்து இளைய ராணி நந்தினி தேவியே பிரயாணம் செய்தாள். மதுராந்தகத் தேவரை அந்தரங்கமாக அழைத்துப் போக வேண்டிய அவசியம் இப்போது இல்லை. மேலும் சில சமயம் இளைய ராணியையும் உடன் அழைத்துப் போனால்தானே மறுபடி அவசியம் நேரும்போது மதுராந்தகரை அழைத்துப் போக அந்தப் பல்லக்கு வாகனம் உபயோகமாயிருக்கும்?—இவ்வாறு நந்தினி கூறியதைப் பழுவேட்டரையர் உற்சாகமாக ஒப்புக் கொண்டார். காமாந்தகாரத்தில் மூழ்கியிருந்த அக்கிழவருக்குத் தம்முடன் அந்தப் புவன சுந்தரியை அழைத்துப் போவதில் ஆர்வம் இருப்பது இயல்புதானே?

சுழிக்காற்றுக்கு முன்னால் அவர்கள் நாகைப்பட்டினத்துக்கு வந்திருந்தார்கள். அங்கே தனாதிகாரி தமது உத்தியோகக் கடமைகளை முதலில் நிறைவேற்றினார்.

நாகைப்பட்டினம் அப்போது தமிழகத்தின் முக்கிய துறைமுகப் பட்டினங்களில் ஒன்றாயிருந்தது. வெளிநாடுகளிலிருந்து எத்தனை எத்தனையோ பொருள்கள் பெரிய பெரிய மரக்கலங்களில் வந்து அத்துறைமுகத்தில் இறங்கிக் கொண்டிருந்தன. அப்பொருள்களை ஆயிரக்கணக்கான சிறிய படகுகள் ஏற்றிக் கொண்டு வந்து கரையில் சேர்த்தன. கரையிலிருந்து மாற்றுப் பண்டங்களை ஏற்றிக் கொண்டு போய் மரக்கலங்களில் சேர்த்தன. இவற்றுக்கெல்லாம் சுங்க இறை விதித்து வசூலிக்கும் அதிகாரிகள் பலர் இருந்தனர். அவர்கள் சரிவர வேலை செய்கிறார்களா என்பதை மேற்பார்வை பார்ப்பது சோழ நாட்டுத் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையரின் உரிமையும் கடமையும் அல்லவா?

கள் கூறி, சுந்தர சோழ மன்னருக்குத் தங்கள் நன்றியையும் தெரிவித்தார்கள்.

சில நாளைக்கு முன் இந்த விஹாரத்தைச் சேர்ந்த பிக்ஷுக்கள் இருவர் தஞ்சைக்குச் சக்கரவர்த்தியைப் பார்க்க வந்திருந்தார்கள். புத்த சங்கத்தின் சார்பாகச் சுந்தர சோழர் விரைவில் நோய் நீங்கிக் குணம் அடைய வேண்டும் என்ற வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். அப்போது அவர்கள் இளவரசர் அருள்மொழி வர்மர் இலங்கையில் புத்த தர்மத்துக்குச் செய்து வரும் தொண்டுகளைக் குறித்துத் தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்தார்கள். இடிந்து போன புத்த விஹாரங்களைப் புதுப்பித்துக் கொடுக்கும்படியாக இளவரசர் கட்டளையிட்டு நிறைவேற்றியும் வருவது இலங்கையில் உள்ள புத்த பிக்ஷுக்களின் மகா சங்கத்துக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளித்து வருவதாகவும் அவர்கள் கூறினார்கள். ''சக்கரவர்த்திப் பெருமானே! இன்னும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியும் நாங்கள் கேள்விப் படுகிறோம். இலங்கையின் பழமையான சிம்மாசனத்தைத் தங்களுடைய இளைய திருக் குமாரருக்கே அளித்து இலங்கை அரசராக முடி சூட்டிவிடலாம் என்று பிக்ஷுக்களில் ஒரு பெரும் பகுதியார் கருதுகிறார்களாம்! அவ்விதம் தங்களுக்குள் பேசிக் கொண்டிருக்கிறார்களாம்! இதைக் காட்டிலும் நம் இளவரசரின் பெருமைக்கு வேறு என்ன சான்று வேண்டும்!'' என்றார்கள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பெரிய பழுவேட்டரையரின் உள்ளத்தில் ஓர் அபூர்வமான யோசனை உதயமாயிற்று. பிக்ஷுக்கள் சென்ற பிறகு அதைச் சுந்தர சோழச் சக்கரவர்த்தியிடமும் தெரிவித்தார்.

''மூன்று உலகும் ஆளும் இறைவா! தங்கள் அதிகாரம் எட்டுத் திசையிலும் பரவி நிலைபெற்றிருக்கிறது. இந்தப் பரந்த பூமண்டலத்தில் தங்கள் ஆணைக்



மாமனரான திருக்கோவலூர் மலையமான் தான். அவ்வாறே ஈழ நாட்டிலிருந்து தங்கள் இளம் புதல்வரைத் தருவிக்கும் படியாகத் தாங்கள் பன்முறை சொல்லி விட்டீர்கள். நானும் ஆள் அனுப்பி அனுப்பி அலுத்து விட்டேன். நமது ஆள்கள் இளவரசரைச் சந்தியாதபடியும் நம் ஓலைகள் இளவரசரைச் சேராத படியும் அந்தக் கொடும்பாளூர்ப் பெரிய வேளான் செய்து கொண்டு வருகிறான். இல்லாவிடில், தங்கள் அருமைப் புதல்வர் தங்கள் விருப்பந் தெரிந்த பிறகும் இத்தனை காலம் வராமல் தாமதிப்பாரா? இந் நிலைமையில் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. தாங்கள் கட்டளையிட்டால் அதைத் தெரிவிக்கிறேன்'' என்றார் பழுவேட்டரையர்.

சக்கரவர்த்தி சம்மதம் கொடுத்ததின் பேரில் தனாதிகாரி தெரிவித்தார்: ''இலங்கைச் சிம்மாதனத்தைக் கவர்ந்து முடிசூட்டிக் கொள்ளச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டி இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி கட்டளை பிறப்பித்து அனுப்புவோம். அத்தகைய கட்டளையைப் பூதி விக்கிரமகேசரி தடை செய்ய முடியாது. அன்றியும் இளவரசரிடம் நேரில் எப்படியேனும் கட்டளையைச் சேர்ப்பிக்கச் செய்து விட்டால், இளவரசர் கட்டாயம் வந்தே தீருவார்!''

இதைக் கேட்ட சுந்தர சோழர் புன்னகை புரிந்தார். விசித்திரமான யோசனைதான்; ஆயினும் ஏன் கையாண்டு பார்க்கக் கூடாது? பொன்னியின் செல்வனைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் சக்கரவர்த்தியின் மனதில் பொங்கிக் கொண்டிருந்தது. தம்முடைய அந்திய காலம் நெருங்கிக் கொண்டிருப்பதாக அவர் உணர்ந்தார். ஆகையால் தம் அந்தரங்க அன்புக்குரிய இளங்கோவிடம் இராஜ்யத்தைப்பற்றித் தம் மனோரதத்தை வெளியிட விரும்பினார். மதுராந்தகனுக்கே தஞ்சாவூர் ராஜ்யத்தை அளிக்க வேண்டும் என்ற தம் விருப்பத்தை அறிந்தால் அருள்மொழி வர்மன் மறுவார்த்தை பேசாமல் அதை ஒப்புக் கொள்வான். பின்னர் அவன் மூலமாக ஆதித்த கரிகாலனுடைய மனத்தை மாற்றுவதும் எளிதாயிருக்கும்.

இவ்வாறு சிந்தித்துத் தனாதிகாரியின் யோசனையைச் சக்கரவர்த்தி ஆமோதித்தார். அதன் பேரிலேதான் அருள்மொழி வர்மரைச் சிறைப்படுத்தி வரும்படி கட்டளை அனுப்பப்பட்டது. இளவரசருக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படக் கூடாது என்ற கண்டிப்பான கட்டளையும் மரக்கலத் தலைவனுக்குப் பிறப்பிக்கப்பட்டது.

மேற்கூறிய கட்டளையுடன் இரு மரக்கலங்கள் ஈழ நாட்டுக்குச் சென்ற பிறகு, பெரிய பழுவேட்டரையர் சிறிது



மனக் கவலை கொண்டார். இளவரசருக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால் தனக்குப் பெரும் பழி ஏற்படும் என்பதை உணர்ந்தார். ஆகையால் தாமே நாகைப்பட்டினம் துறைமுகத்துக்கு நேரே சென்றிருந்து இளவரசரைத் தக்கபடி வரவேற்றுத் தமது சொந்தப் பொறுப்பில் அவரைத் தஞ்சாவூருக்கு அழைத்துக் கொண்டு வர விரும்பினார்.

இந்த யோசனைக்கு இன்னும் சில உப காரணங்களும் இருந்தன. இளவரசர் தஞ்சைக்கு வந்து சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்கு முன்னால் செம்பியன்



மாதேவியோ குந்தவையோ அவரைப் பார்க்கும்படி விடக் கூடாது. அந்தப் பெண்கள் இருவரும் இளவரசர் மீது மிக்க செல்வாக்கு உள்ளவர்கள்; பழுவேட்டரையரை வெறுப்பவர்கள். ஆகையால் இளவரசரிடம் ஏதாவது சொல்லி அவர் மனதைக் கெடுத்து விடுவார்கள். தக்க சமயம் வருவதற்குள், அதாவது சுந்தர சோழர் மரணம் அடைவதற்குள், ஏடாகூடமாக ஏதேனும் நடந்து காரியங்கள் கெட்டுப் போகலாம்.

அன்றியும், பொக்கிஷ நிலவறையின் சுரங்க வழிக் காவலன் பின்னாலிருந்து தாக்கி வீழ்த்தப்பட்டதிலிருந்து தனாதிகாரியின் மனதில் ஏதேதோ விபரீத சந்தேகங்கள் உதித்திருந்தன. பொக்கிஷ சாலையில் யாராவது ஒளிந்திருக்கக் கூடுமா? அப்படியானால், அது யாரா யிருக்கும்? தஞ்சைக் கோட்டைக் காவலர்களிடம் அகப்படாமல் தப்பிச் சென்ற வாணர்குல வீரனாயிருக்குமா? அங்ஙனமானால் அவன் இன்னும் பல இரகசியங்களை அறிந்திருக்கக் கூடும் அல்லவா?

சின்னப் பழுவேட்டரையர் கூறுகிறபடி நந்தினியைப் பார்க்க அடிக்கடி வரும் மந்திரவாதிக்கு இதில் ஏதேனும் சம்பந்தம் இருக்குமா? அதையும் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்!

இளைய பிராட்டி குந்தவை தேவிதான் வந்தியத் தேவனை ஓலையுடன் இளவரசர் அருள்மொழி வர்மரிடம் அனுப்பி யிருக்கிறாள் என்னும் செய்தியும் தனாதிகாரியின் மனதைக் கலங்கச் செய்திருந்தது. வந்தியத்தேவன் மூலம் என்ன செய்தி அனுப்பி யிருப்பாள்? தாமும் சம்புவரையர் முதலியவர்களும் சோழ சிம்மாதனத்தைப்பற்றி முடிவு செய்துள்ள யோசனையைப்பற்றி அந்தப் பெண் பாம்புக்குச் செய்தி எட்டி யிருக்குமோ? அதைப் பற்றி ஏதேனும் அவள் எழுதி அனுப்பி யிருப்பாளோ?

எப்படி யிருந்த போதிலும் இளவரசர் சோழ நாட்டின் கரையில் இறங்கியதும் தாம் அவரை முதலில் சந்திப்பதுதான் நல்லது. வந்தியத் தேவனையும் இளவரசருடன் சிறைப்படுத்திக் கொண்டு வரக் கட்டளை யிட்டிருப்பதால் அவனையும் முதலில் தாம் பார்த்தாக வேண்டும். அவனுக்கு என்னென்ன தெரியும், எவ்வளவு தூரம் தெரியும் என்பதையும் கண்டு பிடித்தாக வேண்டும்.

இப்படியெல்லாம் யோசித்துப்பெரிய பழுவேட்டரையர் நாகைப்பட்டினத்துக்குப் போய்க் காத்திருக்கத் தீர்மானித்தார். அவருக்கு இருந்த காரணங்களைக் காட்டிலும் அதிகமாகவே நந்தினி தேவிக்கும் இருந்தன. வந்தியத் தேவனை மறுபடி பார்க்கவும் குந்தவை அவனிடம் என்ன ஓலை கொடுத்து அனுப்பினாள் என்பதை அறிந்து கொள்ளவும் நந்தினி மிக்க ஆவலாயிருந்தாள். மந்திரவாதி ரவிதாஸன் போன காரியம் எவ்வளவு தூரம் வெற்றியடைந்தது என்று அறியவும் ஆர்வம் கொண்டிருந்தாள். ஆகையால் நாகைப்பட்டினத்துக்குத் தானும் வருவதாகக் கூறினாள். கரும்பு தின்னக் கூலி வேண்டுமா? கிழவர் உடனே அதற்கு இசைந்தார். கடலில் கரையோரமாக உல்லாசப் படகில் ஏறி நந்தினியுடன் ஆனந்தப் பிரயாணம் செய்வது பற்றி அவர் மனோராஜ்யம் செய்யலானார். அவர் உள்ளத்தையும் உடலையும் எரித்துக் கொண்டிருந்த தாபம் அதன் மூலம் தீர்வதற்கு வழி ஏற்படலாம் என்றும் ஆசை கொண்டார்.

பழுவேட்டரையரும் நந்தினியும் நாகைப்பட்டினத்திலிருந்தபோது தான் சுழற் காற்று அடித்தது. காற்றின் உக்கிர லீலைகளை நந்தினி வெகுவாக அநுபவித்தாள். கடற்கரையோரத்தில் தென்னை மர உயரத்துக்கு அலைகள் எழும்பி விழுவதைப் பார்த்துக் களித்தாள். ஆனால் கடலில் உல்லாசப் படகில் ஆனந்த யாத்திரை செய்யலாம் என்னும் பழுவேட்டரையரின் மனோராஜ்யம் நிறைவேறவில்லை.

சுழிக் காற்று அல்லோலகல்லோலப் படுத்தி விட்டுப் போன பிறகு கடலிலே கப்பல்களுக்கும் படகுகளுக்கும் சேதம் உண்டா என்பதைப் பற்றிப் பழுவேட்டரையர் விசாரித்து அறிந்தார். கரையோரத்தில் அனைவரும் சுழிக்காற்று வரப் போவதை அறிந்து ஜாக்கிரதையாயிருந்தபடியால் அதிக சேதம் ஏற்படவில்லையென்று தெரிந்தது. ஆனால் நடுக் கடலில், ஈழத்துக்கும் கோடிக் கரைக்கும் நடுவில், இரு கப்பல்கள் தத்தளித்ததாகவும், அவற்றில் ஒன்று தீப்பற்றி எரிந்து முழுகியதாகவும் கட்டு மரங்களில் மீன் பிடிக்கச் சென்றிருந்த வலையர்கள் சிலர் கூறினார்கள். இது பழுவேட்டரையருக்கு மிக்க கவலையை உண்டாக்கிற்று. அந்த இரண்டு மரக்கலங்களும் இளவரசரைச் சிறைப் பிடித்து வந்த கப்பல்களாயிருக்கலாம் அல்லவா? அப்படியானால், இளவரசரின் கதி யாதாகியிருக்குமோ? இளவரசருக்கு ஏதேனும்

நேர்ந்திருந்தால் தனக்குப் பெரும் பழி ஏற்படுமே? சோழ நாட்டு மக்களின் எல்லையற்ற அன்பைக் கவர்ந்தவராயிற்றே அருள்மொழி வர்மர்? மக்களுக்கு அவரைப் பற்றி என்ன சொல்லுவது? சக்கரவர்த்திக்குத் தான் என்ன சமாதானத்தைச் சொல்வது?—நிச்சயமான செய்தி தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் பேராவல் அவருக்கு உண்டாயிற்று. கோடிக் கரைக்குப் போனால் ஒரு வேளை விவரம் தெரியலாம். மூழ்கிய கப்பலை நன்றாய்ப் பார்த்தவர்கள் அங்கே இருக்கக் கூடும். மூழ்கிய கப்பலிலிருந்து தப்பியவர்கள் யாரேனும் கரை சேர்ந்திருக்கவும் கூடும். ஆம்; உடனே கோடிக் கரைக்குப் போக வேண்டியதுதான்!

இந்த எண்ணத்தை நந்தினியிடம் வெளியிட்டதும் அவள் ஆர்வத்துடன் அதை ஒப்புக் கொண்டாள். "கோடிக் கரையை நான் இதுவரையில் பார்த்ததில்லை. அந்தப் பிரதேசம் மிக அழகாயிருக்கும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். இச் சந்தர்ப்பத்தில் அதையும் பார்த்து விடலாம்" என்றாள் நந்தினி.

நாகைப்பட்டினத்திலிருந்து கோடிக் கரைக்கு இரு வழிகள் உண்டு. கடற்கரையோரமாகச் சென்ற நீண்ட கால்வாய் வழியாகப் படகில் ஏறிப் போகலாம். அல்லது சாலை வழியாகவும் போகலாம். பழுவேட்டரையரின் பரிவாரங்கள் அதிகமாயிருந்தபடியால் சாலை வழியாகவே போனார்கள். மேலும் நந்தினி கால்வாய் வழியை விரும்பவும் இல்லை. கால்வாயில் படகில் போனால் பழுவேட்டரையர் தம் காதல் புராணத்தைத் தொடங்கி விடுவார் என்று நந்தினி அஞ்சியது ஒரு காரணம். அது மட்டும் அன்று. சாலை வழியாகச் சென்றால் கடற்கரையோரத்தில் வந்து ஒதுங்கும் கட்டு மரக்காரர்களையும் படகோட்டிகளையும் விசாரித்துக் கொண்டு போகலாம் அல்லவா?

வழியில் அப்படி விசாரித்ததில் புதிய செய்தி ஒன்றும் தெரியவில்லை. நடுக் கடலில் சுழிக்காற்று பலமாக அடித்த சமயம் கப்பல் ஒன்று தீப்பட்டு எரிந்ததைப் பார்த்ததாக மட்டும் இன்னும் சிலரும் கூறினார்கள்.

கோடிக் கரையை அடைந்ததும் கலங்கரை விளக்கத்தின் காவலர் தியாக விடங்கர் தமது எளிய வீட்டைப் பழுவேட்டரையர் தம்பதிகளுக்காக ஒழித்துக் கொடுப்பதாகச் சொன்னார்; அதை ஏற்கும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டார். கோடிக்கரையில் தங்குவதற்கு வேறு மாடமாளிகை கிடையாது. எனினும் நந்தினி அதை மறுத்து விட்டாள். கலங்கரை விளக்கிற்கு அருகில் கூடாரம் போட்டுக் கொண்டு தங்க விரும்புவதாகக் கூறினாள்.

அவ்வாறே கூடாரங்கள் அடிக்கப்பட்டன. சற்றுத் தூரத்தில் ஆங்காங்கு பழுவூர் பரிவாரங்களுக்கும் கூடாரங்கள் போடப்பட்டன.

கூடாரங்கள் அடித்து முடிந்தவுடனே கடலில் ஒரு பெரிய மரக்கலம் காணப்பட்டது. அது கரையோரமாக எவ்வளவு தூரம் வரலாமோ அவ்வளவு தூரத்தில் வந்து நின்றது.

அதைக் கண்டதும் பழுவேட்டரையரின் பரபரப்பு மிகுந்தது. கப்பலின் பாய் மரங்கள் சின்னபின்னமாகியிருந்ததிலிருந்து அது சுழிக்காற்றில் அகப்பட்டிருக்க வேண்டுமென்று தெளிவாயிற்று. அதில் இருப்பவர்கள் யார்? ஒரு வேளை இளவரசராயிருக்கலாமோ? புலிக்கொடி காணப்படாததில் வியப்பில்லை. சுழிக் காற்றில் அது பிய்த்து எறியப்பட்டிருக்கலாம் அல்லவா?

கப்பலண்டை போய்த் தகவல் தெரிந்து கொண்டு வருவதற்காகப் பழுவேட்டரையர் அங்கிருந்த ஒரே ஒரு படகை அனுப்பி வைத்தார். கப்பலிலிருந்தவர்கள் படகுக்காகக் காத்திருந்ததாகத் தோன்றியது. உடனே இருவர் கப்பலிலிருந்து படகில் இறங்கினார்கள். அவர்களில் ஒருவன் பார்த்திபேந்திர பல்லவன்.

வந்தியத் தேவனைக் காப்பாற்றுவதற்காக மரக்கலத்திலிருந்து படகில் இறங்கிச் சென்ற இளவரசர் அருள்மொழி வர்மர் திரும்பக் கப்பலுக்கு வரவேயில்லை அல்லவா?

இதனால் பார்த்திபேந்திரன் எல்லையற்ற கவலைக்கு உள்ளாகித் தத்தளித்தான். காற்று அடங்கிப் பொழுது விடிந்த பிறகு அங்குமிங்கும் கப்பலைச் செலுத்தித் தேடினான். படகில் இளவரசருடன் இறங்கியவர்களில் ஒருவன் மட்டும் குற்றுயிராக அகப்பட்டான். அவன் வந்தியத்தேவனை இளவரசர் மிக்க சிரத்துடன் காப்பாற்றிய பிறகு படகுக்கு நேர்ந்த கதியைச் சொன்னான். இதனால் பார்த்திபேந்திரனுடைய துயரம் பன்மடங்கு ஆயிற்று. ஒரு வேளை கோடிக்கரை சென்று உயிருடன் ஒதுங்கியிருக்கக் கூடாதா என்ற ஆசை ஒரு பக்கத்தில் கிடந்து அடித்துக் கொண்டது.

ஆகவே கோடிக்கரை சென்று விசாரிப்பதென்று தீர்மானித்தான். அதற்காகவே கப்பலை அங்கே கொண்டு வந்து நிறுத்தச் செய்தான். படகில் இறங்கிய பிறகு கரையை நோக்கிப் போக ஆரம்பித்ததும் பெரிய பழுவேட்டரையர் தம் இளைய ராணி சகிதமாக அங்கு வந்திருப்பதை அறிந்து கொண்டான். இது அவனுக்கு மிக்க எரிச்சலை மூட்டியது.

பழுவூர் இளையராணி நந்தினியைப் பற்றி ஆதித்த கரிகாலர் கூறியவையும் நினைவுக்கு வந்தன. அவ்விதம் அந்த மகா வீரரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு அவரைப் பித்துப் பிடிக்க அடித்த மோகனாங்கி எப்படியிருப்பாள் என்று பார்க்கும் சபலமும் அவன் உள்ளத்தின் அடிவாரத்தில் ஒரு மூலையில் எழுந்தது. அந்த விருப்பம் விரைவில் வளர்ந்து கொழுந்து விடத் தொடங்கியது. ஒருவேளை அவளைப் பார்க்க முடியாமற் போய்விடுமோ என்ற கவலையும் உண்டாகி விட்டது.

ஆனால் அந்தக் கவலை நீடித்திருக்கவில்லை. படகிலிருந்து கரையில் இறங்கியதும் நேரே பழுவேட்டரையரின் கூடாரத்துக்குப் பார்த்திபேந்திரனை அழைத்துப் போனார்கள். கூடாரத்தின் வாசலில் பழுவேட்டரையர் கம்பீரமான தோற்றத்துடன் நின்று கொண்டிருந்தார். ஆஜானுபாகுவான அந்த வீராதி வீரரைக் 'கிழவர்' என்று சொல்லுவது எவ்வளவு பெரிய தவறு என்று பார்த்திபேந்திரன் எண்ணினான். அவன் பார்த்திருக்கும் எத்தனையோ இளம் பிராய வாலிபர்களைக் காட்டிலும் அவர் தேகக் கட்டும் மனோதிடமும் வாய்ந்த புருஷ சிங்கமாகக் காட்சி அளித்தார்.

இவ்விதம் அவன் எண்ணிக் கொண்டிருக்கும் போதே கூடாரத்துக்கு உள்ளேயிருந்து மங்கை ஒருத்தி வெளி வந்தாள். மேகங்களுக்குப் பின்னாலிருந்து மின்னல் தோன்றுவது போல் அந்தப் பொன் வண்ணப் பூவை கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் திகழ்ந்தாள். நெடிது வளர்ந்து உரம் பெற்ற தேக்குமரத்தின் பேரில் படர்ந்திருக்கும் அழகிய பூங்கொடியைப் போல் அவள் பழுவேட்டரையருக்கு முன்னால் வந்து நின்றாள். அந்தப் புவன மோகினியைக் கண்டு திகைத்து நின்ற பார்த்திபேந்திரன் பேரில் தனது வேல் விழிகளைச் செலுத்திய வண்ணமாக அவள் "நாதா! இந்த வீர புருஷர் யார்? இவரை நான் இது வரையில் பார்த்ததில்லையே?" என்று சொன்னாள். பொற் கிண்ணத்திலிருந்து அருந்திய மதுபானத்தைப் போல் அவளுடைய கிளி மொழிகள் பார்த்திபேந்திரனைப் போதை கொள்ளச் செய்தன.

அட்டைப்பட விளக்கம்

பொங்கல் இன்று! பொங்கல்! புதுவருஷப் பொங்கல்
மங்கலங்கள் பொங்க மனையிலிடும் பொங்கல்!

பானையுமே பொங்கிப் பால்வடியும் வேளை
வானமேழுக் குரவை வழங்கிவலம் வருவோம்

வாசமிக வீசும் மலரெடுத்து வருவோம்
நேசமொடு தூவி நின்றுதொழு திடுவோம்.

— கவிமணி ...யகம் பிள்ளை

இவ்வாறு பொங்கல் புது நாளில் தமிழ் நாட்டில் லக்ஷக்கணக்கான தாய்மார்கள் காட்சிக்குப் புலனாகும் கதிரவனைப் பாடித் துதிப்பார்கள். இந்த வருஷமாகிலும் அவர்கள் பிரார்த்தனை பலிக்கும் என்று எதிர்பார்ப்போமாக!

நாட்டில் நல்ல மழை பெய்து வயல்கள் விளைய வேண்டும். குளங்களிலும், ஏரிகளிலும், ஆறுகளிலும் தண்ணீர் வற்றாது பெருக வேண்டும். பஞ்சம் பறக்க வேண்டும்; சாந்தியும் சந்தோஷமும் நிலவ வேண்டும்.

இவையெல்லாம் நிறைவேறுவதில் இயற்கையின் பங்கு பெரும் பங்கு. இருப்பினும், மனித முயற்சியின் பங்கு இல்லாமல் போகவில்லை. அந்த மனித முயற்சியின் பங்கை நிறைவேற்றுவதற்குத் தக்க சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அதுதான் பொதுத் தேர்தல்.

ஜனநாயகத்தில், நல்ல கட்சி ஆட்சிப் பீடத்தில் பெருவாரியாக இருந்தால்தான் நல்ல ஆட்சி தேசத்தில் நிலவும். பாரத நாட்டின் இன்றைய நிலையில் மனித குல மாணிக்கமாக விளங்கும் நேருஜியைத் தலைவராகக் கொண்ட காங்கிரஸைத் தவிர ஆட்சிப் பொறுப்பை ஏற்கக் கூடிய கட்சி ஒன்று கூட இல்லை. ஆகவே, பொங்கல் புது நாளன்று நமது அரும் செல்வமான மாட்டுச் செல்வத்துக்குப் பூசனை புரிந்து இரட்டை மாட்டுச் சின்னம் பொறித்த காங்கிரஸ் பெட்டியில் வோட்டுரிமை பெற்ற தாய்மாரும் மற்றவர்களும் தங்கள் வோட்டுக்களைப் போடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.



14

சங்கரர் பாடிய பஜகோவிந்தம் பாட்டில் இதுவும் ஒரு பாட்டு :—

செம்மண் துணியும் முழுதலை மொட்டையும்
அம்மணமும் நீள் சடையும் இன்னும் பல வேஷமும்
கண்டான வயிற்றுக்குப் போடும் பலவேஷம்
கண்ணுறாக் கண்டும் உணரான் இந்த மூடன்.

*
* *

ஜடிலீ முண்டீ லுஞ்சித கேச :
காஷா யாம்பர பஹுக்ருத வேஷ :
பச்யன்னபி ச ந பச்யதி மூட :
உதர நிமித்தம் பஹுக்ருத வேஷ :

துறவு என்பது ஒரு வெளி வேஷமல்ல. அது உள்ளத்தில் நிறைவேற வேண்டிய ஒரு வெற்றி யாகும். ஆயினும் நாம் உலகத்தில் பார்ப்பதென்ன? மழித்தலும் நீட்டலும் மற்றும் பல வெளி வேஷங்களுமே. உள்ளத்தில் எரியும் ஆசைகள் தணியாமலிருந்தால் அவற்றில் ஒரு பயனுமில்லை; துறவு வேஷங்களும் வயிற்றுப் பாடாய் முடிகின்றன. ஏன் வீண் வேஷம் போடுகிறாய், வேண்டாம் என்கிறார் சங்கரர்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

என்றார் குறளாசிரியரும்.

15

முதுமை ஏறிய பின்னரும் ஆசைப் பிண்டம் விட்ட பாடில்லையே என்கிறார்.

நாம்பெல்லாம் நைந்தன மயிரெல்லாம் நரைத்தது
தூங்கு முகமாக்க பல்லிழந்த கிழவன் முகம்
கோலூன்றி நடக்கிறான் தள்ளாடும் கிழவன்
மேலு மேலுமாசை இதற்கென்ன செய்வது
ஐயனே?

*
* *

அங்கம் கலிதம் பலிதம் முண்டம்
தசன விஹீனம் ஜாதம் துண்டம்
வ்ருத்தோ யாதி க்ருஹீத்வா தண்டம்
ததபி ந முஞ்சத் யாசா பிண்டம்

துறவு, சந்நியாஸம் என்பதின் மூல அம்சமான துறத்தல், வெளி வேஷங்களில் இல்லை. உள்ளே வேலை செய்யும் ஆசைகளைத் துறத்தலே துறவு. இதை பகவத் கீதை மூன்றாவது அத்தியாயத்தில் மிகத் தெளிவாக பகவான் சொல்லாகவே பார்க்கலாம். எந்தக் காரியம் செய்து கொண்டிருந்த போதிலும் உள்ளத்தில் துறவு நிலை இருக்க வேண்டும். எந்த வேஷம் போட்டிருந்தாலும் உள்ளே துப்புரவு இருக்க வேண்டும்; இருக்க முடியும்.

இதை ஆராய்ந்து ஆராய்ந்து பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்மை விட மிக சுத்தமும் அறிவும் அவகாசமும்பெற்ற பெரியோர்கள் ஆராய்ந்து சொல்லியிருக்கிறார்கள். பகவானை எந்த ரூபத்திலாவது தியானித்து, தகப்பனாக, அல்லது தாயாக, அல்லது ஆசாரியனாக அல்லது வேறு எந்த விதமாகவோ அன்புடன் தியானித்தால் உள்ளம் துப்புரவு அடையும் என்று. பக்தியின்றி உள்ளத்தில் துறவு ஏற்படாது.

जटिली मुण्डी लुञ्छितकेशः
काषायाम्बरबहुकृतवेषः ।
पश्यन्नपि च न पश्यति मूढः
उदरनिमित्तं बहुकृतवेषः ॥

अङ्गम् गलितम् पलितम् मुण्डम्
दशनविहीनं जातम् तुण्डम् ।
वृद्धो याति गृहीत्वा दण्डम्
तदपि न मुञ्चत्याशापिण्डम् ॥

மாணிக்கவாசகர் பாட்டுக்களைப் படித்துப் பார்த்தால் இது தெரியும். மாணிக்கவாசகரைவிட நாம் அறிவு அடைந்து விடவில்லை. அவர் அறியாத வேதாந்த தத்துவம் இல்லை. அவர் அழுது அழுது பாடியிருக்கிறார் பகவானை, தன்னைப் பெற்ற தாயாக, தகப்பனாக, அதைவிட நெருங்கிய உறவினனாக. மாணிக்கவாசகரைப்போல் நாமும் உருகி அன்பு செலுத்த வேண்டும். செலுத்தினால் ஓரளவு அறிவு பெறுவோம். ஆசைகளை அகற்றும் சக்தி ஓரளவு பெறுவோம்.

படித்துப் பாருங்கள்!

பொய்மான் கரடு

செங்கோடன் செம்பவள வல்லியை நேசித்தான்; அவளும் அவனை நேசித்தாள். சேலம் ஜில்லாவில் ஐந்து ஏக்கரா நிலமும் வற்றாமல் தண்ணீர் சுரக்கும் கேணியும் அவனது பிதுரார்ஜித சொத்து. அந்த வளமான நிலத்தை உத்தேசித்து எத்தனையோ பேர் அவனைக் கல்யாண வலையில் சிக்க வைக்க முன் வந்தனர். ஆனால் செங்கோடன் யாருக்கும் பிடிகொடுக்கவே யில்லை. செம்பாவைக் கல்யாணம் செய்து கொள்ள அவனுக்கு இஷ்டம் தான். ஆனாலும் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தான்.

இந்தச் சமயம்தான் அவன் கண்களில் குமாரி பங்கஜா தென்பட்டாள். அவளைப் பார்த்ததும் செங்கோடன் திகைத்துப் போனான்.

தன்னைப் பார்த்துக்கொண்டே நின்ற அந்தப் பட்டிக்காட்டானைப் பார்த்து அந்தப் பெண், "என்னப்பா, பார்க்கிறாய்!" என்று கேட்டாள்.

செங்கோடனுடைய காதில் கிணுகிணுவென்ற மணி ஒலித்தது. பூங்குயில்களின் கீதம் கேட்டது. உடனே அவன் தன் முகத்தை அஷ்ட கோணலாக்கிக் கொண்டு புன்னகை புரிந்தான். அவளும் புன்னகை புரிந்தாள்.

இந்த நாகரிக நங்கையின் தொடர்பு காரணமாகச் செங்கோடன் கன்னத்தில் அடிபட்டுக் கொள்ளுகிறான்; போலீஸ் 'லாக்கப்'பில் அடைபடுகிறான்; பல காலம் பாடுபட்டுச் சேர்த்த பணத்தை இழக்கிறான்; மீண்டும் அப்பணத்தை அடைகிறான்.

செங்கோடனின் காதல் என்னவாயிற்று! அவன் யாரை மணந்து கொண்டான்! குமாரி பங்கஜாவின் காதலின் கதி யாதாயிற்று! கான்ஸ்டபிள் சின்னமுத்துக் கவுண்டர் இந்தக் கதையில் எப்படி இடம் பெறுகிறார்! செம்பா ஒரு சந்தர்ப்பத்தில் வீராங்கனையாகி வீரச் செயல் புரிந்தது எப்படி! என்பவை போன்ற பல கேள்விகளுக்கு நமது ஒரே பதில் இப்புத்தகத்தைப் படித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள் என்பதுதான்.

இப்புத்தகத்தின் அட்டைப் படம் ஒரு தனிக் கவர்ச்சியைத் தருகிறது.

ஆசிரியர்: கல்கி; பிரசுரம்: பாரதி பதிப்பகம், தியாகராயநகர், சென்னை—17. விலை: ரூ. 3—0—0

தமிழ் வாசகத்தை எளிதில் கற்கும் வழி

"தமிழ் மொழியில் எழுத்துக்கள் அதிகம். ஆகையினால் அதைக் கற்பது சிரமம்" என்று சொல்லுகிறவர்களுக்கு இப்புத்தகம் அது தவறு என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. தமிழ் மொழியைச் சுலபமாகக் கற்கும் வழியையும் நன்கு விளக்குகிறது.

விசேஷ இலக்கணக் குறிப்பு, கட்டுரை எழுதும் விதம், சொற்பொழிவாற்றும் விதம், எழுத்துக்களின் பயிற்சி, உச்சரிப்பு, விளக்கப் படங்கள் முதலிய அம்சங்களுடன் இப்புத்தகம், தமிழ் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் ஏற்றதாயிருக்கிறது.

எழுதியவர்: வி. பெ. சி, வ. பிரகாசம், நிர்வாகி, பாலகுருகுல வித்யாலயம், விருதுநகர். விலை: ரூ 1—8—0.

ஸ்ரீமத் பகவத் கீதை

வேதங்களின் சாராம்சமாக விளங்குவது உபநிஷதங்கள். அந்த உபநிஷதங்களின் கருத்துக்களை வடித்தெடுத்துத் தெளிவு பட விளக்கித் தருவது பகவத் கீதையாகும். அது இந்துக்களின் அரிய பொக்கிஷம். அதற்கு எத்தனையோ வியாக்கியானங்களும் மொழி பெயர்ப்புக்களும் தோன்றியிருக்கின்றன. ஆத்மானுபவத்திலே முன்னேற்றம் அடைவதற்குத் தக்கவாறு பகவத் கீதையின் பொருளும் நன்கு புலனாகின்றது. அவ்வாறு முன்னேறிய பெரியார்கள் பலர் கீதையை நமக்கு விளக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகளைத் தமிழ்நாடு நன்கு அறியும். அவருடைய கீதை உபந்நியாசங்கள் நாட்டின் பல இடங்களிலும் மக்களால் விரும்பிக் கேட்கப் படுகின்றன. அவர் தமது நீண்ட நாள் ஆராய்ச்சியையும் அனுபவத்தையும் கொண்டு பகவத் கீதைக்குத் தமிழ் மொழிபெயர்ப்பும், விளக்க உரையும் அழகாகத் தந்திருக்கிறார்கள். தேவநாகரியில் சுலோகங்களும், தமிழிலே அவற்றிற்குப் பதவுரையும் கொடுக்கப்பட்டுள்ளன. கருத்துக்களை எளிதில் புரிந்து கொள்ளும்படி விளக்க வுரைகளும், ஏற்ற இடங்களில் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங்களிலிருந்து மேற்கோள்களும் தரப்பட்டிருக்கின்றன.

இந்நூலுக்கு ராஜாஜி அழகிய சிறு முன்னுரை தந்திருக்கிறார்கள். அதிலே அவர், "பகவத் கீதையைத் தமிழ் மக்களுக்கு விளக்கித் தரும் பணியை ஸ்ரீ சித்பவானந்த சுவாமிகள் எடுத்துக் கொண்டு நன்றாக நிறைவேற்றி யிருக்கிறார்கள். அவர்கள் செய்து முடித்த நற்பணியை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் என்பது சுவாமிகளால் நிறுவப் பெற்றுள்ள ஸ்தாபனமாகும். அந்த ஸ்தாபனம் குருகுல முறையிலே ஒரு நல்ல உயர்நிலைப் பள்ளியை நடத்தி வருகிறது. இந்த பகவத் கீதை போன்ற அரிய நூல்களையும் வெளியிட்டுப் பணியாற்ற முன் வந்துள்ளது. இதைத் தமிழ் மக்கள் நன்கு பயன்படுத்திப் பயன் பெறுவார்களென நம்புகிறோம்.

கிடைக்குமிடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி. பக்கம் 741. விலை: ரூ. 9—0—0.



சாரதாவின் மனோரதம்

வசு

சாரதா எஸ். எஸ். எல். ஸி. படிக்கும்போது தான் அவளுடைய தகப்பனார் அனந்தய்யர் அவளுக்குக் கல்யாணம் செய்துவைக்கும் முயற்சிகளைத் தொடங்கினார். ஆனால் அவர், அவருடைய மனைவி அகிலாண்டம்மாள், சாரதா இவர்கள் மூவரும் மாறி மாறி வந்த வரன்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது குற்றம் சொல்லி நிராகரித்த காரணத்தால், சாரதாவுக்கு இருபது வயதாகியும் விவாகத்திற்கு வழி பிறக்கவில்லை. கலியாணமாகும் வரை காலேஜிலேயே படித்துக் கொண்டிருக்கட்டும் என்று சாரதாவை அனந்தய்யர் அனுமதித்ததால் அவள் பி. ஏ. பட்டத்துடன் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்தாள். சாரதா பி. ஏ. பாஸ் செய்ததும் அவளுக்குக் குறைந்த பட்சம் ஒரு ஐ. ஏ. எஸ். அல்லது ஐ. பி. எஸ். வரன், அதுவும் இல்லாவிட்டால் ஒரு எம். ஏ. பட்டம் பெற்றுப் பெரிய உத்தியோகத்திலிருக்கும் ஒரு வரன் கஷ்டமில்லாமல் குதிர்ந்துவிடும் என்று அனந்தய்யர் மனக் கோட்டை கட்டினார். ஆனால் அவருடைய அபிலாஷையை நடைமுறைக்குக் கொண்டு வர அவர் முயற்சித்தபோதுதான் உண்மை நிலைமையை அறிந்துகொண்டார். பெண் பி. ஏ பட்டதாரி என்ற தைரியத்தில் 'பெரிய' வரன்களைப் போய்ப் பார்த்தார் அனந்தய்யர். ஆனால் அந்த வரன்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய அந்தஸ்துக்கு இழுக்கு வராத வண்ணம் பெரிய தொகைகளை வரதட்சிணையாக நேரடியாகவும் மறைமுகமாகவும் கேட்க ஆரம்பித்தபோதுதான் அனந்தய்யரின் மனசில் எழும்பியிருந்த ஆகாசக் கோட்டை கலகலக்க ஆரம்பித்தது. சாரதாவுக்கு வயது அதிகமாக அதிகமாக அனந்தய்யர் அவளுக்கு வரவிருக்கும் வரனுடைய யோக்யதாம்சங்களைப் பற்றிப் போட்டிருந்த நிபந்தனைகளை மாற்றி மாப்பிள்ளைப் பையன் பி. ஏ. யாவது பாஸ் செய்திருந்து ஒரு சிறிய குடும்பத்தை நடத்தப் போதுமான வருவாய் இருந்தால் போதும் என்ற முடிவுக்கு வந்தார். இந்த அடிப்படையில் சில பையன்களைப் போய்ப் பார்த்தார். அவர் கூறியவை எல்லாவற்றையும் கேட்டுவிட்டு ஒவ்வொரு பையனும் கடைசியாக "எனக்கு எதுக்கு ஸார், பி.ஏ. படித்த பெண்! அவளுக்குத் தகுந்த ஒரு ஐ. ஏ. எஸ். அல்லது ஐ. பி. எஸ். புருஷனைப் பார்த்துக் கலியாணம் செய்து வையுங்கள்" என்று அனந்தய்யருக்கு இலவசமாக யோசனை சொல்லிவிட்டு நழுவிக்கொண்டு போய் விட்டார்கள். சாரதாவின் பி. ஏ. பட்டம் அவளுக்கு ஒரு அணிகலமாக இருப்பதற்கு மாறாக அவள் கலியாண சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு அனர்த்தமாக இருந்ததை எண்ணி ஏங்க லானார் அனந்தய்யர்.

அவர் ஏக்கம் துக்கமாகப் பரிணமிக்கு முன் பி. ஏ. பாஸ் செய்துவிட்டுச் சென்னையில் ஒரு கம்பெனியில் மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் ஹெட் கிளார்க்காக இருந்த பரசுராமன் சாரதாவைத் தன்னுடைய சகதர்மிணியாக ஏற்றுக்கொள்ள முன் வந்தான். வந்த வரனை அனந்தய்யர் ஆர்வத்தோடு அங்கீகரித்து சாரதாவையும் அவர் மனைவி அகிலாண்டம்மாளையும் சரிக்கட்டி, ஒரு சுப முகூர்த்தத்தில் சாரதாவுக்கும் பரசுராமனுக்கும் விவாகத்தை நடத்தி வைத்தார். சாரதாவின் மனத்திற்குள் தன் படிப்புக்குத் தக்க பெரிய உத்தியோகஸ்தனாகப் பரசுராமன் இராதது ஒரு குறையாகத்தான் இருந்தது.

கலியாணம் முடிந்ததும் தன்னுடன் சாரதாவை அழைத்துக் கொண்டு போய்ச் சென்னையில் தனிக் குடித்தனம் நடத்த ஆரம்பித்தான் பரசுராமன். நல்ல வேளையாகப் பரசுராமனுக்கு, கிட்டின பந்து என்று சொல்லக்கூடிய அவனுடைய அத்தை கிராமத்திலிருந்து சென்னைக்கு வந்து அவனுடன் இருக்க விரும்பவில்லை. இது பரசுராமனுக்கு ஒரு விதத்தில் சௌகரியமாயிருந்தது. படித்த பெண் என்ற காரணத்தால் சாரதாவுக்கு வேண்டிய சலுகைகள் கொடுத்திருந்தான் பரசுராமன். பொழுது போக்கிற்காக அவள் 'லேடிஸ் கிளப்'பில் அங்கத்தினராகச் சேரவேண்டுமென்று விரும்பிய போது, பரசுராமன் அதனால் ஏற்படும் செலவுக்கு அவனுடைய பொருளாதார நிலைமை இடங் கொடுக்காத போனாலும், சாரதாவின் இஷ்டத்திற்கு இணங்கினான்.

சுமுகமாகப் போய்க் கொண்டிருந்த பரசுராமனின் இல் வாழ்க்கையில் திடீரென்று ஒரு சிக்கல் ஏற்பட்டது. அவர்கள் இருவரில் யாராவது ஒருவர் சற்று விட்டுக் கொடுத்திருந்தால் நிலைமை முற்றியிராது. இருவரும் அவர்கள் உரிமையையே முக்கியமாகக் கருதிக் கடமையை மறந்து விட்டார்கள். அப்போது நடந்தது இதுதான்.

*

மலேயாவில் பெரிய பதவியிலிருந்த பரசுராமனின் தாய்மாமன் மகாதேவய்யர் சென்னைக்கு லீவில் வருவதாக எழுதியிருந்தார். அவருக்குக் குழந்தை குட்டிகள் கிடையாது. பரசுராமனிடம் அதிக வாஞ்சையாயிருந்தார். அவருடைய சொத்துக்கு அவனை வாரிசாக நியமனம் செய்யும் அளவுக்கு அவனிடத்தில் பிரியம் இருந்தது அவருக்கு. ஏதோ சில அசந்தர்ப்பங்களால் பரசுராமனின் கலியாணத்துக்கு அவரால் வரமுடியவில்லை. ஆனாலும் கலியாணத்திற்கு ஒரு விலை உயர்ந்த பரிசை அவருடைய ஆசிகளுடன் அனுப்பி வைத்திருந்தார். தான் குடும்பம் நடத்த ஆரம்பித்தபின் முதன் முதலாக வரும் அவரைத் தகுந்த விதத்தில் வரவேற்று விருந்து செய்து வைத்து, அவருடைய நல்லெண்ணத்தை மேலும் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்று திட்டம் போட்டிருந்


தான் பரசுராமன். அதைச் சாரதாவிடமும் சொல்லியிருந்தான். குறிப்பிட்ட ஒரு நாள் காலை அவர் கப்பல் மூலமாகச் சென்னைக்கு வந்து சேருவதாகப் பரசுராமனுக்கு அறிவித்திருந்தார். ஆனால் அவர் கடைசி நிமிஷத்தில் அவருடைய திட்டத்தை மாற்றி ஆகாய விமானம் மூலமாக ஒரு நாள் முன்னதாகவே பிற்பகலில் சென்னை வந்து சேர்ந்தார். நேராக, பரசுராமன் வேலையாயிருந்த ஆபீசுக்குப் போனார். பரசுராமன் லீவு வாங்கிக் கொண்டு அவருடன் டாக்ஸியில் வீடு போய்ச் சேர்ந்தான். வீட்டுக்குப் போனதும் வாசல் கதவு பூட்டியிருந்தது. நல்ல வேளையாக அவனிடம் மறு சாவி இருந்தது. அதை வைத்து வீட்டைத் திறந்து மகாதேவய்யரின் தேவைகளைக் கவனிக்க ஆரம்பித்தான். குளிப்பதற்கு அவருக்கு வெந்நீர் போட்டுக் கொடுத்தான். பிறகு வேண்டிய சிற்றுண்டியையும் காப்பியையும் ஹோட்டலுக்குப் போய் வாங்கிக் கொண்டு வந்தான். பிறகு இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். மூன்று மணிக்கே அவர்கள் இருவரும் வந்திருந்தும் மணி ஆறுவரை சாரதா வெளியிலிருந்து திரும்பவில்லை. இது பரசுராமனுக்குப் பெரிய ஏமாற்றமாயிருந்தது. சாரதா அவ்வளவு நேரம் வீட்டில் இல்லாததற்கு ஏதோ அவனுக்குத் தெரிந்த வகையில் மாமாவுக்குச் சமாதானம் சொன்னான். அன்றிரவு எட்டுமணி ரயிலுக்கே அவர் திருவனந்தபுரம் போகவேண்டியிருந்ததால், மறுபடியும் அவருக்கு ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்து அவரைச் சாப்பிடச் செய்து டாக்ஸி அமர்த்தி அவரை எழும்பூர் ஸ்டேஷன் வரை போய் ரயிலேற்றிவிட்டு வந்தான். சாரதா மணிக்கணக்காக வீட்டில் இல்லாததும், அதுவும் முக்கியமான விருந்தினர் ஒருவர் வந்திருந்தபோது அவள் கூட இருந்து வந்தவரை உபசரிக்காமல் போனதும் பரசுராமனுக்கு மிகுந்த ஆத்திர மூட்டியது. அந்த ஆத்திரத்துடனேயே வீட்டுக்குத் திரும்பினான்.

இதற்கிடையில் மூன்று மணிக்கே வீட்டை விட்டு வெளியே போயிருந்த சாரதா நேராக லேடீஸ் கிளப்புக்குப் போய்ச் சேர்ந்து அங்கு கொஞ்சநேரம் பத்திரிகைகளைப் படித்துவிட்டு, அங்கு வந்திருந்த சிநேகிதிகளுடன் பேசிக் கொண்டிருந்தாள். பின் நான்கு மணி சுமாருக்கு வீட்டுக்குக் கிளம்பும்போது அவளுக்குச் சற்று அதிகப் பரிச்சயமான கல்யாணி கனகசபேசன் அவளைத் தன் பங்களாவரை வந்து விட்டுவிட்டுப் போகும்படி அழைத்தாள். சாரதாவும் அவளுடன் காரில் ஏறிக்கொண்டு கல்யாணியின் வீட்டை அடைந்தாள். தன்னுடைய பங்களாவையும், அதைச் சுற்றியிருந்த தோட்டத்தையும், சொகுசான வாழ்க்கை நடத்த அவள் கணவன் கனகசபேசன் அவளுக்காக ஏற்பாடு செய்திருந்த வசதிகளையும் பெருமையாக எடுத்துக் காட்டிப் பெருமை யடித்துக் கொண்டே போனாள் கல்யாணி. சுவரில் இருந்த கடிகாரம் மணி ஏழடித்ததும்தான் சாரதாவுக்குத் தன் வீட்டின் ஞாபகம் வந்தது. ரொம்பவும் காலம் தாழ்ந்து விட்டதை யுணர்ந்தாள். உடனே பரபரப்புடன் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டாள். கல்யாணியின் வீட்டுக்குள் நுழையும்போது நிஷ்களங்கமாக இருந்த சாரதாவின் உள்ளத்தில் அதிருப்தி அழுக்குப் பற்றிக் கொண்டது. கல்யாணி, சாரதாவைப்போல் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவள் அல்ல, அவ்வளவு அழகியுமல்ல, ஏன் சாதாரணமான புத்திசாலிகூட இல்லை அவள். ஆனாலும் அவள் கணவன் கனகசபேசன் பெரிய உத்தியோகத்திலிருந்தான். நிறையச் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தான். அதே காரணத்தால் கல்யாணியும் ஆடம்பரமான வாழ்க்கை நடத்த ஏதுவாயிருந்தது. இந்த எண்ணங்கள் சாரதாவின் மனத்தில் சுழன்று கொண்டிருந்தன. அதன் விளைவாகக் குறைந்த சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த பரசுராமனைத் தன் பதியாக அடைந்ததை எண்ணி அவள் மனத்தில் என்றுமில்லாத ஒரு வேதனையும் ஒரு விரக்தியும் இடம் பெற்றுவிட்டன.

சாரதா வீட்டை அடைந்ததும் அவளுக்கு முன்னமேயே ரயில்வே ஸ்டேஷனிலிருந்து திரும்பி வந்திருந்த பரசுராமன், சாரதாவைக் கண்டதும், "இன்று மலேயாவிலிருந்து என்னுடைய மாமா வந்திருந்தார். மத்தியானம் மூன்று மணிக்கு என் ஆபீசுக்கு வந்த அவரையும் அழைத்துக்கொண்டு இங்கே வந்தேன். உன்னைக் காணவில்லை. இப்பொழுதுதான் அவரைத் திருவனந்தபுரத்திற்கு ரயிலேற்றி அனுப்பிவிட்டு வருகிறேன். அவர் வந்திருந்த சமயத்தில் முக்கியமாக வீட்டில் இருக்கவேண்டியவளான நீ, இல்லாமல் போய் விட்டாய். அதை அவர் என்னிடம் ரயிலடியில் மறைமுகமாகச் சொல்லிக் காட்டினார்!" என்றான் மனத்தாங்கலுடன்.

"நாளைக்கு வரவேண்டிய உங்கள் மாமா இன்றைக்கே வந்து குதிப்பார் என்று எனக்கு ஜோசியமா தெரியும்!" என்று இடக்காகப் பதிலளித்தாள் சாரதா.

பரசுராமனின் மனத்தில் இந்த அவமரியாதையான பதில் 'சுருக்'கென்று தைத்தது. உண்மையிலேயே தான் அந்தச் சந்தர்ப்பத்தில் வீட்டில் இல்லாமல் போனதற்குச் சாரதா வருத்தம் தெரிவிப்பாள் என்று எதிர்பார்த்திருந்த பரசுராமன் இந்தப் பதிலைக் கேட்டதும் ஆத்திரமடைந்தான்.



" என்னங்க... இந்த ரேடியோவிலே மூணு குழாய் எதுக்காக வைச்சிருக்காங்க?"

" அதுவா தம்பி!... ஒண்ணு பாகவதருக்கு, இன்னொண்ணு பிடில்காரருக்கு, மூணாவது மிருதங்கக்காரருக்கு!"



"ஆமாம்; வழக்கமாக ஐந்து மணிக்குமேல் 'லேடீஸ் கிளப்'புக்குப் போகும் உனக்கு, இன்று மூன்று மணிக்கே அங்கு என்ன வேலை!" என்றான்.

"கிளப்பில் வேலை இருந்ததோ இல்லையோ, போக வேண்டுமென்று தோன்றியது போனேன்" என்றாள் சாரதா.

"உன் இஷ்டப்படி வீட்டைப் பூட்டிக்கொண்டு வேலையில்லாத வேளையில் 'கிளப்'புக்குக் கிளம்பிக் கொண்டிருந்தால், குடித்தனம் எப்படி உருப்படும்! இதே ரீதியில் நீ இன்னமும் போய்க் கொண்டிருந்தால் உனக்கும் எனக்கும் சரிப்பட்டு வராது!" என்றான் பரசுராமன் கண்டிப்பான குரலில்.

"அறுபது நாழிகையும் வீட்டுடன் அடைத்துக் கிடக்க நான் கிராமத்தில் வளர்ந்த பெண் அல்ல! இதை நீங்கள் மறந்து விடவில்லையே!" என்றாள் சாரதா.

பரசுராமன் பதிலுக்கு "உன் இஷ்டப்படி இருக்க, நீ குறைந்தது ஒரு கலெக்டரையோ அல்லது பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தரையோ கலியாணம் செய்து கொண்டிருக்க வேண்டும். என் நிலைமை தெரிந்து நீ என்னை ஏற்றுக் கொண்டபின் என் சௌகரியத்தையும் அனுசரித்துத்தான் நீ நடந்தாக வேண்டும்!" என்றான் வெகுண்டு.

"எப்பொழுதுமே உங்கள் சௌகரியம், உங்கள் இஷ்டம், உங்கள் ஆணை இவைகளின் பெயரால் என் சிறிய உரிமைகளில் நீங்கள் தலையிடுவதை நான் சகிக்கவே முடியாது!" என்றாள் சாரதா படபடப்புடன்.

பரசுராமன் சிதாள மிழந்தான். "உன் இஷ்டப் படி நடந்துகொள்ள உனக்கு இங்கே இட மில்லை!" என்றான்.

"சரி, அப்படியானால் நான் இப்பொழுதே வெளி யேறி விடுகிறேன். நானும் நாலெழுத்துப் படித் திருக்கிறேன். அதைப் பயன்படுத்தி இரண்டு காசு சம்பாதித்து மானமாக வயிறு வளர்க்க எனக்குத் தைரியம் உண்டு!" என்றாள் சாரதா.

"போகட்டும். உன் தகப்பனார் புத்திசாலி. அவருடைய அருமைப் பெண்ணின் குணத்தை அறிந்து முன்னெச்சரிக்கையாக பி. ஏ. வரைக்கும் படிக்க வைத்திருக்கிறார்!" என்றான் பரசுராமன் ஏளனம் கலந்த வெறுப்புடன்.

இதைத் தொடர்ந்து அன்றிரவு ரயிலிலேயே தன் பிறந்தஊரான திருச்சிக்குப் பிரயாணமானாள்.

2

சாரதா வீட்டை விட்டு வெளியேறினதைப் பற்றிப் பரசுராமன் அதிகமாகப் பொருட்படுத்த வில்லை. ஆனாலும் அவன் மனம் அமைதியை அடைந்ததும், சாரதா சற்றும் எதிர்பார்க்காத சமயத்திலே மலேயாவிலிருந்து தன் மாமா வந் திருந்தபொழுது அவள் வீட்டில் இல்லாமல் போன தற்காக அவளுடன் சண்டை போட்டது விவேகம் தானா என்று தன்னைத் தானே கேட்டுக் கொண் டான். சாரதாவை 'லேடீஸ் கிளப்'பில் அங்கத்தின ராகச் சேருவதற்கு அனுமதி யளித்துவிட்டு அவள் விரும்பியபொழுது ஒவ்வொரு சமயம் போவதைத் தடை செய்வது சரியல்ல என்று பரசுராமனின் அறிவு எடுத்துக் காட்டியது அவனுக்கு. இருந் தாலும் சாரதாவிடமிருந்து ஏதாவது கடிதம் வரு கிறதா என்று கொஞ்ச நாள் பொறுத்திருந்து பார்த்துவிட்டு, பிறகு நேரில் திருச்சிக்குப் போய் அவளிடம் பேசி அழைத்துக் கொண்டு வரலா மென்ற முடிவுக்கு வந்தான் பரசுராமன்.

பிறந்தகத்துக்கு வந்த சாரதாவும் தான் பரசு ராமனிடம் மனஸ்தாபம் காரணமாக வந்ததைப் பெற்றோர்களிடம் தெரிவிக்கவில்லை. தான் தன் னுடைய போக்கிற்கு வருத்தம் தெரிவித்தால் இயற்கையிலேயே இளகிய இதயம் படைத்த பரசுராமன் தன்னை உடனே திரும்பி வரும்படி எழுதுவான் என்று அவளுடைய உள்ளுணர்வு உணர்த்தியது. இருந்தாலும் அவள் மனத்தில் தோன்றியதைச் செயலில் கொண்டு வருவதற்கு அவளுடைய வறட்டு ஜம்பம் குறுக்கே நின்றது. சாரதா பிறந்தகத்துக்கு வந்து ஒரு மாதத்திற்கு மேலாகியது. அவள் புருஷனிடமிருந்து அதுவரை அவளுக்கு ஒரு கடிதம் கூட ஏன் வரவில்லை என்று விசாரிக்க ஆரம்பித்தார்கள், அனந்தய்யரும் அகி லாண்டம்மாளும். சாரதா அவள் யுக்திக்கு எட்டின வகையில் ஏதோ பதில் சொல்லித் தன் பெற்றோர் களைச் சமாதானப் படுத்தினாள். இருந்தாலும் உண்மை ஒருநாள் தெரிந்தால் என்ன செய்வது என்று அவளால் சிந்தித்துப் பார்க்கக்கூட முடிய வில்லை. அவள் உள்ளம் ஒரு நிலையில் இல்லாமல் அலை பாய ஆரம்பித்தவுடன் அவளுக்கு வீட்டி லேயே இருக்கவும் பிடிக்கவில்லை. வெளியில் போய்ச் சுற்றி வரவும் மனத்தில் உற்சாகமில்லை.

இந்நிலையில் தான் ஒருநாள் அவள் கவலையை மறந்து சில மணி நேரமாவது இருக்கலாமென்று நினைத்து மாலை நேரத்தில் ஏதாவது ஒரு சினிமா வுக்குப் போய்விட்டு வரலாமென்று கிளம்பினாள். கடைத்தெருவுக்குள் நுழைந்ததும் அவளைப் பரிச் சயமான பெண் குரல் ஒன்று பெயர் சொல்லி அழைத்ததும் திரும்பிப் பார்த்தாள். அவளை அவ்விதம் அழைத்தவள் ஒருவருமில்லை, சென்னை யில் சாரதா சேர்ந்திருந்த லேடீஸ் கிளப்பில் மெம்பராக இருந்த மைதிலிதான். மைதிலியைக் கண்டதும் சாரதா "என்ன மைதிலி, இந்த ஊருக்கு வந்துமா என் வீட்டிற்கு வராமலிருந்தாய் இத்தனை

னாளாய்!'' என்றாள். அதற்கு மைதிலி "என் அண்ணாவை இந்த ஊருக்கு மாற்றி ஒரு மாதம் ஆகிறது. நேற்றுத்தான் அவருடைய குழந்தைக்கு ஆண்டு நிறைவு விழா. அதற்காக நானும் என் புருஷரும் நேற்றுத்தான் பட்டணத்திலிருந்து வந்தோம். இன்று இரவு ரயிலுக்குப் போவதற்கு முன் சில சாமான்கள் வாங்கக் கடைத் தெருப் பக்கம் வந்தேன்'' என்றாள் மைதிலி.

''என் வீடு பக்கத்தில்தான் இருக்கிறது. வாயேன். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போகலாம்'' என்றாள் சாரதா.

''இல்லை சாரதா, என்னை மன்னித்துவிடு. நான் இதோ இந்த ஜவுளிக்கடையில் இருப்பதாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். என்னைத் தேடிக் கொண்டு அண்ணாவும் என் அகத்துக்காரரும் இங்கே வருவார்கள்'' என்றாள் மைதிலி. பிறகு ஏதோ ஞாபகம் வந்தவள்போல் "ஆமாம்; நீ பட்டணத்திலிருந்து புறப்பட்டு வரும்போது நம்முடைய கிளப்பு மெம்பர்கள் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டாய்போல் இருக்கிறதே!'' என்று கேட்டாள்.

''ஏதோ திடீரென்று புறப்பட வேண்டியிருந்தது. சீக்கிரம் திரும்பி விடலாமென்று நினைத்தேன். ஆனால் அதிக நாள் தாமதமாகி விட்டது. நீ பட்டணத்திற்குப் போனதும் நம்முடைய சிநேகிதிகளிடம் நான் அவர்களைப் பற்றி விசாரித்ததாகச் சொல்லு!'' என்றாள் சாரதா.

''சாரதா, உன்னிடம் முக்கியமான தகவல் ஒன்று சொல்ல மறந்தே போய்விட்டேன். பாவம், நம்முடைய கல்யாணிகனகசபேசன் அவள் புருஷனுடன் சண்டை போட்டுக் கொண்டு பிறந்தகம் போய்விட்டாள்'' என்றாள் மைதிலி.

''என்ன, கல்யாணியா!'' என்று வினவினாள் சாரதா ஆச்சரியத்தோடு.

''ஆமாம், அவள் நிலைமையை நினைத்துப் பார்த்தால் கூட மனத்திற்குக் கஷ்டமாயிருக்கிறது. அவள் புருஷன் கனகசபேசன் அவருடன் காலேஜில்படித்துப் பட்டணத்திலேயே உத்தியோகமாகவிருக்கும் ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தாராம். இந்த விவரம் கல்யாணிக்குப் போன மாதம்தான் தெரிந்ததாம். அவள் புருஷனிடம் இதைப் பற்றி அவள் கேட்டபோது, அது அவருடைய சொந்த விஷயமென்றும் இதைப் பற்றிக் கேட்க கல்யாணிக்கு அதிகாரமில்லை என்றாராம். அவருடைய நடத்தை சரியில்லையென்றும் அதைத் திருத்தத் தனக்கு உரிமை உண்டு என்றும் எதிர் வாதாடினாளாம் கல்யாணி. அதற்கு அவர் தன்னுடைய போக்கை அனுமதித்து, கல்யாணி இருக்க சம்மதப்பட்டால் இருக்கலாமென்றும் இல்லாவிட்டால் பிறந்த வீட்டிற்குப் போய்விடலாமென்றும் சிர்த்தாட்சண்யமாகச் சொல்லி விட்டாராம். கல்யாணி அதிர்ஷ்டசாலி என்று நீ அடிக்கடி சொல்லுவாயே. இப்பொழுது பார்த்துக் கொள், அவள் அதிர்ஷ்டத்தை. அவள் புருஷன் நல்ல படிப்பாளி. பெரிய உத்தியோகஸ்தர். இருந்தாலும் அவருடைய நடத்தையைப் பாரேன்!'' என்று சொல்லி முடித்தாள் மைதிலி.

மைதிலி சொன்ன வரலாற்றைக் கேட்டதும் சாரதாவின் உடல் சிலிர்த்தது. அவள் தலை ஒரு கணம் கிறுகிறுத்தது. கல்யாணியைப்போல் தனக்கும் பெரிய உத்தியோகஸ்தன் புருஷனாக வாய்க்கவில்லையே என்று அவள் அநேக தடவை ஏங்கியதுண்டு. அதே காரணத்தால் பரசுராமனிடத்தில் அவளுக்கு இயற்கையாக இருக்க வேண்டிய பாசம் மங்க ஆரம்பித்தது. இவையெல்லாம் இப்பொழுது நினைவுக்கு வந்து அவள் உள்ளத்தை உலுக்கியது. அதனால் அவள் வாயில் வார்த்தை வராமல் போகவே மௌனமாக இருந்தாள்.

''என்ன சாரதா! ஒரே அடியாகத் திகைத்து விட்டாயே! கல்யாணியைப் பற்றி நீயும் நானும் கவலைப் பட்டு என்ன பயன்! அவள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். நான் வருகிறேன். ஜவுளிக்கடை வாசலில் எனக்காக அவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள்!'' என்று சொல்லி மைதிலி விடைபெற்றுக் கொண்டு போனாள்.

கலங்கியிருந்த சாரதாவின் மனத்தைத் தெளிய வைக்கும் மருந்தாக அமைந்தது மைதிலியின் பேச்சு. அதே விநாடியில் சாரதா ஒரு முடிவுக்கு வந்தாள். உடனே வீட்டிற்குத் திரும்பிப் போய் நடந்துபோன சம்பவங்களுக்காகத் தன்னை மன்னித்து விடும்படியும், உடனே புறப்பட்டு வருவதற்கு அனுமதி கொடுக்கும்படியும் பரசுராமனுக்கு ஒரு கடிதம் எழுதி விடுவது என்று தீர்மானித்தாள். உடனே வீட்டுக்கு விரைந்தாள். வீட்டிற்குள் நுழைந்ததும் நுழையாததுமாக அவளுடைய தாயார் அகிலாண்டம்மாள், "சாரதா, நீ எங்கே போய்விட்டாய்! உன் புருஷன் பரசுராமன் சாயங்கால ரயிலில் பட்டணத்திலிருந்து வந்திருக்கிறான். அவனை வரவேற்க நீயும் இல்லை; உன் அப்பாவும் எங்கேயோ வெளியில் போய்விட்டார். பரசுராமன் மாடியில் இருக்கிறான்'' என்றாள்.

''உண்மையாகவா, அம்மா!'' என்று குரலில் ஆர்வம் பொங்கச் சொல்லிக் கொண்டே மாடிப்



"கோடி விட்டு ராமு, என்னை 'மரமே! மட்டையே! நீவட்டியே! எலெக்ஷன் சின்னமே!' என்று வையறான், தாத்தா!"

படியை நோக்கி ஓடினாள் சாரதா. அவளுடைய தாயார், "சாரதா! இந்தக் காப்பியையும் டிபனையும் எடுத்துக் கொண்டு போ" என்று சொல்லி அவள் கையில் அவைகளைக் கொடுத்தனுப்பினாள். அவைகளை எடுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றாள் சாரதா. அங்கே சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான் பரசுராமன். சாரதாவைக் கண்டதும் எழுந்திருந்து அவள் கொண்டு வந்த பட்சணத் தட்டையும் காப்பியையும் தன் கையில் வாங்கிக் கொண்டு, "சாரதா, நான் கோபத்தில் கூறியதைப் பெரிதாக எண்ணிக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டு வந்து ஒரே அடியாக இருந்து விட்டாயே! உண்மையிலேயே நான் அன்று உன் மனம் நோகும்படி பேசியிருக்கக் கூடாது தான். இதை நேரில் சொல்லி உன்னை அழைத்துக் கொண்டு போகலாம் என்றுதான் வந்தேன்" என்றான் பரிவுகலந்த குரலில்.

பரசுராமனின் பெருந்தன்மையைக் கண்டதும் சாரதாவின் நெஞ்சம் நெகிழ்ந்தது. அவள் கண்களில் நீர் துளித்தது. "நான்தான் உங்கள் மானமும் கௌரவமும் பாதிக்கும் விதத்தில் நடந்து கொண்டு விட்டேன். நீங்கள்தான் என்னை மன்னிக்க வேண்டும்!" என்றாள் சாரதா.

"சாரதா, போனதைப் பற்றி வருத்தப் படாதே! உனக்கு ஒரு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன். இந்த மாதம் முதல் தேதி முதல் என்னை எங்கள் ஆபிசில் மாதம் அறுநூறு ரூபாய் சம்பளத்தில் அஸிஸ்டெண்ட் மானேஜராக நியமித்திருக்கிறார்கள். இனி மேல் நீ சாதாரண ஹெட் கிளார்க்கின் அகமுடையாள் இல்லை; ஒரு உயர்ந்த உத்தியோகஸ்தரின் மனைவி!" என்றான்.

சாரதாவுக்கு ஆச்சரியத்தினால் மூச்சே நின்று விடும்போலிருந்தது. ஆனாலும் சட்டென்று அவளுடைய முகபாவம் மாறியது. காரணம் அப்பொழுது கல்யாணியின் புருஷனுடைய நடத்தையைப் பற்றி மைதிலி சொன்னது ஞாபகத்திற்கு வந்ததுதான். பெரிய பதவிக்கு வந்திருக்கும் கணவன் பரசுராமனும் அதே மாதிரி விபரீதமாக நடக்கத் தலைப்பட்டால்......என்று நினைத்தது அவள் உள்ளம் ஒரு விநாடி.

"என்ன சாரதா, ஏதோ மாதிரியிருக்கிறாய்! எனக்குப் 'பிரமோஷன்' கிடைத்ததில் உனக்கு சந்தோஷமில்லையா!" என்றான் பரசுராமன் அவளை உற்று நோக்கிய வண்ணம். 'என்ன யோசனை' என்றான் மறுபடியும் பரசுராமன்.

பரசுராமனின் வற்புறுத்தலின் பேரில் சாரதா தன் சிநேகிதி கல்யாணி கனகசபேசனுக்கு நேர்ந்த கதியைத் தெரிவித்து விட்டுத் தன் பயத்தையும் மறைமுகமாக வெளியிட்டாள். எல்லாவற்றையும் கேட்ட பரசுராமன் "உன்னைப் போல ஒருத்தி எனக்கு மனைவியாக வாய்த்து என் மனம் முழுவதையும் அவள் அன்புக்கு அடிமையாக்கிக் கொண்ட பிறகு, கனவிலும் கூட நான் நிலைதவறி நடக்க முடியுமா, சாரதா!" என்றான்.

அப்பொழுது பதிலுக்கு சாரதா பரசுராமனைப் பார்த்த பார்வை 'என்னைப் போல பாக்கியசாலி வேறு ஒருவரும் இருக்க மாட்டார்கள்' என்று சொல்லுவது போலிருந்தது. சாரதாவின் மனம் ஒரு நிலைக்கு வந்ததும்தான் பரசுராமன் அதுவரை தட்டிலுள்ள பட்சணத்தையும் காப்பியையும் சாப்பிடாததை அறிந்தாள். அதைச் சுட்டிக் காட்டியதும் பரசுராமன் சிரித்துக் கொண்டே டிபனைச் சாப்பிட்டு முடித்தான்.

இதற்குள் சாரதாவை அகிலாண்டம்மாள் கீழே இருந்து அழைக்கவே சாரதாவும் பரசுராமனும் இறங்கி வந்தார்கள். அவர்களுக்கு அங்கே ஒரு ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது. பரசுராமனின் மாமா மகாதேவய்யர் வாசலில் வந்திருந்த டாக்ஸியிலிருந்து இறங்கி உள்ளே நுழைந்தார். "வாருங்கள் மாமா!" என்று எதிர்கொண்டழைத்தான் பரசுராமன்.

"அட, நீயும் இங்கு வந்திருக்கிறாயா!" என்று தன் ஆச்சரியத்தைத் தெரிவித்துவிட்டு, "திருவனந்தபுரத்திலிருந்து பட்டணத்துக்குப் போகும் வழியில் இங்கே இறங்கி உன் மாமனாரைப் பார்த்து விட்டுப்போகலாமென்று வந்தேன்" என்றார். அவர் அப்படிச் சொல்லிக் கொண்டே இருக்கும் போது வெளியே சென்றிருந்த அனந்தய்யர் திரும்பி வந்தார். பரசுராமனையும், அவனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மகாதேவய்யரையும் வரவேற்றார். சாரதா, பரசுராமனின் மாமா மகாதேவய்யரை நமஸ்கரித்தாள்.

மகாதேவய்யர் வேடிக்கையாகப் பரசுராமனைப் பார்த்து "நீ. பி.ஏ படித்த ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டால் மட்டும் போதாது. அவளுக்குத் தகுந்த புருஷனாக இருப்பதற்குரிய ஒரு பெரிய உத்தியோகத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும்" என்றார்.

"மாமா, இந்த மாதம் முதல் என்னை ஆபிஸில் அஸிஸ்டெண்ட் மானேஜராகப் பிரமோஷன் கொடுத்திருக்கிறார்கள்" என்றான் பரசுராமன்.

"பாதகமில்லையே! அப்படியானால் சாரதா அதிர்ஷ்டசாலிதான். ஒரு ஆபிசரின் மனைவியின் அந்தஸ்தை அடைந்த பிறகுதான் அவளை நான் முதன் முதலாகப் பார்க்க வேண்டுமென்று பிராப்தம் இருக்கும்போது, நான் பட்டணத்துக்கு வந்து மூன்று மணி நேரம் காத்திருந்தும் அவளை என்னால் பார்க்க முடிந்ததா என்ன!" என்றார்.

இதைக் கேட்டதும் சாரதாவின் உடல் சிலிர்த்தது. பரசுராமனின் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன. அனந்தய்யர், அகிலாண்டம்மாள் இவர்களின் உள்ளங்களும் குளிர்ந்தன என்று சொல்லத் தேவையில்லை அல்லவா!

குழந்தைகளின் ஈரல், குலேக்கட்டி வியாதிகளுக்கு

ஜம்மியின் "லிவர்க்யூர்"

○●○

எமது டாக்டர் கீழ்க்கண்ட இடங்களுக்கு குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார். அவரை நேரில் கலந்து ஆலோசிக்கலாம்.

ஆலோசனை நேரம்: காலை 9 முதல் 11 மணி வரை; மாலை 3 முதல் 5 மணி வரை

இடம்	தேதி	விலாஸம்
தஞ்சாவூர்	17-1-52	ராஜா சத்திரம்
பட்டுக்கோட்டை	18-1-52	ஸ்ரீ வி. ஜெகதீச அய்யர், பெரிய தெரு
திருத்துறைப்பூண்டி	19-1-52	ஸ்ரீ டி. வி. சந்திரசேகரம் பிள்ளை, மருந்து ஷாப்
திருவாரூர்	21-1-52	விசாரிக்குமிடங்கள்: மெஸர்ஸ். மெடிகல் எம்போரியம் அல்லது மெஸர்ஸ். சுப்பய்யா மெடிகல் ஸ்டோர்ஸ்
மன்னார்குடி	22-1-52	மீனு கிளினிக், காந்தி ரோடு
நாகப்பட்டினம்	23-1-52	மெஸர்ஸ். என். டி. சௌந்தரராஜ பிள்ளை & ஸன்ஸ், கெமிஸ்ட்ஸ்
மாயவரம்	24-1-52	ராமகிருஷ்ண வைத்யசாலை
சீர்காழி (காலை 9 முதல் 11 மணி வரை)	25-1-52	டாக்டர் ஆர். சபேச அய்யர், சீர்காழி
சிதம்பரம்	26-1-52	ஸ்ரீ நடராஜா டிஸ்பென்ஸரி
கடலூர்	28-1-52	மெஸர்ஸ். கமலா & கோ., கெமிஸ்ட்ஸ், புதுப்பாளையம்

○●○


ஜம்மி வெங்கட்ரமணய்யா & ஸன்ஸ்

மதராஸ் :: கும்பகோணம்

மலச்சிக்கலை

ஒரே இரவில்

அகற்றுகிறது



ப்ரூக்லாக்ஸ்

ருசி மிகுந்த சாக்கலெட் மலமிளக்கி

ஏஜெண்டுகள்:

ஓரியண்டல் மெர்க்கண்டைல் ஏஜென்ஸி

99-A. அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1

மத்திய கேந்திரம்

ஜெயமணி

துருக்கி—7

தங்கள் நாட்டில் லட்சக் கணக்கான துருக்கியர்கள் இருப்பது தங்களுடைய எதிர்கால நலனுக்கு ஏற்றதல்ல என்று கிரேக்கர்களும் அபிப்பிராயப்பட்டனர். எனவே, கிரீஸின் யோசனைக்கு இணங்க ஜனங்களை மாற்றிக் கொள்வதற்கு கெமால் பாஷா இசைந்தார். அதன் பலனாக கிரீஸிலிருந்த சுமார் பதினைந்து லட்சம் துருக்கியர்கள் துருக்கிக்கு அனுப்பப்பட்டனர்! துருக்கியிலிருந்த பதினைந்து லட்சம் கிரேக்கர்கள் கிரீஸுக்கு அனுப்பப்பட்டார்கள்!

இவ்வளவு பெரிய ஜனத்தொகையை இரு நாடுகளும் சுமுகமாக மாற்றிக் கொண்ட அபூர்வ சாதனைக்கு உலக சரித்திரத்திலேயே உவமை இல்லை.

அப்போது துருக்கியின் பொருளாதாரத் துறையில் கிரேக்கர்கள் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். ஜனத்தொகை மாற்றத்தின் விளைவாகத் துருக்கியின் பொருளாதார நிலை தற்காலிகமாகச் சீர்குலைந்ததெனினும், பின்னர் அதைத் துருக்கி சமாளித்துக் கொண்டது.

லாஸேன் உடன்படிக்கையின் மூலம் துருக்கியின் கோரிக்கைகள் யாவும் அங்கீகரிக்கப் பட்டன. ஆனால் ஒரே ஒரு முக்கிய கோரிக்கையை மாத்திரம் பிரிட்டன் ஒப்புக் கொள்ளவில்லை என்று ஏற்கெனவே குறிப்பிடப் பட்டிருக்கிறது.


அதாவது ஈராக் எல்லைக்கு அருகில் உள்ள மோசூல் மாகாணம் தங்கள் நாட்டுடன் சேரவேண்டும் என்று துருக்கியர்கள் வற்புறுத்தினர். பிரிட்டன் அதற்கு இணங்காததால், அந்தப் பிரச்னை சர்வதேச சங்கத்தின் பரிசீலனைக்கு விடப்பட்டது.

மோசூல் மிகவும் முக்கியமான பிரதேசமாகும். அங்கு ஏராளமாக எண்ணெய் கிடைப்பதுடன், அது ஒரு கேந்திர ஸ்தானமாகவும் இருக்கிறது. மோசூல் மலைப் பிரதேசங்கள் யாருடைய கையில் இருக்கின்றனவோ, அவர்கள்தான் துருக்கி, ஈராக், பாரசீகம் முதலிய நாடுகள் விஷயத்தில் ஓரளவு ஆதிக்கம் செலுத்த முடியும்.

அத்தகைய நிலைமைக்கு இடம் கொடுக்கத் துருக்கியர்கள் விரும்பாததால், மோசூல் மாகாணம் தங்கள் நாட்டில் சேர வேண்டுமென்று கூறினார்கள்.

இந்தியாவுக்குச் செல்லும் தரைப் பாதையையும் விமான மார்க்கத்தையும் பாதுகாக்க வேண்டுமாயின், மோசூல் மாகாணம் தங்களுடைய ஆதிக்கத்தில் இருக்க வேண்டும் என்று பிரிட்டிஷார் கருதினர். தவிர ருஷ்யா மீது படையெடுப்பதற்கோ அல்லது ருஷ்யாவின் படை யெடுப்பைத் தடுப்பதற்கோ, மோசூல் தங்கள் வசம் இருக்க வேண்டும் என்பதும் பிரிட்டிஷாரின் எண்ணமாகும்.

இறுதியில் அவ்விஷயமாகச் சர்வதேச சங்கம் பிரிட்டிஷாருக்குச் சாதகமாகவே முடிவு செய்தது. மேற்படி முடிவை ஒத்துக் கொள்ள துருக்கியர்கள் முதலில் மறுத்து விட்டார்களெனினும், கடைசியில் அதற்கு அவர்கள் இணங்கவேண்டியதாயிற்று. அதன் பலனாக மோசூல் மாகாணம் அப்போது புதிதாக ஏற்பட்ட ஈராக் தேசத்துடன் சேர்க்கப் பட்டது. அந்த மாகாணம் ஈராக் நாட்டில் இருப்பது தங்கள் கையில் இருப்பது போலத்தான் என்று பிரிட்டிஷார் கருதினர். எனவே, அந்த ஏற்பாட்டுக்கு அவர்கள் ஆட்சேபணையின்றி இசைந்தனர்.



* * *

இவ்வாறாக, பல நூற்றாண்டுகள் வரையில் மிகப் பெரிய சாம்ராஜ்யமாகத் திகழ்ந்த துருக்கி படு வீழ்ச்சியுற்றதெனினும், மீண்டும் அது தன் சுதந்திரத்தையாவது காப்பாற்றிக் கொள்வது சாத்தியமாயிற்று.

பாதாளத்தில் வீழ்ந்து கிடந்த துருக்கி மீண்டும் தலை தூக்கியதற்கு பிரிட்டனே மறைமுகமான காரணம் எனலாம்! ஏனெனில் துருக்கியை அடக்கி அடிமைப் படுத்துவதற்காகப் பிரிட்டன் கைக்கொண்ட முறைகள் தான் துருக்கியர்களிடையே கொதிப்பை உண்டாக்கி, அவர்களை

வீறு கொண்டு எழும்படி தூண்டியது! துருக்கிக்கு இறுதி வெற்றி கிடைத்த பின், கெமால் பாஷா அந்த நாட்டில் பல நூற்றாண்டுகளாக வேரூன்றியிருந்த உள்நாட்டு ஊழல்களைக் களைய முற்பட்டார். அன்னியர்களை எதிர்த்துப் போர் புரிவதைக் காட்டிலும் ஊறிப் போன அர்த்தமற்ற பழக்க வழக்கங்களை ஒழிப்பது அவருக்கு மிகவும் கஷ்டமாகியது.

துருக்கியிலிருந்து சுல்தான் பதவியையும் கலிபா பதவியையும் அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்பது கெமால் பாஷாவின் பிடிவாதமாகும். துருக்கியில் அன்னியர்களின் ஆதிக்கம் ஏற்பட்டதற்கு அவ்விரு பதவிகளும்தான் காரணம் என்பது கெமால் பாஷாவின் கருத்து. ஆனால் மேற்படி பதவிகளை ரத்து செய்வதற்கு மற்றத் தலைவர்களோ பொது மக்களோ இசையவில்லை.

பிரிட்டிஷாரின் பொம்மையாக இருந்த சுல்தான் வஹீத் உத்தினைத் துருக்கியர்கள் வெறுத்தனர். எனினும் பார்லிமெண்டு ஆட்சிக்கு உட்பட்டு சுல்தானும் கலிபாவும் இருக்க அவர்கள் சம்மதப்பட்டனர்.

இவ்விஷயத்தில் சிறிதும் விட்டுக்கொடுக்க கெமால் பாஷா தயாராக இல்லை. அதே சமயம் பொதுஜன அபிப்பிராயத்தைப் பகிரங்கமாகப் புறக்கணிக்கவும் அவர் விரும்பவில்லை. தம்முடைய விருப்பத்தை நிறைவேற்ற கெமால் பாஷா உற்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

லாசேனில் நடந்த சமாதான மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்பும்படி பிரிட்டிஷார் சுல்தானையும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பிரிட்டிஷாரிடமும் சுல்தானிடமும் அவநம்பிக்கை கொண்ட துருக்கிப் பொது மக்கள் பிரிட்டிஷார் அவ்வாறு கேட்டுக் கொண்டதிலும் ஏதாவது சூழ்ச்சி இருக்கக் கூடும் என்று நினைக்கலாயினர்.


ஜனங்களின் இந்த உணர்ச்சியைக் கெமால் பாஷா பயன்படுத்திக் கொண்டார். 1922-ம் வருஷம் நடந்த துருக்கி தேசிய மகாசபைக் கூட்டத்தில் சுல்தான் பதவியை ரத்துசெய்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். பொது மக்களின் மனம் பக்குவமடையும் வரையில் கலிபா பதவி இருந்து தொலையட்டும் என்ற உத்தேசத்துடன் அதை மாத்திரம் அவர் ரத்து செய்யவில்லை.

இதன் மத்தியில் சுல்தான் வஹீத் உத்தின் மீது தேசத்துரோகம் செய்ததாகக் குற்றம் சாட்டப் பட்டது. அதன் சம்பந்தமான விசாரணைக்குப் பயந்து வஹீத் உத்தின் இரகசியமாகப் பிரிட்டிஷாரின் வைத்திய மோட்டாரில் ஏறித் தப்பியோடி விட்டார்.

அவர் அவ்வாறு தப்பி ஓடியதே அவர் குற்றவாளி என்பதை நிரூபிப்பதாக முடிந்தது! அதன் பலனாக அத்தகைய விஷயங்களில் கெமால் பாஷாவுக்கு பொதுஜனங்களின் ஆதரவு அதிகமாயிற்று. பிறகு தேசிய மகாசபை, வஹீத் உத்தினின் உறவினரான அப்துல் மஜீதைப் புதிய கலிபாவாக நியமித்தது. அப்துல் மஜீத் அரசியல் அதிகாரமோ செல்வாக்கோ எதுவும் இல்லாத கலிபாவாக இருந்து வந்தார்.

உண்மையான ஊழியர்

சென்னை ராஜ்ய சட்டசபைக்குப் போட்டியிடுவதற்குக் காங்கிரஸினால் நியமிக்கப்பட்ட மாசு மறுவற்ற அபேட்சகர்களில் திண்டுக்கல் எம். எஸ். முனிசாமி ஒருவர். நீண்ட காலமாகச் சுதந்திரப் போரில் ஈடுபட்டவர்; தடியடிகள், சிறை வாசங்கள் ஏராளமாக அநுபவித்தவர். இந்த ஏழைத் தொண்டரின் அரிய சேவைகளைப் பாராட்டித் திண்டுக்கல் வாசிகள் சில வருஷங்களுக்கு முன்னால் ரூ. 1101 நிதி வசூலித்து அவருக்கு அளித்தார்கள். ஆனால் அத்தொகையை அவர் தம் சொந்தத்துக்கு வைத்துக் கொள்ளாமல் பாரதியார் மண்டப நிதிக்கும் 'காந்திக் கிராம' சேவைக்கும் பகிர்ந்து கொடுத்து விட்டார். சிறந்த பண்பாடு கொண்டு எளிய வாழ்க்கை நடத்தும் இந்த இலட்சிய தேசத் தொண்டருடன், வசதிகள் நிறையப் படைத்த பலர் போட்டியிட முன் வந்திருக்கிறார்கள். திண்டுக்கல் பொதுமக்கள் உண்மையான தேசத் தொண்டையும் மாசு மறுவற்ற தியாக சீலத்தையும் பாராட்டி திரு எம். எஸ். முனிசாமியையே ஆதரித்துத் தேர்ந்தெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.



ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி

65. சந்தேக விளக்கம்

கேள்வி : சர்வாங்காசனத்தில் தைராய்ட் கோளத்திற்கு ரத்தம் நன்கு போவதைப் போல, ஹலாசனத்திலும் ரத்தம் போகுமல்லவா! அதைப் போல மத்ஸ்யாசனத்திலும் போகுமென்று நினைக்கிறேன். ஆகவே இவை இரண்டும் குஷ்டரோகமுள்ளவர்கள் சர்வாங்காசனத்துடன் சேர்த்துச் செய்யலாமல்லவா!

பதில் : பேஷாகச் செய்யலாம். அவரவர்களின் உடல் நிலைக்குத் தக்கபடி ஹலாசனத்தைச் செய்யலாம். ஆனால் சர்வாங்காசனத்தில் அரை மணி நேரம் வரைக்கும்கூட இருக்கலாம். அதைப் போல ஹலாசனத்தில் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் நரம்புத் தளர்ச்சி போவதற்குப் பதிலாக அதிகமானால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. தவிர, சர்வாங்காசனத்தில் சுகமாய் அதிக நேரம் இருப்பதைப் போல அதில் இருக்க முடியாது. ஆகையால் ஹலாசனத்தை மூன்று முதல் ஆறு தடவைகள் வரை செய்யலாமே தவிர, 10, 20 நிமிஷம் என்று அதே நிலையில் இருக்கக் கூடாது. ஒரு தடவை என்பது ஹலாசன நிலைக்கு வந்தபின் ஐந்து முதல் பத்து எண்ணும் வரைக்கும் இருக்க வேண்டியது என்பது பொருள்.

மத்ஸ்யாசனத்தில், சர்வாங்காசனத்தைப் போல் ரத்தம் தைராய்ட் கோளத்திற்கு நேராய்ச் செல்லுவது என்பது இல்லை. ஆனால், சர்வாங்காசனத்தில் முதுகு, பின் பக்கம் வளைந்து நெடுநேரம் இருப்பதால், அதற்குப் பரிகாரமாக உடனே மத்ஸ்யாசனத்தைச் செய்யவேண்டியது அவசியம். ஆகையால் சர்வாங்காசனத்தைச் செய்பவர்கள் மத்ஸ்யாசனத்தைக் கட்டாயம் செய்தே ஆகவேண்டும். இதைச் செய்யாமல் விட்டு விட்டால் முதுகெலும்பிற்குப் பரிகாரம் கிடைக்காது. சர்வாங்காசனம் செய்வதால் சிலருக்கு ஏற்படும் கழுத்து, முதுகு, மார்பு முதலிய வலிகளுக்கு இந்த மத்ஸ்யாசனம் பரிகார மளிக்கிறது. இந்த ஆசனத்தை அவரவர்கள் செய்யும் சர்வாங்காசன நேரத்தில் நாலில் ஒரு பங்கு நேரம் செய்தால் போதும். அதையும் ஒரே தடவையில் செய்ய முடியவில்லையானால் இரண்டு, மூன்று தடவைகளில் செய்து பூர்த்தி செய்து கொள்ளலாம்.

கேள்வி : குஷ்டரோகிகள் சாப்பிடும் ஆகாரம் நீங்கள் சொல்லும் வகையில் செலவு அதிகமாகிறது. ஆப்பிள், திராட்சை, அத்தி, தக்காளி, ஆரஞ்சு போன்ற பழவகைகள் ஏழைகளால் வாங்கிச் சாப்பிடுவது முடியாததாய் இருக்கிறது. நகரங்களில் தவிர சாதாரண ஊர்களில் இவைகள் கிடைக்கவும் கிடைக்காது. அதற்குப் பதிலாக மாம்பழம், கொய்யா, பப்பாளி, அன்னாசி போன்ற மலிவாகக் கிடைக்கக் கூடிய பழங்களைச் சாப்பிடலாமா!

பதில் : குறிப்பிட்ட பழ வகைகள் சாப்பிடுவதில் சற்று செலவு அதிகம் ஆகும்தான். கிடைப்பதும் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் இந்த காட்டில் கிடைக்காத பலவித மருந்துகளை நாம் எப்பாடுபட்டாவது வாங்கி உபயோகிக்கவில்லையா! வியாதி அப்பேர்ப்பட்ட வியாதியாய் இருப்பதால் கஷ்டப்பட்டாவது கிடைக்கக்கூடிய ஊர்களிலிருந்து வரவழைத்துச் சாப்பிட வேண்டும். பணவசதி யில்லாதவர்கள் மாம்பழம், அன்னாசி, கொய்யா, பப்பாளி போன்றவைகளைச் சாப்பிடக் கூடாது. அது இந்த வியாதிக்கு ஒத்துக் கொள்ளாது. தவிர உஷ்ணத்தை உண்டாக்கும். மலைவாழைப் பழத்தை யாரும் சாப்பிடலாம். மற்ற வாழைப் பழங்கள் அவ்வளவு நல்லதல்ல. பசும்பால் எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடியதுதான். பழங்களை அதிகம் உபயோகிக்க முடியாதவர்கள் பால், பால்சாதத்தையாவது அதிகம் உபயோகிக்கலாம். லேசான புளிப்புள்ள மோர், மோர் சாதம் சாப்பிடலாம். முக்கியமாய்க் காரம், உப்பு, புளி சேர்க்காமல் சமயோசிதம் போல் எப்படியும் சாப்பிடலாம்.

கேள்வி : ஆசனங்களை ஆயுள் உள்ளளவும் செய்யவேண்டுமா! சில நாள் செய்து, விட்டு விட்டால் அதனால் ஏதாவது அசௌகரியம் ஏற்படுமா!

பதில் : உழைப்பு, ஊண், உறக்கம் எப்படி ஒரு மனிதனுக்கு அவசியமோ அதைப்போல யோக ஆசனமும் அவசியம். சாப்பாட்டை 'நாம் சாகும்வரை சாப்பிடவேண்டுமா' என்று கேட்கிறோமா! 'இது என்னடா வீண் வேலை! உறக்கத்தினால் நேரமெல்லாம் வீணாய் விடுகின்றதே' என்று நினைக்கிறோமா! இவைகளைச் சாகுமட்டும் எவ்வளவு விருப்பமாய்ச் செய்கிறோம்! அதைப் போலவே ஆசனங்களையும் ஆயுள் உள்ளவரை செய்ய வேண்டியதுதான். சில சந்தர்ப்பங்களால்



"கடைக்காரரே, உங்களிடம் நல்ல ஆரஞ்சுப் பழங்களாகக் கிடைக்குமா? உயர்ந்த ரகமாயிருக்கவேண்டும்!"

"பேஷான பழங்கள் கிடைக்கும். இருபது வருஷங்களாக நாங்கள் உயர்ந்த ரகப் பழங்களையே விற்று வருகிறோம்!"

"எனக்கு அந்தனை நாளையப் பழங்கள் வேண்டாம். அந்த நிறுவப் பழங்களிலேயே புதிய பழங்கள் வேண்டும்!"

சில நாட்களோ, சில மாதங்களோ இடையில் விட நேர்ந்தால் அதனால் பாதகம் ஒன்றும் நேர்ந்து விடாது. ஆனால் ஆசனம் செய்து கொண்டு வந்த போது இருந்த பலம், சுறு சுறுப்பு சிறிது குறையத்தான் செய்யும். மறுபடியும் ஆசனம் செய்ய ஆரம்பித்தால் சரியாகிவிடும். ஆசனம் செய்வதை விட்டதினால் பல குறைகள் ஏற்படுகிறது என்பது விதண்டாவாதம். ஆசனம் செய்து விட்டதினால் குறைகள் உண்டாகுமென்று எந்த யோக சாஸ்திரத்திலும் சொல்லப்பட வில்லை. அப்படி உண்டாகி இருந்தால் அது அவரவர்களின் ஆகார, அனுஷ்டான, நடத்தைப் பிசகினால்தான் ஏற்பட்டிருக்க வேண்டும்.

கேள்வி —காலையில் ஆசனம் செய்ய முடியாதவர்கள் மாலையில் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். தவிர ஆசனங்களை மலம் கழித்த பின் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். எனக்குக் காலையில் ஆசனம் செய்ய நேரம் கிடைப்பதில்லை. மாலையில்தான் சௌகரியம். ஆனால் எனக்கு மாலையில் மலம் கழித்துப் பழக்கமில்லை. அப்படியிருந்தாலும் ஆசனம் செய்யலாமா !

பதில் :—மாலையில் மலம் கழிக்காமலும் செய்யலாம். ஏன், சிலருக்குக் காலையிலும் மலம் கழித்துப் பழக்கமிராது. அப்பேர்ப்பட்டவர்களும் காலையில் ஆசனங்களைச் செய்யலாம். செய்து கொண்டேயிருக்கும்போது சிலருக்கு மலம் கழிக்க வேண்டிய உணர்ச்சி ஏற்படும். அப்பொழுது அடக்கி வைத்துக் கொண்டிராமல் உடனே மலம் கழித்து வந்து செய்ய வேண்டும். சிறுநீரும் அவ்வாறே. ஆசனத்தை விட்ட இடத்திலிருந்து மறுபடி ஆரம்பித்துச் செய்யவும். இவ்வாறே செய்து வந்தால் மலச் சிக்கல் நீங்கி ஆசனம் செய்வதற்கு முன் வெளிக்குப் போகும் பழக்கம் உண்டாகி விடும். ஆனால் ஆசனம் செய்வதற்கு முன் மலம் கழித்துப் பழக்கமில்லாதவர்கள், வந்தாலும் வரா விட்டாலும் சிறிது நேரம் உட்கார்ந்து பார்க்க வேண்டும். அப்படியே சில நாள் செய்து வந்தால் பழக்கத்தின் காரணமாகவும், ஆசனப் பயிற்சியின் பலனாகவும் எழுந்தவுடன் வெளிக்குப் போகும் பழக்கம் உண்டாகிவிடும்.

கேள்வி :—எனக்கு ஆறு வருடங்களாக ஆஸ்துமா நோய் இருக்கிறது. இதற்கு எந்த ஆசனம் செய்தால் குணமாகும் !

பதில் :—ஆஸ்துமாவிற்கு முக்கியமாக, சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், விபரீதகரணி, நாடிசுத்தி முதலிய ஆசனங்களைச் செய்ய வேண்டும். மற்றும் புஜங்காசனம், சலபாசனம், பஸ்சிமோத்தானாசனம், சிரசாசனம், அர்த்தமத்ஸ்யேந்திராசனம், உட்டியாண முதலியவைகளும் செய்ய வேண்டும். இவைகளெல்லாம் நோயாளியின் நோயின் தன்மை, வயது, பருமன், உயரம், எடை, பலம் மற்றும் தனிப்பட்ட சில விஷயங்களுக்குத் தக்கபடிதான் மேற்சொன்ன ஆசனங்களில் சிலவற்றைச் செய்யவும் சிலவற்றை விடவும் வேண்டி வரும். மேற்சொன்ன ஆசனங்களில் சில ஏற்கனவே எழுதப்பட்டிருக்கிறது. சில இனிமேல் வெளிவரும். சந்தேகமுள்ளவர்கள் நேரிலோ கடித மூலமாகவோ எழுதித் தெரிந்து கொள்ளலாம்,


கேள்வி:—ஆசனம் செய்வதற்கு முந்தி பால் அருந்தலாமா !

பதில்:—கூடாது. மிக பலஹீனமானவர்கள், மிக்க நோயாளிகள் ஆசனம் செய்தால் ஆயாசமாக இருக்கும். சிலருக்கு மயக்கமும் ஏற்படும். அப்பேர்ப்பட்டவர்கள் மட்டும்தான் ஆசனம் செய்வதற்கு அரை மணி நேரத்திற்கு முன் அரை ஆழாக்கு பால் அருந்தலாம்.

கேள்வி:—ஆசனம் செய்ததும் உடனே பால் அருந்தலாமா !

பதில்:—ஆசனம் செய்த உடன் எதுவும் அருந்தவோ சாப்பிடவோ கூடாது. பாலாய் இருந்தால் பதினைந்து நிமிஷம் பொறுத்து அருந்தலாம். ஆகாரமானால் அரைமணி நேரம் பொறுத்துத் தான் சாப்பிட வேண்டும். (தொடரும்)

தில்லி சபைக்கு திரு தாமோதரன்



கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பி. எஸ். ஜி. அற நிலையத்தார் ஆற்றி வரும் பணி யாவரும் அறிந்ததே. அந்த அற நிலையத்தின் சார்பில் தொழிற் சேவை, கலைக்கல்லூரி, இன்ஜினீரிங் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளிகள், இராப்பள்ளிகள் முதலியன நடை பெற்று வருகின்றன. இவை யனைத்திற்கும் திரு ஜி. ஆர். தாமோதரன் டைரெக்டராக நின்று மிகச் சிறந்த முறையில் தமிழகத்துக்குத் தொண்டாற்றி வருகிறார். மேலும் நமது சென்னை சர்வகலாசாலையின் செனெட்டிலும் சின்டிகேட்டிலும் அங்கத்தினராக இருந்து வருகிறார்.


பி. எஸ். ஜி. கலைக் கல்லூரி, சமூகப் பணி சங்கம் ஒன்று நிறுவி அதன் மூலமாக அக் கல்லூரியின் மாணவர்களைக் கொண்டு ஹரிஜனச் சேரி முன்னேற்றத்துக்குப் பெரிதும் பாடுபட்டு வருகிறது. அச்சேரியிலுள்ள ஏழைகளுக்கு உணவு, மருத்துவ உதவி, கல்வி, சுகாதாரம் முதலிய வசதிகள் அளிக்கப்படுகின்றன. இந்தச் சேவைகளுக்கு ஊக்கமளித்து உதவி புரிந்து வருகிறவர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள்தான்.

அவர் மேனாடுகளில் பல ஆண்டுகள் இருந்து விஞ்ஞானப் பயிற்சி பெற்றவர். தம் விஞ்ஞானப் புலமையைத் தம் தொழிற்சாலை முன்னேற்றத்திற்குப் பெரிதும் பயன்படுத்தி வருகிறார். இத்தொழிற்சாலையால் தமிழ் மக்கள்—சிறப்பாக விவசாயிகள்—அடைந்து வரும் நன்மை பிரசித்தமானது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பொது நல ஊழியரை, விஞ்ஞானப் புலமை வாய்ந்த அறிஞரை பொள்ளாச்சித் தொகுதிக்கு மக்கள் சபையின் அபேட்சகராகக் காங்கிரஸ் தேர்ந்தெடுத்திருக்கிறது.

ஆகவே மக்கள் சபைக்கு எல்லா வகையிலும் தகுதிவாய்ந்த காங்கிரஸ் அபேட்சகரான திரு ஜி. ஆர். தாமோதரன் அவர்களுக்கே உங்கள் வோட்டுக்களைப் போடுமாறு பொள்ளாச்சித் தொகுதி பொது மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

BSY-472-TAM



புள்ளி விவரங்கள்

பர்மா-ஷெல் ஒரு வகையில் தபாலாபீஸைப் போன்றது. ஏனெனில் இந்த ஸ்தாபனம் இந்தியாவெங்கும் பரவியிருக்கிறது. வசதியான முக்கிய இடங்களிலிருந்து நாட்டிலுள்ள ஒவ்வொரு நகரம், கிராமத்திற்கும் பர்மா-ஷெல் பெட்ரோலியப் பொருள்களை கொண்டுபோய்ச் சேர்கிறார்கள். பர்மா-ஷெல் ஸ்தாபனத்திற்கு:

7 பிரதான எண்ணெய் சேகரிப்பு ஸ்தலங்கள்
4 கிளை ஆபீஸ்கள்
19 டிவிஷனல் ஆபீஸ்கள்
793 டிபோக்கள்
16,000 தொழிலாளர்கள்
1000 க்கு மேற்பட்ட கிரோஸீன் ஏஜன்ஸிகள்
2106 பெட்ரோல் டீலர்கள்
40 ஏவியேஷன் பியூவெல்லர்கள்

இத்தகைய வசதிகளுடன்தான் பர்மா-ஷெல்லார் பெட்ரோல் பொருள்களை வினியோகம் செய்து இந்திய வாழ்க்கையில் முக்கியமான பாகம் வகிக்கிறார்கள்.

பர்மா-ஷெல்...

பாரத நாட்டின்

வாழ்க்கையில்

ஈடுபட்டிருக்கிறது

BURMAH-SHELL... IN INDIA'S LIFE AND PART OF IT



3. பாவம், கமலம்!

கமலத்தினிடம் கொஞ்சம் கொஞ்சம் வெறுப்புக் காண்பித்து வந்த இளையராணி இப்போது முழுவதும் வெறுப்பையே காண்பிக்கலானாள்.

முதல் காரியமாக இளையராணி அந்தப்புரத்து வேலைக்காரியை நிறுத்தி விட்டாள். அந்த வேலையை யெல்லாம் செய்வதற்குக் கமலத்தையே வேலைக்காரியாக ஏற்பாடு செய்தாள். இளைய ராணியின் புடவையைத் தோய்ப்பது, தினம் அவளுக்கு ஸ்நானம் செய்துவைப்பது, இன்னும் அவளுக்கு வேண்டிய குற்றேவல்களை யெல்லாம் செய்வது முதலியவைகளெல்லாம் கமலமே கவனித்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

அரசனுடைய அருமை மகளாக அரண்மனையில் பிறந்து, அரண்மனையிலேயே வளர்ந்து வந்த கமலம் இப்பொழுது சொல்லொணாக் கஷ்டங்களுக் கெல்லாம் உள்ளானாள். அந்தப்புரத்துக் கடுமையான காரியங்களைச் செய்து கமலத்தின் கரங்கள் ஒரேயடியாகச் சிவந்து கொப்பளித்து விட்டன. பூப்போன்ற அவளது தேகம் வாடி விட்டது. மென்மையான அவளுடைய பாதங்கள் கடும் உழைப்பினால் நிலை கொள்ளாமல் தவித்தன. எப்போதும் மலர்ந்த தாமரையைப் போல் இருக்கும் அவள் முகம் இப்பொழுது வாடி வதங்கிப் போய்விட்டது.

இந்தச் சிரமங்களை யெல்லாம் தன் தகப்பனாரான அரசனிடம் சொல்லலாம் என்று நினைத்தாள், கமலம். பாவம், அவளுக்கு வேலையி லிருந்து ஓய்வு கிடைத்தால்தானே அவள் தன் தகப்பனிடம் போய் இதைப் பற்றிச் சொல்ல முடியும்? இளைய ராணி தான் அவளுக்கு ஓய்வே கிடைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாளே!



ஒரு நாள், கமலம் வேலை செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது கடுமையான வேலை காரணமாக அவளுக்கு மயக்கம் வந்து விட்டது. கீழே விழுந்து விடாமல் கமலம் ஒருவாறு சமாளித்துக் கொண்டாள். அதற்கு மேல் அவளால் வேலை செய்ய முடியவில்லை. அப்பாவிடம் சொல்லி இதற்கு ஒரு முடிவு செய்தாலென்ன என்று அவளுக்குத் தோன்றியது. உடனே அவள் மெதுவாக அந்தப்புரத்தை விட்டு ஒருவர் கண்ணிலும் படாமல் அரண்மனையை அடைந்தாள். இளைய ராணி பார்த்து விடுவாளோ என்ற பயத்தினால் அவள் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

கமலம் மெதுவாக அப்பா இருக்கும் அறையை அடைந்தாள். அப்பாவைப் பார்த்ததும், இது வரையில் அவள் அடக்கி வைத்திருக்கும் துக்கமெல்லாம் பீறிக் கொண்டு கிளம்பியது. "அப்பா!" என்று அழைத்துக் கோவென்று கதறி அழுது விட்டாள்.

அரசனுக்கு ஒன்றும் புரியவில்லை. புயல் காற்றில் அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கும் பூங்கொடி போல், கமலம் அவன் காலடியில் கிடந்து விம்மினாள். அரசன் அவளைத் தூக்கி யெடுத்து நிறுத்தினான்.

"கமலம், ஏன் அழுகிறாய்? உன் உடம்புக்கு என்ன?" என்று பரபரப்போடு கேட்டான் அரசன்.

பெருகி வரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, அழுகையையும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, கமலம் பயந்த குரலில், "அப்பா!" என்றாள்.

அவ்வளவுதான். இளைய ராணி திடீரென்று அங்கே வந்து சேர்ந்தாள்.


"கமலம், ஏன் அழுகிறாய்? அப்பாவிடம் வந்து அழுவானேன்? என்னோடு

எப்பொழுது பார்த்தாலும் சண்டை போட்டு வாயில் வந்தபடியெல்லாம் பேசுவது போதாது என்று அப்பாவிடம் வேறு சொல்ல வந்து விட்டாயா? நன்றாய் வேஷம் போடுகிறாயே! இந்த நடிப்பெல்லாம் யாரிடம் கற்றுக் கொண்டாய்? எடுத்ததற்கெல்லாம் உனக்கு எப்படியம்மா கண்ணீர் வருகிறது?" என்று படபட வென்று பொரிந்து தள்ளி விட்டாள் இளைய ராணி.

இதைக் கேட்டதும் கமலம் பிரமித்து விட்டாள். அவள் சித்தி அங்கே வருவாள் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அதுவும் சரியான ஆதாரங்கூட இல்லாமல் தான் அரண்மனையில் சில மாதங்களாக அநுபவித்து வரும் கஷ்டங்களை அப்பாவிடம் எடுத்துச் சொல்ல முடியாதபடி செய்து விட்டாளே சித்தி? அப்பாவிடம் இனிமேல் தான் என்ன சொன்னாலும் அவர் நம்ப மாட்டாரே! இந்தச் சிந்தனையில் கமலம் வாய் அடைத்துப் போய்விட்டாள்.

அடுத்த நிமிஷம் இளையராணி அரசனைப் பார்த்து, "மகாராஜா, பார்த்தீர்களா உங்கள் அருமைப் பெண் கமலத்தை? 'அப்பாவிடம் போய்த் தொந்தரவு செய்யாதே, அம்மா! எதுவாயிருந்தாலும் என்னிடம் சொல்லு!' என்று நேற்று நான் சொன்னேன். அதற்காக இவள் இப்படி அழுது ஆர்ப்பாட்டம் செய்கிறாள்" என்றாள்.

அரசனுடைய முகம் இளைய ராணியின் பேச்சைக் கேட்டதும் கொடூரமாக மாறி விட்டது. கமலம், தன் அருமை அப்பாவின் முகம் அவ்வளவு கடுமையாக இருந்து இது வரையில் பார்த்ததில்லை. ஆகவே, அவள் பயந்து நடுங்கி விட்டாள்.



நட்டுவனார் :—குழந்தைக்கு மூன்று மாதத்தில் பரத நாட்டியம் கற்றுக் கொடுத்து விடுகிறேன். பிறகு அரங்கேற்றம் வைத்துக் கொள்ளலாம்!

குழந்தையின் தகப்பனார் :-முடியவே முடியாது. அதுவரையில் யார் பொறுத்துக் கொண்டு இருப்பது? அரங்கேற்றத்தை இப்பவே வைத்துக் கொள்ளலாம், பிறகு நாட்டியம் சொல்லிக் கொடுக்கலாம்...!

அரசன் மிகவும் கோபப் பார்வையுடன், "கமலம், என்ன இது! நீ சுத்த முட்டாளாயிருக்கிறாயே! சித்தியிடம்தான் நீ இனிமேல் உனக்கு வேண்டியதை யெல்லாம் கேட்க வேண்டும். தெரிந்ததா? புத்திசாலிப் பெண்ணாகிய உனக்கு நான் இதையெல்லாம் சொல்லித்தர வேண்டுமா? வீணுக்கெல்லாம் அழாதே! போ!" என்று கடுகடுத்த முகத்துடன் கூறினான்.

உடனே கமலம் தலை குனிந்து, வாய் திறவாமல் அந்தப் புரத்துக்குச் சென்றாள். பொங்கி வரும் துக்கத்தை அடக்கிக் கொண்டு தன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தாள். இப்பொழுதுதான் அவளுக்குத் தன்னுடைய ஆதரவற்ற நிலைமை ஒருவாறு விளங்கியது. அப்பாவிடம் சித்தியின் கொடுமையைப் பற்றிச் சொன்னால் அவர் பதறிப் போவார் என்று அவள் நினைத்தாள். ஆனால் அங்கே நடந்ததென்ன? ஏற்கெனவே தாயை இழந்த கமலத்துக்கு இப்பொழுது தந்தையின் அன்பையும் இழந்தது போலிருந்தது. வீராதி வீரர்களான அண்ணன்மார்களிடம் சொல்லி இதற்கு ஒரு வழி தேடலாமே என்றால், அவர்கள்தான் சூரியோதயத்துக்கு முன்பே எழுந்து வேட்டையாடப் போய், இரவுதானே வருகிறார்கள்? மேலும் சித்திக்குத் தெரியாமல் அவர்களை எப்படிச் சந்தித்துப் பேசுவது?

இந்தக் கவலை கமலத்தை மிகவும் வாட்டியது. இதைப்பற்றிக் கமலம் யோசித்தாள், யோசித்தாள், அப்படி யோசித்தாள். ஒன்றும் பயன் ஏற்படவில்லை.

ஒரு நாள் கமலம், மனத்தில் இருக்கிற தைரியத்தை யெல்லாம் ஒன்று சேர்த்துக் கொண்டாள்; அரண்மனையில் சித்தி இட்ட வேலைகளை அவசரம் அவசரமாக முடித்துக் கொண்டு மிகவும் சிரமப்பட்டு அண்ணன்மார்களின் அரண்மனையை அடைந்தாள். ஆனால் அவர்களைப் பார்த்துப் பேசுவதற்கு அவள் செய்த முயற்சி ஒன்றும் பலன் அளிக்கவில்லை. மிக்க கவலையோடு திரும்பினாள்: சித்திக்கு அரசனிடம் இருந்த செல்வாக்கை நேரில் பார்த்து விட்டாளாதலால் கமலம் இனிமேல் சித்தியின் விஷயத்தில் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தாள்.

அன்றைய தினம் சித்தி மிகவும் பரபரப்போடு இருந்தாள். தினந்தோறும் கமலத்தின் மீது ஏதாவது குற்றத்தைச் சுமத்தி அதற்காகத் திட்டிக்கொண்டே இருப்பாள். இன்று அவள் கமலத்தைப் பற்றியே நினைக்கவில்லை என்று தோன்றியது. ஆனால் அவளுடைய நடவடிக்கைகளெல்லாம் கமலத்துக்கு ஆச்சரியமாயிருந்தது. யாரெல்லாமோ இளைய ராணியிடம் வந்து குசுகுசு வென்று இரகசியம் பேசினர். அதில் ஏதோ விபரீதமான சூழ்ச்சி இருக்கிறது என்பது கமலத்துக்குத் திடமாகத் தெரிந்தது.

(தொடரும்)



மந்திர மாத்திரை!

★

அந்தப் பூனை ஒரு முழுச் சோம்பேறி. எங்கேயாவது சோறு கிடைத்தால் தின்று விட்டுப் படுத்துவிடும். எலியைத் தேடிக் கொண்டு போகும் அளவுக்கு அந்தப் பூனைக்குச் சுறு சுறுப்புக் கிடையாது. மேலும் எலியின் வாசனையே அதற்குப் பிடிக்காது. இதை யறிந்த ஒரு எலி பூனையின் மேல் ஏறிக் குதித்துத் தொந்தரவு செய்து வந்தது. பூனை தடியை எடுத்துக் கொண்டு துரத்திப் பார்த்தது. பயன் இல்லை. பிறகு பூனை ஒரு மந்திரவாதியிடம் சென்று எலியின் கொட்டத்தை அடக்க இரண்டு மாத்திரைகள் வாங்கி வந்தது. அவற்றில் முதல் மாத்திரையைச் சாப்பிட்டால் விசுவ ரூபமும் இரண்டாம் மாத்திரையைச் சாப்பிட்டால் மீண்டும் பழைய உருவமும் பெறலாம். பூனை மாத்திரையை விழுங்கிய போது அது கீழே விழுந்து விட்டது. அங்கு வந்த எலி லபக் கென்று அந்த மாத்திரையை விழுங்கியது.



உடனே எலி விசுவரூபம் அடைந்தது. அது தடியை எடுத்துக் கொண்டு பூனையைத் துரத்தி அடிக்க ஆரம்பித்தது. பூனை அழுதது. பூனை அழுததைப் பார்த்து எலி சிரித்தது. சிரித்த போது அதன் திறந்த வாயில் பூனை இன்னொரு மாத்திரையைப் போட்டு விட்டது. எலி உடனே பழைய உருவத்தை அடைந்தது. பூனைக்குச் சந்தோஷம் தாங்கவில்லை; விழுந்து விழுந்து சிரித்தது. "அழுத பூனை சிரித்ததாம், ஆட்டுப் பாலைக் குடித்ததாம்!" என்று பாடிக்கொண்டு எலியும் ஓடிவிட்டது.





சென்னையைப் போன்ற பெரிய பட்டணத்தில் வசித்துப் பழகிய நாராயணனுக்கு அந்தச் சிறிய நகர் ஒரு வறண்ட பாலை வனத்தைப் போல் தோன்றியது.

அந்த நகரில் டிராம்கள் இல்லை; பஸ்கள் இல்லை; நவ நாகரிகமான கட்டிடங்கள் இல்லை; ஒரு நல்ல சினிமா சாலை கூட இல்லை!

மற்றக் குறைகளையாவது நாராயணனால் பொறுத்துக் கொள்ள முடிந்தது. ஆனால் சினிமா கட்டிடம் இராததை அவனால் சகிக்கவே முடியவில்லை. அதன் காரணமாக அவன் வாழ்க்கை மாத்திரமல்ல, அந்த ஊரில் உள்ளவர்களின் வாழ்க்கையே வியர்த்தமாகி வருவதாக அவனுக்குத் தோன்றியது!

இதிலிருந்து, நாராயணனைச் சினிமாப் பைத்தியம் என்று யாரும் எண்ண வேண்டாம்! அவனது நண்பர்கள் அவனை 'சினிமாப் பைத்தியம்' என்று கூப்பிட்டால், அவர்களுடைய அறியாமையைக் கண்டு அவன் அநுதாபப்படுவான்! ஆம், 'சினிமாக் கலை ரசிகனு'ன நாராயணனை 'சினிமாப் பைத்தியம்' என்று அழைப்பது பெரும் தவறு அல்லவா!

நாராயணன் சினிமாக் கலையை உத்தாரணம் செய்வதற்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவன் என்று சொல்லலாம்! சினிமாக் கலையில் அவனுக்கு இருந்த உற்சாகம்தான் அவனுடைய கலாசாலைப் படிப்பு கத்தரிக்கப்பட்டதற்குக் காரணம்!

சினிமாத் துறையில் உள்ள குறைகளைக் களைந்து அதில் அபிவிருத்தி ஏற்படும்படி செய்வதற்காக நாராயணன் சினிமாப் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தான். ஆரம்பத்தில் ஏற்படும் சோதனைகளுக்குப் பின் அப்பத்திரிகை சிறிது சிறிதாக அபிவிருத்தி அடையத் தொடங்கியது.

அதற்குள் தானே ஒரு சினிமா படத்தைத் தயாரிக்கவேண்டும் என்ற ஆசை அவனை ஆட்கொண்டது. உடனே அவன் தன் சொத்து முழுவதையும் விற்றுச் சினிமாப் படத்தைத் தயாரிக்க முற்பட்டான்.

எட்டு மாதங்கள் வரையில் அவனது நிலைமை, அதாவது அவன் ஆரம்பிக்கத் நிர்மாணித்த ஸ்டுடியோவின் நிலைமை என்ன என்பது அவனுக்கே தெரியவில்லை. அதற்காக ஒப்பந்தம் செய்து கொள்வதிலும், விளம்பரம் செய்வதிலும், சம்பளம் கொடுப்பதிலும், இவைபோன்ற மற்றத் தொல்லைகளிலுமே அவன் போட்ட முதல் கரைந்து கொண்டிருந்தது.

அவன் தன் முயற்சியின் பூர்வாங்கத் தொல்லைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு முன்பே அவன் ஆரம்பித்த கம்பெனி பாப்பராகி விட்டது! புதிய வெள்ளம் பழைய வெள்ளத்தை அடித்துக் கொண்டு போயிற்று என்று சொல்லுவார்கள் அல்லவா! அதுபோலவே சினிமா ஸ்டுடியோ அவன் சினிமாப் பத்திரிகைக்காகப் போட்டிருந்த மூலதனத்தையும் அடித்துக் கொண்டு போய் விட்டது. தன் சினிமாக் கம்பெனிக்கும் பத்திரிகைக்கும் அவ்வளவு சீக்கிரத்தில் அத்தகைய கதி நேரும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

அவனுடைய துரதிர்ஷ்டம் அத்துடன் நிற்கவில்லை. என்ன விசித்திரம்! நாராயணனைப் போன்ற 'மேதாவி' அந்த நகரில் வேலையில்லாமல் திண்டாடவும் நேர்ந்தது!

அவன் வேலையில்லாமல் கஷ்டப்பட நேர்ந்ததும் ஒரு விதத்தில் அதிர்ஷ்டம்தான். அவனைப்போன்ற மேதாவி ஆயுள் முழுவதும் ஏதாவதொரு உத்தியோகத்தை ஏன் கட்டி அழுது கொண்டிருக்க வேண்டும்!

கையிலிருந்த முதல் எல்லாம் கரைந்து போன பின் நாராயணன் தன் ஜீவனத்துக்குத் தன் பால்ய நண்பனுடைய சேஷய்யாவின் உதவியை நாட நேர்ந்தது. அப்படியிருந்தும் நாராயணன் தன் திறமையில் உள்ள நம்பிக்கையைக் கைவிடவில்லை! அவன் வகுத்த திட்டம் ஒரு காலத்தில் வெற்றி பெறும் என்ற உறுதி அவனுக்கு ஆறுதலைக் கொடுத்தது!

தாற்காலிகமாக இருள் சூழ்ந்திருந்த அவனது வாழ்க்கையில் தினசரி ஒரே ஒரு விஷயம் மாத்திரம் சிறிது ஒளியைக் கொடுத்து வந்தது. தினந்தோறும் இரவில் சாப்பிட்டபின் அவன் ரயில் ஸ்டேஷன் வரையில் சென்று உலாவி வருவான். அவனால் ஒன்றிரண்டு வேளை பட்டினி கிடந்தாலும் கிடக்க முடியும்; ஆனால் ரயில் ஸ்டேஷனுக்குச் சென்று உலாவி வருவதை அவனால் நிறுத்தவே முடியாது. அச்சமயம் யாராவது அவனுடன் பேசுவதற்கு வந்தால்கூட அவன் முகம் கொடுத்துப் பேச மாட்டான். அவனது மனோநிலையை அறியாமல் அப்போதுதான் நண்பர்கள் வழியில் அவனை நிறுத்திப் பேசத் தொடங்குவார்கள். அவ்வாறு பேசுவோரை நாராயணன் தன்னுடைய விரோதியாகவே கருதுவான்!

ரயில் ஸ்டேஷனுக்குச் செல்லுவதில் நாராயணனுக்கு ஏன் அவ்வளவு பிரேமை என்று கேட்கலாம். தாராவின் வெற்றிலைப் பாக்குக்கடை ரயில் ஸ்டேஷனுக்கு அருகில் இருந்ததுதான் அதற்குக் காரணம்!

அன்றிரவு அவன் வழியில் குறுக்கிட்ட ஒரு நண்பனுடன் பேசிக் கொண்டிருந்ததால் சிறிது அதிக நாழிகை ஆகிவிட்டது. அவன் வெகு வேகமாக நடந்து சென்றான். தாரா எங்கு கடையை மூடியிருப்பாளோ என்று கவலைப் பட்டுக்கொண்டே சென்றான்.

அந்த நகரில் எத்தனையோ வெற்றிலைப் பாக்குக் கடைகள் இருக்கத்தான் செய்தன. இருந்தாலும் தாராவின் கடைக்குப் போய் வெற்றிலை போட்டுக் கொண்டால்தான் நாராயணனுக்கு மன நிம்மதி ஏற்படும்!

நாராயணன் அதிவேகமாக நடந்து சென்றான். சிறிது தூரத்தில் தாராவின் கடை விளக்கு எரிவதைப் பார்த்த பின்தான் அவனுக்குப் படபடப்பு அடங்கியது.

நாராயணன் வழக்கம்போல் தாராவின் கடைக்கு கீழே ரஸ்தா ஓரத்தில் போடப்பட்டிருந்த பெஞ்சியில் உட்கார்ந்தான். முதல் நாள் வாங்கியதில் மீதியிருந்த ஒரு சிகரெட்டை நிதானமாகப் பற்ற வைத்தான்.

"இன்று நான் வருவதற்குச் சிறிது நேரமாகி விட்டது, இல்லையா!" என்றான் நாராயணன்.

"இல்லையே, தினசரி மெயில் வண்டி ஸ்டேஷனுக்கு வரும்போது நீங்கள் வருவீர்கள். இன்று மெயில் வண்டி வந்து இந்து நிமிஷங்கள் ஆயின. அவ்வளவுதான். அப்படியொன்றும் அதிக நேரம் ஆகிவிடவில்லை" என்று கூறினாள் தாரா.

"அப்படியானால் இன்னும் சில நிமிஷங்களில் நீ கடையை மூடிக் கொண்டு போய்விடுவாய் அல்லவா!" என்று கேட்டான் நாராயணன்.

"நான் ஒரு மணி நேரத்துக்கு முன்பே கடையை மூடியிருப்பேன். இப்போதெல்லாம் மெயில் வண்டி பிரயாணிகள் அதிகமாக எதுவும் வாங்குவதில்லை. உண்மையாகச் சொல்லப் போனால் உங்களுக்காகவே கடையை இவ்வளவு நேரம் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள் தாரா.

இதைக் கேட்டதும் நாராயணனுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. அவன் தாராவைத் தன் கண்களால் விழுங்கி விடுபவன் போல் பார்த்தான்.

நாராயணன் சினிமாக் கலை ரசிகன் ஆனதால் அவன் அழகிய பெண்களை உற்றுப் பார்ப்பது வழக்கம்தான். ஒவ்வொரு பெண்ணையும் பார்த்ததும், அவள் எந்த நாடகத்தில் அல்லது கதையில் எந்தப் பாத்திரத்துக்குத் தகுதியானவள் என்பதை அவன் மனம் ஆராயத் தொடங்கும்.

"வெற்றிலைப் பாக்குக் கடையை வைத்துக் கொண்டு வறுமை வாழ்க்கையை நடத்தும் இந்தப் பெண்ணிடம் எத்தனை சாமுத்திரிகா லட்சணங்கள் அமைந்திருக்கின்றன! இவளுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கும் பட்சத்தில், இவள் ஈடு இணையற்ற சினிமா நட்சத்திரமாக விளங்குவாள் என்பதில் சந்தேகமில்லை. என்ன விபரீதம்! இவளது அழகும் யௌவனமும் இப்படி வீணாகிக் கொண்டிருக்கிறதே! லட்சம் லட்சமாகச் சம்பாதிக்க வேண்டிய தாரா காலணாவுக்கும் அரையணாவுக்கும் வெற்றிலை விற்று ஜீவனம் நடத்தும்படி கடவுள் விதித்திருப்பதை என்னவென்று சொல்லுவது!"

இவ்விதம் நாராயணன் அடிக்கடி எண்ணுவது உண்டு. ஆனால் இன்று நாராயணன் தன் அபிப்பிராயத்தைப் பட்டவர்த்தனமாக அவளிடமே சொன்னான்.

"தாரா, உன் சக்தியை நீ அறிந்து கொள்ளவில்லை. உன்னைப் போன்ற இயற்கையான லட்சணங்கள் பொருந்தியவர்களைத் தேர்ந்தெடுக்கும் சக்தி நமது சினிமா டைரக்டர்களுக்கு இல்லை. அவர்கள் அழகு இல்லாதவர்களை அழகிகளாக



"நாயை வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறீர்களே, நாய் எஜமானரிடம் விசுவாசமாக இருக்குமா?"

"நன்றாய்க் கேட்டீர்கள்! ரொம்ப விசுவாசமாயிருக்கும்! இதை மூன்று பேரிடம் விற்றும் திரும்பி என்னிடமே வந்துவிட்டதுங்க!"

'மேக்-அப்' செய்வார்கள். கிழவிகளுக்குக் குமரிகளைப்போல் வேஷம் போட்டு விடுவார்கள். ஆனால் இயற்கையான லட்சணங்கள் வாய்ந்தவர்களைத் தேடுவதில் சிரமம் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் அவ்வாறு செய்தால்தான் இந்திய சினிமாப் படங்கள் உலகப் பிரசித்தி பெற்று விளங்குமே! என்னிடம் மாத்திரம் பணம் இருந்தால்......''

"உங்களிடம் நிறையப் பணம் இருந்தால், நீங்கள் என் கடையைத் தேடிக் கொண்டு எங்கு வரப் போகிறீர்கள்!'' என்றாள் தாரா.

"தாரா! ஒரு காலத்தில் என்னிடம் ஏராளமாகப் பணம் இருந்தது. அது உனக்குத் தெரியுமா!'' என்றான் நாராயணன் சோகத்துடன்.

"நான் வேடிக்கையாகச் சொன்னேன். வேறொன்றுமில்லை'' என்று அவனுக்குச் சமாதானம் கூறினாள் தாரா.

"என்னிடம் பணம் இருந்தால் உன்னைக் கதாநாயகியாகக் கொண்டு தமிழ், தெலுங்கு, ஹிந்தி, இங்கிலீஷ் முதலிய சகல பாஷைகளிலும் சினிமாப் படங்களைத் தயாரிப்பேன். ஏககாலத்தில் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய பல நாடுகளிலும் அந்தப் படங்களைக் காட்ட ஏற்பாடு செய்வேன்'' என்றான் நாராயணன்.

"பேஷாகச் செய்வீர்கள்!'' என்று ஆமோதித்தாள் தாரா.

நாராயணன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பவனைப் போல் எங்கேயோ பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்தான்.

தாரா மறுபடியும் ஏதோ சொல்லத் தொடங்கினாள்.

"சினிமாப் படத்தில் நான் கதாநாயகியாக வருவது என்பது ஆகாசக் கோட்டைக்கு ஒப்பாகும். ஒரு வேளை நீங்கள் கதா நாயகனாக வரலாம். அதற்குரிய சகல அம்சங்களும் உங்களிடம் அமைந்திருக்கின்றன. நான் மற்ற சினிமாப் படங்களைப் பார்க்கப் போனாலும் போகாவிட்டாலும், நீங்கள் எடுக்கும் சினிமாப் படங்களை என் கணவருடன் அவசியம் வந்து பார்க்கிறேன்....... என் கணவர் நரசிங்கை உங்களுக்குத் தெரியுமா! அவர் மூன்று வருஷம் தண்டனை யடைந்து சிறையில் இருக்கிறார். இரண்டு வருஷங்கள் கடந்து விட்டன. இன்னும் ஒரு வருஷம் பாக்கியிருக்கிறது. அதற்குள் உங்களுடைய சினிமாப் படங்கள் தயாராகி விடும் அல்லவா!......இந்த அநீதியைப் பாருங்கள். நரசிங்கும் மற்றொருவரும் சண்டை போட்டார்கள். மற்றொருவர் பணக்காரரானதால் அவருக்குத் தண்டனை கிடைக்கவில்லை. அநியாயமாக நரசிங்கைத் தண்டித்து விட்டார்கள்.''

தாரா இவ்வாறு சொல்லிக்கொண்டே நாராயணனிடம் வெற்றிலை, சீவல், சிகரெட்டுகள் முதலியவற்றைக் கொடுத்தாள்.

"இன்று உங்களுக்கு நேரமாகி விட்டது. நீங்கள் வெகு தூரம் நடந்து செல்ல வேண்டுமே!'' என்றாள் தாரா பரிவுடன்.

"நேரமானதைப் பற்றியோ தூரத்தைப் பற்றியோ நான் கவலைப்படவில்லை. ஆனால் மழை வந்துவிட்டதே!'' என்று தயங்கினான் நாராயணன்.

உடனே தாரா, "என்னிடம் ஒரு பழைய குடை இருக்கிறது. அதை நரசிங் உபயோகிப்பது வழக்கம். ஒரு நிமிஷம் இருங்கள். அதை எடுத்துத் தருகிறேன்'' என்றாள்.

ஒன்றுக்கும் உதவாத அந்தப் பழைய குடை தனக்கு வேண்டாம் என்று நாராயணன் சொல்லியிருப்பான். ஆனால் உருப்படாத சாமானாயினும்



தாரா அன்புடன் கொடுப்பதை அவன் எவ்விதம் மறுக்கமுடியும்!

தாரா குடையைக் கொண்டு வந்து கொடுத்தாள். அப்போதுகூட அந்த இடத்தை விட்டுச் செல்ல நாராயணனுக்கு மனம் வரவில்லை. "தாகமாயிருக்கிறது. குடிப்பதற்குத் தண்ணீர் இருக்கிறதா!'' என்று கேட்டான்.

தாரா எழுந்து சென்று ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள்.

* * *

அன்றிரவு இடியும் மழையும் பயங்கரமாக இருந்தது. வெற்றிலைப் பாக்குக் கடையிலிருந்து திரும்பி வந்த நாராயணனுக்குச் சிறிதும் தூக்கமே வரவில்லை.

இரவு ஒரு மணி இருக்கும். நாராயணன் படுக்கையை விட்டு எழுந்தான். ஒருவருக்கும் தெரியாமல் சேஷய்யாவின் அறைக்குச் சென்று எதையோ கையில் எடுத்துக் கொண்டான். தாரா கொடுத்த குடையைப் பிடித்துக் கொண்டு மறுபடியும் புறப்பட்டான்.

இடியும் மழையுமாக இருந்த அந்த இரவில், நடு நிசிக்குத் தன் வீட்டுக் கதவை யாரோ இடிப்பதைக் கேட்ட தாராவுக்கு ஒருங்கே ஆச்சரியமும் கலக்கமும் ஏற்பட்டன. அவள் வீட்டுக்குத் திருடன் யாரும் வரமாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். அங்கு திருடனுக்கு என்ன இருக்கிறது! அந்த அகாலத்தில் யார் அப்படித் தட்டுவது என்பதை அவளால் ஊகிக்கவே முடியவில்லை.

"யார் அது!'' என்று கேட்டுக் கொண்டே அவள் கதவைத் திறந்தாள்.

வாசற்படிக்கு அருகில் நின்று கொண்டிருந்த உருவத்தைக் கண்டதும் அவள் அப்படியே திடுக்



கிட்டு விட்டாள். அங்கே நாராயணன் நின்று கொண்டிருந்தான். அவனது சரீரமும் உடையும் மழையால் சொட்டச் சொட்ட நனைந்திருந்தன.

"யார்! நாராயணனா! இந்த அகால வேளையில் இங்கு எதற்காக வந்தீர்கள்!" என்று கேட்டாள் தாரா மிகுந்த பரபரப்புடன்.

நாராயணன் மௌனமாக நின்றான்.

"முதலில் உள்ளே வாருங்கள்!" என்றாள் தாரா.

நாராயணன் உள்ளே வந்து தன் வேஷ்டியையும் ஷர்ட்டையும் களைந்து விட்டுத் தான் கையில் கொண்டு வந்திருந்த வேறு உடைகளை உடுத்திக் கொண்டான். தாரா சோடாவை உடைத்து அவனுக்குக் கொடுத்தாள்.

நாராயணன் அப்போது இருந்த நிலையில், தாரா அவனுடன் என்ன பேசுவது! எல்லாம் காலையில் பேசிக் கொள்ளலாம் என்று நினைத்தாள்.

"இந்த நள்ளிரவில் இனி நீங்கள் திரும்பி வீட்டுக்குச் செல்ல முடியாது. இங்கேயே இந்தக் கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கொள்ளுங்கள். நான் அடுத்த அறையில் படுத்துக் கொள்கிறேன்" என்றாள் தாரா.

அகாலத்தில், தான் தாராவின் வீட்டுக்கு வந்த காரணத்தைப் பூர்வ பீடிகையுடன் நிதானமாகச் சொல்லக்கூடிய நிலையில் அப்போது நாராயணன் இல்லை.

"தூங்குவதற்கு நேரம் இல்லை. அவசியமான சாமான்களை எடுத்துக் கொண்டு நீ உடனே என்னுடன் புறப்பட்டுவர வேண்டும்" என்று சுருக்கமாகக் கூறினான் நாராயணன்.

"இந்த மழையிலா! எங்கு போவது! எதற்காகப் போவது!" என்று கேட்டாள் தாரா. தான் காண்பது கனவு என்றே அவளுக்குத் தோன்றியது.

"ஏன்! ஸ்டேஷனுக்குச் சென்று விட்டால் விடியற்காலம் புறப்படும் பாசஞ்சர் வண்டியில் நாம் சென்னைக்குப் புறப்படலாம்" என்றான் நாராயணன்.

"ஓஹோ! சரியான திட்டம் போட்டுக் கொண்டு தான் இங்கே வந்திருக்கிறீர்கள்!" என்றாள் தாரா ஏளனமாக. நாராயணனின் கூற்றைக் கேட்ட அவளுக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை!

"ஏன் தயங்குகிறாய்! இன்றோடு நம் இருவருடைய கஷ்டங்களும் தீர்ந்து விட்டன. இந்தப் புயல், பெரு மழையுடன் நமது பழைய வாழ்க்கை முடிந்து புதிய வாழ்க்கை ஆரம்பமாகிறது. 'நாம் இவ்வளவு கஷ்டப் பட்டிருக்க வேண்டாமே! முன்பே என்னை நீங்கள் இங்கு அழைத்து வந்திருக்கக் கூடாதா!' என்று நீயே ஒரு மாதம் கழித்து என்னிடம் சொல்லாவிட்டால், நான் என் காதை அறுத்துக் கொள்கிறேன், பார்!" என்றான் நாராயணன்.

"ஐயா, நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் இந்த ஊரிலேயே பிறந்து இங்கேயே வளர்ந்தவள். நரசிங் இன்னும் ஒரு வருஷத்தில் திரும்பி வந்து விடுவார். இந்த இடத்தை விட்டுச் செல்ல நான் விரும்பவில்லை. ஆகையால், உங்களுடன் வருவேன் என்ற ஆசையை ஒழித்து விடுங்கள். நேற்றிரவே உங்களிடம் நான் அதிகப் பேச்சுக் கொடுக்காதிருந்தால், இந்த நிலைமை ஏற்பட்டிராது."

"தாரா! உன் திறமையும் சக்தியும் உனக்குத் தெரியவில்லை. உன்னிடம் நான் ஏதாவது பணம் அபகரிப்பதற்கு வந்திருப்பதாக நீ நினைக்க வேண்டாம். நீ ஒரு சிறந்த சினிமா நட்சத்திரமாகும் வரையில் நான் உன்னைப் பராமரித்து வருவேன். அதற்கு வேண்டிய பெருந் தொகை இதோ இருக்கிறது, பார்!" என்று கூறி நாராயணன் தன்னிடம் இருந்த நூறு ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய ஒரு கட்டை எடுத்துக் காட்டினான்.

"அது எப்படியிருந்தாலும் இந்த மழையில் நான் உங்களுடன் வர முடியாது. எல்லா விஷயங்களையும்பற்றி நாளைக் காலையில் விவரமாகப் பேசிக் கொள்ளலாம்" என்றாள் தாரா.

"இனி நான் இவ்வாறு வேலை யில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கப் போவதில்லை. உன்னை நீ வறுமையில் ஆழ்த்திக்கொண்டிருப்பதையும் நான் சகிக்கப் போவதில்லை. நீ விரும்பினாலும் விரும்பா விட்டாலும், உன்னை இன்றிரவு அழைத்துச் செல்லத் தீர்மானித்து விட்டேன். நீ மறுத்தால் உன்னை அழைத்துச் செல்லும் விஷயத்தில் நான் பலாத்காரத்தையும் உபயோகிக்கத் தயங்கப் போவதில்லை......"

நாராயணன் மேற்கொண்டு ஏதோ சொல்லுவதற்குள், கதவை யாரோ பலமாகத் தட்டும் சப்தம் கேட்டது. அவ்வளவுதான்! நாராயணன் தாரா இருவரும் நடு நடுங்கி விட்டார்கள்.

"கதவைத் திறக்காதே! இங்கு உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று சொல்லி விடு" என்று கெஞ்சினான் நாராயணன்.

கதவைத் தட்டும் சப்தம் அதிகமாயிற்று. அதைத் தொடர்ந்து, "தாரா, கதவைத் திற!" என்ற இடியோசை போன்ற குரலும் கேட்டது.

"ஐயோ! என்ன செய்வேன்! நரசிங் வந்து விட்டார்" என்று பதறினாள் தாரா.

நரசிங்கின் சுபாவம் அவளுக்குத் தெரியும். இன்னும் சில நிமிஷங்களில் கதவைத் திறக்காவிட்டால், கதவை நரசிங் உடைக்கத் தயங்கமாட்டான். கதவைத் திறந்த பின் உண்மையைக்

கூறி அவனைச் சமாதானப் படுத்தலாம் என்று எண்ணிக் கதவைத் திறந்தாள்.

"இன்னும் ஒரு வருஷம் கழித்து வருவாய் என்றல்லவா நினைத்தேன்!" என்றாள் தாரா.

"ஓஹோ! நான் அதற்குள் வந்தது உனக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது!" என்று அதட்டினான் நரசிங்.

அதே சமயம் அவனுடைய பார்வை நாராயணன் மீது விழுந்தது.

அவ்வளவுதான். சிங்கம் மாட்டின்மீது பாய்வதுபோல் நரசிங் நாராயணன்மீது பாய்ந்தான். அடுத்த கணம் மிருகத்தனமாக நாராயணனைத் தாக்கத் தொடங்கினான். இடி விழுவதுபோல் கன்னத்திலும் தலையிலும் விழுந்த அந்த அடி நாராயணனை நிலை தவறச் செய்து விட்டது. அவன் கீழே விழுந்து மூர்ச்சையானான்.



மறு நாள் காலையில் நரசிங்கைக் கைது செய்வதற்காகப் போலீசார் வந்தபோது தாரா மூர்ச்சையாகக் கிடந்தாள். சிறையிலிருந்து தப்பிவந்ததாகவும், சேஷய்யா வீட்டிலிருந்து இரண்டாயிரம் ரூபாயைத் திருடியதாகவும் அவன்மீது இரண்டு குற்றங்கள் சாட்டப்பட்டன. அவன் மறுபடியும் சிறைக்கு அனுப்பப்பட்டான்.

நாராயணனுக்கு உடம்பு சொஸ்தமாகச் சில நாட்கள் சென்றன. அவன் குணமடைந்ததும் எங்கேயோ சென்று விட்டான். வேலை கிடைக்கும் வரையில் தன்னிடமே இருக்கும்படி சேஷய்யா எவ்வளவோ சொல்லியும் நாராயணன் கேட்கவில்லை. அவன் மனச்சாட்சி அவனை உறுத்தியது.

தாரா ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்தபின் அவளது வெற்றிலைப் பாக்குக் கடையில் மீண்டும் எப்போதும் போல் வியாபாரம் நடந்துகொண்டிருந்தது. உண்மையை விசாரித்து அறியாமல் தன்னிடம் மிருகத்தனமாக நடந்துகொண்ட நரசிங் மீது தாராவுக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. அதற்குத் தகுந்தாற் போல் சில வாரங்களுக்குப் பின், நரசிங் சிறையில் தூக்கிட்டுக் கொண்டு மாண்டான் என்ற செய்தி தாராவுக்குக் கிடைத்தது. ஆனால் இதுபற்றிய செய்தி நாராயணனுக்குத் தெரியாது.

அதிலிருந்து தாரா நாராயணனைப் பற்றிய இன்பக் கனவில் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தாள். வடக்கே சென்ற நாராயணனும் தன் இன்பக் கனவில் தாராவை மறக்கவேயில்லை!

வட்டமேஜை

"தமிழோசை"

லண்டனிலிருந்து வாரந்தோறும் வியாழக்கிழமையன்று அரை மணி நேரத் தமிழ் நிகழ்ச்சி ஒலிபரப்பப் படுகிறது. "தமிழோசை" என்ற தலைப்பின் கீழ் இந்நிகழ்ச்சிகளை 19. 25 மீட்டர் வரிசைகளில் இந்திய கடிகாரப்படி 7-15 மணி முதல் 7-45 மணி வரை கேட்கலாம்.

"தமிழோசை" கலாசார அரசியல் துறைகளில் சிரத்தை கொண்ட ஒரு வாரப் பத்திரிகை போல் சிறுவப் பெற்றுள்ளது. இங்கு மக்கள் வாழும் முறை, பிரிட்டனில் ஜனநாயகம் தொழில் படும் விதம், அதற்கான ஸ்தாபனங்கள், புதிதாக வெளிவரும் புத்தகங்கள், சினிமாக்கள், நாடகங்கள், முதலியவை பற்றி விமர்சனம், லண்டனில் வாழும் இந்தியர் சம்பந்தமான செய்திகள், இங்கு விஜயம் செய்யும் தமிழ்ப் பிரமுகர்களுடன் பேட்டி—இது போன்றவை "தமிழோசை" நிகழ்ச்சிகளில் இடம் பெற்றிருக்கின்றன.

ஜனவரி மாதம் ஆரம்பமாகும் மூன்றுமாதப் பருவத்தில் இந்தியர்கள் லண்டனிலிருந்து விரும்பிக் கேட்கக்கூடிய பல ரஸமான பேச்சுகளும் அமைக்கப் பெற்றுள்ளன. சென்னை போன்ற பல ஆசிய நகரங்கள் இப்போது வெகு வேகமாக வளர்ந்து பெருகி வருகின்றன. இவ் வளர்ச்சி காரணமாக பல புதுப் புது நகராண்மைப் பிரச்னைகள் எழுந்த வண்ணம் இருக்கின்றன. இப்பிரச்னைகளைக் கவனித்து நகரம் சிறந்த முறையில் வளரத் திட்டம் போட, அன்னிய நாடுகளின் அனுபவத்தை ஆராய்ந்தால் அவைகளின் வரலாறு நமக்குப் பல யோசனைகளைக் கூறும். உதாரணமாக, லண்டன் இப்மாதிரி அபரிமிதமாய் வளர்ந்துள்ள ஒரு மாபெரும் நகரம். லண்டன் நகராண்மைக் கழகம் எப்படி வேலை செய்கிறது என்பதை "லண்டன்மா நகரம்" என்ற பேச்சுத் தொடரில் தமிழோசையில் கேட்டு மகிழலாம்.

அடுத்த வருஷ ஆரம்பத்தின் முதல் மூன்று மாதங்களில் ஒலி பரப்பப்பட விருக்கும் வேறு சில நிகழ்ச்சிகள் "அன்றாட வாழ்க்கை" என்ற தொடரில் வருகின்றன. பிரசித்தி பெற்ற புத்தகாலயங்கள் பற்றி ஒரு பேச்சு வரிசையும் தமிழோசையில் இடம் பெற்றிருக்கிறது.

கலையை எவ்வாறு எளிதாக்கிப் பொது மக்கள் ஆதரவு பெறச் செய்யலாம்? மக்கள் ஆதரவு திரட்டப் பெற்றிருக்கும் களியாட்டங்களை எவ்வாறு கலைப் பண்பு நிறைந்ததாகச் செய்வது? இந்த இரு கேள்விகள் கலைஞரை எல்லா நாடுகளிலும் எல்லாக் காலத்திலும் சர்ச்சைகளில் ஆழ்த்தி வந்துள்ளன. இத்துறைகளில் பிரிட்டிஷ் கலைஞர் பல பரிசோதனைகளைச் செய்துள்ளனர். இம்முயற்சிகளை விளக்குவது "கலையும் களியாட்டமும்" என்ற விமர்சனத் தொடர்.

"தமிழோசை" நிகழ்ச்சிகள் பற்றி நேயர்கள் அபிப்பிராயங்களும் யோசனைகளும் வரவேற்கப் படுகின்றன. கடிதம் எழுத வேண்டுவோர் நேராக BBC Eastern Service., 200 Oxford St. London W I என்ற விலாசத்திற்கோ, Asst., Representative, Post Box 109, New Delhi. என்ற விலாசத்திற்கோ எழுதலாம்.

லண்டன்
12—12—51

கு. ப. ரங்காச்சாரி



கிருஷ்ணா

புரொபஸர் சந்தானம் மேல் மாடியில் உள்ள தமது அறையில் குறுக்கும் நெடுக்குமாய் உலாவிக் கொண்டிருந்தார். அடிக்கடி அவருடைய நெற்றியில் விழுந்து மறையும் சுருக்கங்களும், கை விரல்களின் அசைவும், அவருடைய மனம் ஏதோ ஒரு பெரிய பிரச்னையில் ஈடுபட்டிருக்கிறது என்பதைப் பறையறிவித்தன. சிந்தனை அவருள்ளத்தில் ஆற்று வெள்ளம் போலச் சுழியிட்டு ஓடியது. அவர் மனதைத் தீராத வேதனையில் ஆழ்த்திய பிரச்னை தான் என்ன?

தலை நிமிர்ந்த சந்தானத்தின் கண்களில் ஜன்னல் வழியாக, வானத்தில் பிரகாசிக்கும் தேய்பிறைச் சந்திரன் தென்பட்டான்.

"இந்தத் தேய்பிறைச் சந்திரனைப் போலவே நானும் இனித் தேய்ந்துபோக வேண்டியவன்தானே! இன்று அரை உருவம்; நாளை அதிலும் குறைவு; மறுநாள் பின்னும் தேய்வு; அப்புறம், முடிவில்?...... ஒன்றுமில்லை! ஒரே இருட்டு.

"ஆம்! ஒரே இருட்டு. இனி எனக்கு வாழ்வில் ஒளியென்பது அவசியம்தானா? அந்தச் சந்திரனைப் போலவே தேய்ந்து, மரணத்தின் வாயிலை நெருங்க வேண்டியவனல்லவா நான்?

வாழ்வில் ஒளி! ஆம்! என் வாழ்வில் அவள் ஒரு ஒளியாக, ஜகஜ்ஜோதியாகத்தான் விளங்கினாள். ஒளியென்றால் நிழலும் இருக்கத்தானே செய்யும்! ஒளி மறைந்துவிட்டது. இருளின் பயங்கர நிழலும் என்னை வந்து சூழ்ந்துகொண்டு விட்டது. அப்படிச் சூழ்ந்த இருள் என்னை மட்டுமா பாதித்தது? என்னுடன் என் சந்தானங்களாகிய எட்டுக் குழந்தைகளையும் கூடவல்லவா பாதித்து விட்டது!"—தேய்பிறைச் சந்திரனைப் பார்த்த சந்தானத்தின் மனத்திலே இவ்வாறான எண்ணங்கள் குமிழியிட்டன.

சந்தானத்திற்கு வயது அப்படி ஒன்றும் அதிகம் ஆகிவிடவில்லை. இருந்திருந்தும் நாற்பத்தைந்தைக்கூட இன்னும் அவர் எட்டிப் பிடிக்கவில்லை. அதற்குள்ளாகவே எட்டுக் குழந்தைகள்! இது விஷயத்தில் அவருக்கே கூடக் கொஞ்சம் லஜ்ஜைதான்.

"என்னப்பா! உனது பெயருக்கேற்ற படியே நடந்து கொள்கிறாயே!" என்று சகபாடிகள் உல்லாசமாகக் கேட்கும்போது ஒரு சிறிய புன்சிரிப்பைத்தான் அவரால் அவர்களுக்குப் பதிலாக அளிக்க முடிந்தது. ஆனால் அவர் மனைவி லக்ஷ்மிக்கோ......? அத்தனை குழந்தைகளும் நவநிதிக் குவியலாகத்தான் தோன்றின.

குழந்தைகளும் குட்டிகளுமாக மங்களகரமாகப் பூத்துக் குலுங்கிய சந்தானத்தின் வாழ்க்கையில் கண் பட்டுவிட்டது போலும்! இல்லாவிட்டால் ஏழு பிரஸவங்களுக்கும் தன் சரீரத்தை ஈடு கொடுத்து எழுந்து உயிருடன் நடமாடிய லக்ஷ்மியை எட்டாவது பிரஸவம் சதி செய்வானேன்?

அது ஒருவேளை விதியின் செயலாகவும் இருக்கலாம்!

எப்படியானால் என்ன? சந்தானத்தின் ஆருயிர்த் துணைவி மறைந்து விட்டாள்! போகும்பொழுது கடைசியாக அவள் அவரிடம் வாங்கிய வாக்குறுதி, "குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்! அவற்றுக்காக உங்கள் நலத்தைக் கூடத் தியாகம் செய்யத் தயங்காதீர்கள்!" என்பதுதான்.

அவரும் வாக்குக் கொடுத்து விட்டார்! ஆனால், அந்த வாக்கை அவரால் காப்பாற்ற முடியுமா? இந்த இடம்தான் அவருடைய பிரச்னையின் ஆரம்பம்.

மூத்த பெண் கலோசனுவுக்கு வயது பதினேழு ஆகிவிட்டது. நல்ல கெட்டிக்காரி. பி.ஏ. பாஸ் செய்திருந்தாள். நல்ல திடசித்தமும் தன்னம்பிக்கையும் வாக்குச் சாதுர்யமும் உள்ளவள். அன்னையின் பிரிவுக்காக அவள் வருந்தினாலும், நிர்வாகத் திறமையுள்ள அவளுக்குத் தன் தங்கை தம்பிகளைத் தேற்றி வளர்ப்பதைப் பொறுத்தவரை எவ்விதமான அதைரியமும் தோன்றவில்லை.

சந்தானத்திற்கும் தன் பெண்ணின் கெட்டிக்காரத் தனத்தைக் குறித்து உள்ளூறத்

திருப்திதானென்றாலும், அவருடைய சொந்த விஷயத்திலுள்ள ஆசாபாசம், கடந்த கால இன்ப நினைவு, எல்லாமாக அவரை முன்னும் பின்னும் போகவிடாமல் குழம்ப வைத்தன.

சம்சாரப் படகைத் தன் பெண்ணின் உதவியினால் எப்படியோ ஆறுமாத காலம் வரை தள்ளி விட்டார். ஆனால் அதற்கு மேல் அவரால் முடியவில்லை. ஏனெனில் லக்ஷ்மி உயிருடன் இருக்கும் சமயம் இனிப்பாய் இனித்த அவரது வாழ்க்கை, அவளது மறைவுக்குப் பின் வேம்பாய்க் கசந்தது. மனோ தத்துவத்தைக் கரைத்துக் குடித்த அவருக்கே விளங்காத நிலையில் தவித்தது அவருடைய மனம். நாள் ஆக ஆகத் தம்முடைய வாழ்க்கையின் மறுமலர்ச்சியில் அவருக்குச் சபலம் தட்டியது.

இந்த மன நிலையை எப்படிச் சுலோசனாவிடம் வாய் விட்டுச் சொல்லுவது? அவள் இதைக் கேட்டு எப்படிச் சகிப்பாள்? அல்லது தன்னைப் பற்றித்தான் என்ன நினைப்பாள்? இல்லை, ஊரார்தான் என்ன சொல்வார்கள்? 'வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்து விட்டு, இந்த மனிதனுக்கு இப்படியும் புத்தி போகுமா?' என்று எண்ணி நகைக்க மாட்டார்களா? 'எட்டுக் குழந்தைகளைப் பெற்ற பிறகுமா அப்பாவுக்கு இந்தச் சபலம்?' என்று சுலோசனா கேவலமாகத் தானே நினைப்பாள்! மேலும் லக்ஷ்மிக்குக் கொடுத்த வாக்குறுதி என்னவாகிறது?......

வாக்குறுதி எப்படி இதைப் பாதிக்கும்? லக்ஷ்மி என்னை இரண்டாந்தரம் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாதென்று கேட்டுக் கொண்டாள்? கல்யாணம் செய்து கொண்டால் என்ன? குழந்தைகளை நான் கைவிட்டு விடவா போகிறேன்? அது ஒரு நாளுமில்லை. சுலோசனா இதற்குச் சம்மதிக்க வேண்டும்.

"என்னப்பா வேண்டும்? ஒரு குரல் கொடுத்தால் நான் மாடிக்கு வந்திருப்பேனே!" என்று அன்புடன் கேட்டவாறே இடுப்பில் கைக் குழந்தையுடன் அவர் முன் வந்து நின்றாள் சுலோசனா.

"ஒன்றும் வேண்டாம், சுலோசனா! ஒரு விஷயத்தைப் பற்றி......"

"......பேசவேண்டுமா, அப்பா!" என்று கேட்டுக் கொண்டே அவரெதிரில் தானும் அமர்ந்து கொண்டாள் சுலோசனா.

"ஆமாம், சுலோசனா! விஷயம் மிகவும் முக்கியமானது. நீ சிறு பெண்தான். ஆனாலும் உன்னிடம் கேட்காமல்......"

"என்ன அப்பா, இது? பெரிய பீடிகையாகப் போடுகிறீர்களே!"

புரொபஸர் தயங்கினார். விஷயத்திற்கு வரவே அவருடைய மனம் கூசியது.

"சுலோசனா!......"

"ஏன், அப்பா?"

"நீ என்னை மனப்பூர்வமாய் நேசிக்கிறாய் அல்லவா?"

"உங்களுக்கு இதைப் பற்றிச் சந்தேகம் ஏற்படக் காரணம்?"

"சேச்சே! அதெல்லாம் ஒன்றுமில்லை. எல்லாம் ஒரு காரணமாகத்தான் கேட்கிறேன். நான் கேட்பதற்கு மட்டும் பதில் சொல். என் சந்தோஷத்தைத்தானே நீ விரும்புவாய்?"

"ஆமாம்!" என்று தலையை அசைத்தாள் சுலோசனா.


"அப்படியானால் என் வாழ்க்கையை வளமுறச் செய்வதில் உனக்கும் திருப்திதானே?"

"அப்பா!......உங்கள் கேள்வியின் உள் அர்த்தம் எனக்குப் புரிந்து விட்டது. நீங்கள் சந்தோஷமாய் இருப்பதுதான் எனது விருப்பம். உங்கள் வாழ்க்கையில் குறைபாடு

சுலோசனாவின் வார்த்தைகளுக்குச் சந்தானம் அவ்வளவு மதிப்பு கொடுத்திருந்தார். பதினேழு வயதுக்குள் அவள் எண்பது வயதுக் கிழவியின் உலக அனுபவத்தையும் உள்ளடக்கிக்கொண்டு ஒளி வீசும் 'கெம்பு' கல்லைப் போலல்லவா திகழ்ந்தாள்! ஆறு மாத காலமாக அவள் குழந்தை குட்டிகளுடன் சிறிதும் முகம் சிணுங்காமல் ஒழுங்காகக் குடும்பத்தை நிர்வகித்து வரும் அழகு ஒன்றே போதாதா, பிறர் அவளிடம் மதிப்பு வைப்பதற்கு?

மதிப்பு வாய்ந்த தம் பெண்ணின் பெருமையைக் குறைக்கப் புரொபஸர் விரும்பவில்லை. அவளையும் கலந்து ஆலோசித்துத் தம் விவாகத்திற்கு ஒரு முடிவு தேட நிச்சயித்து அவர் மெள்ள மாடியினின்றும், ஒவ்வொரு படியாகக் கீழே இறங்கி வந்து ஸோபா ஒன்றின்மீது ஆயாசத்துடன் அமர்ந்திருந்தார். அவர் முகம் தீராக் கவலையில் ஆழ்ந்திருந்தது.





போலீஸ்காரன் :- அண்ணே, பயப்படாதே! நான் திருடன் தான்! சும்மா போலீஸ்காரன் வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறேன்!

திருடன் :— ரொம்ப சௌகரியமாய்ப் போயிற்று. நான் போலீஸ்காரன் தான்! திருடன் வேஷம் போட்டுக் கொண்டு வந்திருக்கிறேன்!

ஒன்றுமில்லாமல் இருப்பதுதான் எனக்கும் திருப்தியை அளிக்கும். இதற்கு என்னிடம் தாங்கள் யோசனை கேட்க வேண்டியதே இல்லையே! நான் என்ன உங்கள் கல்யாணத்தைத் தடுக்கவா போகிறேன்?"

புரொபஸரின் முகம் அசடு தட்டியது.

"இல்லை......வந்து......"

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம், அப்பா! உங்கள் மனதிற்குப் பிடித்த பெண்ணைச் சீக்கிரம் கல்யாணம் செய்து கொள்ளுங்கள். அவளை இந்த வீட்டின் எஜமானியாக வரவேற்க நான் எப்போதும் சித்தமாக இருக்கிறேன்."

"உண்மையாகவே இதைச் சொல்கிறாயா, சுலோசனா?"

"உண்மைதான்; என் சுபாவம் உங்களுக்குத் தெரியாததா? ஆனால் ஒரு விஷயம்!"

"என்ன விஷயம், சுலோசனா?"

"எனக்கும் என் இஷ்டப்படி நடக்கத் தாங்கள் சுதந்திரம் அளிக்க வேண்டும்!"

"எந்த விஷயத்தில்?"

"ஏன்? என் கல்யாண விஷயத்தில்தான்!"

புரொபஸர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"என்ன? உன் கல்யாணமா?"

"ஆம், அப்பா!"

"வாஸ்தவம்தான்! செய்ய வேண்டியது அவசியம்தான். தாயற்ற பெண்ணாகிய உன்னை நான் இது விஷயத்தில் நிர்ப்பந்திக்கப் போவதில்லை. உனக்குப் பிடித்த மணாளனை நீ மணந்து கொள்ளலாம்."

"நிறுத்துங்கள், அப்பா! எனக்கென்று நான் இதுவரை யாரையும் தேர்ந்தெடுக்கவில்லை. நான் சொல்லுவதை முழுவதும் கேட்காமல் தப்பர்த்தம் செய்துகொண்டுவிடாதீர்கள். நான் கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை. அதற்குத்தான் எனக்குத் தாங்கள் சுதந்திரம் அளிக்க வேண்டும்!"

"என்ன? கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லையா? ஏன், சுலோசனா?" என்று தயக்கத்துடன் கேட்டார் புரொபஸர்.

"ஏன்? பின் என்ன செய்வது? ஒருவருடைய தியாகத்தின் அஸ்திவாரத்தின் மீது தானே மற்றவருடைய சந்தோஷ மாளிகையைக் கட்ட வேண்டும்?" என்றாள் சுலோசனா.

"இது என்ன புதிர், சுலோசனா?"

"புதிரல்ல, அப்பா! உங்களுடைய சந்தோஷ வாழ்க்கையை விரும்பும் நான் என்னையும் அதே வாழ்க்கைப் பந்தத்திற்கு உட்படுத்திக் கொண்டால், பிறகு என் தம்பி தங்கைகளின் கதி என்ன ஆவது? பிறந்த நான்காம் நாள் அறையில் வைத்து என் கையில் ஏந்திய பச்சிளம் பாலகனுக்கு இன்று ஏழு மாதம்தானே ஆகிறது? அவனைப் பெரியவனாக்கி விடும் வரையிலுள்ள பொறுப்பு என்னைச் சேர்ந்ததல்லவா!" என்றாள் சுலோசனா. அவள் குரல் கம்மியது.

"சுலோசனா! நீ ஏன் இப்படி உளறுகிறாய்? நான் இல்லையா? குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளாமல் கைவிட்டு விடுவேனா?" என்று கேட்டார் புரொபஸர்.

"உங்களிடம் எனக்கு நம்பிக்கை யில்லாமலில்லை, அப்பா! ஆனால் குழந்தைகளை நீங்கள் கவனித்துக் கொள்வதென்றால், எந்த லட்சியத்தைக் கருதி நீங்கள் மணம் செய்து கொள்ள விரும்புகிறீர்களோ, அந்த லட்சியம் நிறைவேறாது. அதேபோல நான் கல்யாணம் செய்து கொண்டாலும் குழந்தைகளின் கதி அதோகதிதான். எனக்கு வரப்போகும் கணவன் இந்தக் குழந்தைகளையும் சேர்த்துப் பரிபாலிக்க உடன்படுவானென்பது என்ன நிச்சயம்? வாழ்க்கை இன்பத்தின் முதல்படியில் காலை வைக்கும் அவனுக்குக் குழந்தைகள் ஒரு பெரிய இடையூறாகத்தானே இருக்கும்? உங்களுக்கோ எங்களையும் பரிபாலித்துக் கொண்டு, புது வாழ்க்கையிலும் இன்பம் காணுவதென்பது கூழுக்கும் மீசைக்கும் ஒருங்கே ஆசைப்படுவது போலத்தான். ஆகவே எவ்வகையிலும் நான் விவாகம் செய்து கொள்வதென்பது உசிதமில்லை" என்றாள் சுலோசனா தீர்மானமான குரலில்.

"சுலோ! போதும், போதும், நிறுத்து அம்மா!" என்றார் சந்தானம். அவர் கண்களில் நீர் மல்கி யிருந்தது.

"சுலோ! என் செல்வமே! என் முட்டாள்தனமான பிரச்னையை உன் பதில் தீர்த்து வைத்து விட்டது. என்னுடைய சபல சித்தமும் தெளிந்து விட்டது" என்று கூறியபடியே ஸோபாவிலிருந்து எழுந்தார் புரொபஸர் சந்தானம். அவருக்கு இதுகாறும் தன் மனதில் அழுத்திக் கொண்டிருந்த மலையளவு பாரமும் கீழே இறங்கிவிட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

சுலோவின் இடுப்பிலிருந்து தன்னை நோக்கித் தாவிய தன் செல்வக் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டார். அந்தத் தெய்விகமான ஸ்பரிசம், இதுவரையிலும் கிட்டாத ஒரு சாந்தியை அவருக்கு அளித்தது.

விசைச் சக்தியின் வேகம்



நீங்களும் பெறுக

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்



சிரமமான வேலை நிலையிலும், சளைக்காத உணர்ச்சியிருக்கும் போதுதான் நீங்கள் திடமான ஆரோக்யம் உள்ளவரென்பதைக் குறிக்கும். சளைக்காத உணர்ச்சி பெறுவதற்கு, பிரதி தினமும் போஜனத்தின் அங்கமாக வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுவதைத்தவிர சிறந்த தொன்றுமில்லை. தேக வலுவூட்டுவதற்கு அத்யாவசியமான பொருள்கள் நிறைந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்ட், வேலை செய்வதற்கான திராணியை பெருக்கி, சோர்வு, ஜலதோஷம், இருமல் மற்றும் இதர நிலைமைகளுக்கு இடம் கொடாதபடி தேகத்திற்கு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

உங்கள் குடும்பம் முழுவதற்கும் இப்பொழுதே வாங்கி விடுங்கள்.


WATERBURY'S COMPOUND

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களைத் தெம்புடன் வைத்திருக்கும்

உங்கள் புன்னகை பிரகாசிக்க —





— விஸ்டம் உபயோகியுங்கள்

சரியான உருவில் அமைந்துள்ள நைலான் டூத் பிரஷ்

சிறுவர்கள் கூட, விஸ்டம் டூத் பிரஷ்தான் உபயோகிக்க வேண்டும். சிறுவர்களுக்கான விசேஷ சிறிய சைஸ் விஸ்டம், சிறுவர்களின் சின்னஞ் சிறு பற்களை ஆரோக்கியமாகவும், பிரகாசமாகவும் வைத்திருக்க உதவுகிறது. சாஸ்திரிய முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ள நைலான் குஞ்சங்கள் இக்கட்டான பல் இடுக்குகளிலும் புகுந்து சுத்தம் செய்கிறது. பிரஷின் கைப்பிடியின் அமைப்பு பற்களை சுலபமாக, முப்புறமாக சுத்தம் செய்ய உதவுகிறது. சிறுவர்களுக்கு ஒரு பிரயோசனமான பரிசான விஸ்டம் டூத் பிரஷ் தூசி தும்பும் புகாத விசேஷ உறைகளில் விற்கப்படுகிறது.

[illegible]: ஜே. எல். மாரிஸன், ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிமிட்., தபால் பெட்டி 6537, பம்பாய் 26 & [illegible].

WT. 26



6. நான் என்ன பைத்தியமா?

செங்கம்மாவைக் கண்டதும் பொன்னி முதலில் மிரண்டு விட்டாள். ஆயினும் அவள் தன் மனதைத் திடப்படுத்திக் கொள்ள அதிக நேரம் ஆகவில்லை.

“இந்த நிசி வேளையில் மாடியில் உனக்கு என்ன வேலை!” என்று சீறினாள் செங்கம்மா.

“எலி வளை போன்ற அந்த அறையில் யாரால் படுத்து நிம்மதியாக உறங்க முடியும்! புழுக்கம் உயிரை வாங்குகிறது. கொஞ்சமாவது காற்று வேண்டாமா! மாடியில் ஏதாவதொரு இடத்தில் முடங்கிக் கிடக்க வசதி இருக்குமா என்று பார்த்தேன். இந்தச் சனியன் பிடித்த வீட்டில் அங்கேயும் சௌகரியமில்லை” என்றாள் பொன்னி.

செங்கம்மா ஒரு தடவை ஏற இறங்கப் பொன்னியைப் பார்த்தாள். பொன்னியின் முகக் குறியிலிருந்து அவள் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை. நடுநிசி வேளையில் பொன்னியோடு தர்க்கம் செய்வதும் அவளுக்கு உசிதமாகப் படவில்லை. ஆகவே, “இந்த வீட்டில் எல்லா இடமும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். உனக்குக் கொடுத்த இடத்தில் நீ படுத்துக் கொள்ள வேண்டியதுதான்......” என்றாள்.

“வேறு வழி! இந்த வீட்டில் எல்லா இடமும் ஒரே சொர்க்கமாகத்தா னிருக்கிறது......” என்று சொல்லிவிட்டுப் பொன்னி தன் அறையை நோக்கி நடந்தாள். செங்கம்மா சிறிது நேரம் அவளையே நின்று பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் தன் இடத்திற்குச் சென்றாள்.

மறுநாள் காலையில் செங்கம்மா பொன்னியிடம் வந்து, “எஜமானியம்மா உன்னை நந்திதுர்க்கம் வரையில் போய்ச் சில சாமான்கள் வாங்கிவர அனுப்பச் சொன்னார்கள். போய்விட்டுச் சீக்கிரமாக வந்து சேரணும், தெரியுமா!” என்றாள். பொன்னி என்னென்ன சாமான்கள் வேண்டுமென்பதைக் கேட்டுக் கொண்டு பணத்தையும் வாங்கிக் கொண்டு கிளம்பினாள்.

பொன்னி எத்தகைய சந்தர்ப்பத்தை விரும்பினாளோ, அத்தகைய சந்தர்ப்பம் கடவுள் அருளால் அவளுக்குக் கிடைத்து விட்டது.

பொன்னி நந்திதுர்க்கத்திற்கு வந்து, வேண்டிய சாமான்களை யெல்லாம் வாங்கிக் கொண்டு டாக்டர் பரசுராமனின் வீட்டைத் தேடிக் கொண்டு சென்றாள். அப்பொழுதுதான் பரசுராமன் வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்திருந்தார்.

அவர் பொன்னியைப் பார்த்ததும் சிரித்துக் கொண்டே “வாம்மா! நீ குருவிக்குளத்திலிருக்கும் பெண்தானே! விஷமக்காரப் பெண்ணாயிற்றே! எங்கேயம்மா வந்தாய்! உன் பாட்டிக்கு ஏதாவது உடம்பு சரியாக இல்லையா!” என்று கேட்டார்.

பொன்னி புன்முறுவல் செய்தவண்ணம், “என் பாட்டிக்கு உடம்பு குணமாகத் தானிருக்கிறது. நான் உங்களோடு வேறொரு சமாசாரம் பேசுவதற்காக வந்தேன்” என்றாள். இதைக் கேட்டதும் டாக்டர் வியப்புடன் அவள் முகத்தைப் பார்த்தார்.

“நான் இப்பொழுது சொக்கிக் குளத்திலுள்ள ராஜாளி மடத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறேன்” என்று சொல்லி நிறுத்தினாள் பொன்னி. இதைக் கேட்டதும் டாக்டரின் திகைப்பு இன்னும் அதிகமாகியது. அவர் பரிதாபத்தோடும் துடிப்போடும் பொன்னியைப் பார்த்து, “ராஜாளி மடத்தில் வேலை செய்கிறாயா...! உனக்கு ஏனம்மா இந்தக் கஷ்டம்...!” என்று கேட்டார்.

“எனக்கு இதெல்லாம் கஷ்டமில்லை. என்னை விடக் கஷ்டப் படக்கூடிய பெண்களும் இந்த உலகத்தில் இருக்கிறார்களோ என்பதை நினைக்கும்

போதுதான் கஷ்டமாயிருக்கிறது. ராஜாளி மடத்திலிருக்கும் வேதாவின் கஷ்டத்தை என் கண்ணால் பார்த்த பிறகு என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியுமா!'' என்றான் துயரத்தோடு.

டாக்டர் பரபரப்போடு, ''ஆமாம். ஒருவராலும் சகித்துக் கொண்டிருக்க முடியாதுதான். நீ அவளைப் பார்த்தாயா, என்ன!'' என்று கேட்டார்.

''பார்த்தேன். அவளோடு பேசினேன். அதனால்தான் இப்போது உங்களிடம் வந்தேன்...''

டாக்டருக்கு ஆச்சரியம் இன்னும் அதிகரித்தது. ''அப்படியா!...நிற்கிறாயே! இப்படி வந்து இந்த நாற்காலியில் உட்கார்ந்து எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லு!'' என்றார்.

பொன்னி அவருக்குச் சமீபமாகக் கிடந்த நாற்காலியில் அமர்ந்தான். டாக்டர் தன் பதட்டம் தணியாதவராய், ''வேதாவிற்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டதா!'' என்று கேட்டுவிட்டுப் பொன்னியின் வாயிலிருந்து எத்தகைய வார்த்தைகள் வருமோ என்ற துடிப்புடன் அவன் முகத்தையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஆமாம்! இப்பொழுது அவள் ஆபத்தான நிலையில்தான் இருக்கிறாள்!'' என்றான் பொன்னி சிரித்துக் கொண்டே.

டாக்டர் இதைக் கேட்டதும் துள்ளிக் குதித்தார். ''தெரியும். எனக்குத் தெரியும். அநியாயம்! இரக்கமற்ற ராட்சதத்தனம்!......'' என்ற வார்த்தைகள் அவர் வாயிலிருந்து நெருப்புப் பொறி போல் சிதறின. பிறகு அவர் தன் இரண்டு கைகளையும் சேர்த்துப் பிசைந்து கொண்டே ஒரு பெருமூச்சு விட்டார். பொன்னிக்கு டாக்டர் பரசுராமன் எவ்வளவு சாந்த குணமும், சரளமான சுபாவமும் கொண்டவரென்று நன்கு தெரியும். அவர் இப்படிப் பட்ட வார்த்தைகளை நெருப்புப் பொறி போலக் கக்கியது, பொன்னிக்கே சிறிது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அவர் மறுபடியும் அவனைப் பார்த்து, ''நீ எதற்காக இந்த வேதனையான விஷயத்தையெல்லாம் என்னிடம் சொல்ல வருகிறாய்...!'' என்றார் தர்ம சங்கடமான உணர்ச்சியில் சிக்கித் தடுமாறுகிறவர் போல்.

''எதற்காகவா!...அவளைக் கஷ்டத்திலிருந்து விடுவிக்க உங்கள் உதவி வேண்டும். நாம் இருவரும் சேர்ந்து எப்படியாவது அந்த நரகத்திலிருந்து, அங்கு இருக்கும் அந்த இரண்டு பேய்களிடமிருந்து அவளை விடுதலை செய்து விட வேண்டும். அதற்காகத்தான்......!'' என்றான் பொன்னி.

''அவளை விடுதலை செய்ய வேண்டியது நியாயந்தான். ஆனால் வழிதான் தெரியவில்லை. அவளை ஒருவருக்கும் தெரியாமல் கடத்திக் கொண்டு வருவதும் சட்ட விரோதமான காரியம். அதுவும் என்னைப் போன்ற கௌரவமான மனிதன் அப்படிச் செய்ய முடியாது. அவளை ஒரு ஒழுங்கான வழியில் அவர்களிடமிருந்து விடுதலை செய்யும் வழியை யோசிக்க வேண்டும்...ஆனால் எனக்கு ஒன்றும் வழிதான் புலனாகவில்லை...'' என்றார் டாக்டர் சிந்தனையில் வாழ்ந்தவராய்.

''எனக்குத் தெரியும் ஒரு ஒழுங்கான வழி. அந்த வழிதான் வேதாவிற்கு நிரந்தரமான சௌக்கியத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கக்கூடிய வழி'' என்றான் பொன்னி.

''உனக்குத் தெரியுமா! அதென்ன வழி!'' என்றார் டாக்டர் ஆவலோடு.

''நீங்கள் அவளைக் கல்யாணம் செய்து கொண்டு விடுங்கள்'' என்றான் பளிச்சென்று பொன்னி.

''அவளை நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமா...!''—டாக்டர் சிரித்துக் கொண்டார். சிறிது நேரம் யோசனை செய்த பிறகு, ''ஆம்! அதைத்தான் நான் செய்யலாம்!'' என்றார். அவர் முகத்தில் அவ்வளவு நேரமும் காணாத ஆர்வமும் சந்தோஷமும் அச்சமயம் நிரம்பியிருப்பதைப் பொன்னி கண்டான்.

ஆனால் அடுத்த கணமே சட்டென்று அவருடைய அந்த ஆர்வ உணர்ச்சி தணிந்து அடங்கியது. அவர் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே, ''ஆனால் அதுவும் அவ்வளவு எளிதாக நடக்கக் கூடியதில்லை, பொன்னி! அதிலும் எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன...'' என்றார் ஆழ்ந்த வருத்தத்துடன்.

''என்ன சிக்கல் இருக்கிறது...! உங்களுக்கு அவள் மீது உண்மையான அன்பு இருக்குமானால் நீங்கள் ஏன் ஒன்றைப் பற்றி லட்சியம் செய்ய வேண்டும்! நான் மாத்திரம் உங்களைப்போல் ஒரு ஆண் பிள்ளையாக இருந்தால் இப்படிப்பட்ட அக்ரமங்களை யெல்லாம் தெரிந்தும் சகித்துக்கொண்டிருக்க மாட்டேன். என் மீது அன்பும் ஆசையும் வைத்துள்ள ஒரு அழகான பெண்ணை எப்படிப்பட்ட சிக்கலிருந்தாலும், எப்படிப்பட்ட ஆபத்துக்கள் இருந்தாலும் பொருட்படுத்தாமல்



மீட்டுக் கல்யாணம் செய்து கொண்டு விடுவேன்..." என்றாள் பொன்னி பதட்டத்துடன்.

டாக்டர் கேலியாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பு பொன்னியின் அறியாமையை எண்ணிச் சிரிப்பது போல் இருந்தது. "ஆனால் பொன்னி, நீ டாக்டர் பரசுராமனைப் போன்ற கண்யமான ஆண் பிள்ளையாக இருந்தால் அது உன்னாலும் முடியாது. ஏனெனில் இது, ஒரு ராஜகுமாரன் ஏழு சமுத்திரங்களைத் தாண்டி இருபத்தி நான்கு குகைகளுக்குள் நுழைந்து, அறுபத்தி ஆறு ராட்சதர்களைக் கொன்று இரண்டு இறக்கையுள்ள தேவ கன்னியைக் கல்யாணம் செய்து கொண்ட கதையைப் போன்ற காரியம் அல்ல" என்றார்.

"நீங்கள் என்னைப் பரிகாசம் செய்யாதீர்கள். நான் ஒன்றையும் கதைபோல நினைக்க வில்லை. நானாக இருந்தால் எப்படி நடந்து கொள்வேன் என்றுதான் உங்களிடம் சொன்னேன்" என்றாள் பொன்னி சிறிது ரோசத்துடன்.

"எனக்குத் தெரியும், பொன்னி! மன வருத்தப்படாதே! நீ வேடிக்கையான பெண்ணாய் இருக்கிறாயே என்றுதான் நான் அப்படிச் சொல்லிச் சிரித்தேன். நான் வேதாவிற்கு எத்தகைய உதவி செய்ய முற்பட்டாலும் அது என் வாழ்க்கையைப் பாதிக்கும். அது தெரிந்திருந்தால் நீ..."

இதைக் கேட்டதும் பொன்னி திடுக்கிட்டு, "அது என்ன...!" என்று கேட்டாள்.

"அன்று இரவு நான் அந்த வீட்டில் வேதாவுடன் தனித்திருக்கும்போது மரகதமும் வேலைக்காரியும் பார்த்து விட்டார்கள். அது அவர்களுக்கு விபரீதமான சந்தேகத்தை உண்டாக்கியிருக்கிறது. மரகதம் நான் மறுபடியும் அந்த வீட்டு வாசற்படியில் காலடி எடுத்து வைக்கக் கூடாது என்று எச்சரிக்கை செய்திருக்கிறான். அதைத் தவிர, நான் வேதாவுடன் ஏதேனும் தொடர்பு வைத்துக் கொண்டால், அவர்கள் வீட்டுக்குச் சாரதாவிற்கு வைத்திய சிகிச்சை அளிக்க வந்தபோது இரவில் ஒருவருக்கும் தெரியாமல் வேதாவின் கற்புக்குப் பங்கம் ஏற்படும்படி நான் நடந்து கொண்டதாக அரசாங்க வைத்திய இலாக்கா வரையில் எட்டவிட்டு என் உத்தியோகம், வாழ்க்கை எல்லாவற்றையும் கெடுத்து விடுவதாக எச்சரிக்கை வேறு செய்திருக்கிறான். அவனை நான் வெறும் வாய்ப் பேச்சு வீரம் சாதாரண ஸ்திரீயாக நினைக்கவில்லை. அவன் எது வேண்டுமானாலும் செய்யக் கூடும்......" என்றார் டாக்டர் மிகவும் மனச் சங்கடத்தோடு.

"அப்படியா ....!" என்று சொல்லிப் பொன்னி ஒரு பெரு மூச்சு விட்டு விட்டு, "நான் அவனை அப்படி நினைக்க வில்லை. நீங்கள் கவலைப்படாதீர்கள். அவன் வார்த்தையை உலகத்தில் ஒருவரும் நம்ப மாட்டார்கள்......" என்றாள்.

"அப்படி நினைக்காதே! அதை நம்பவும் வழியுண்டு. அவள் பிறர் நம்பும் வகையில் தன் கதையை ஜோடிப்பாள். நான் நடு நிசியில் வேதாவின் அறையில் அவளோடு தனிமையில் இருந்தேன் என்பது உண்மைதானே! அதை இல்லையென்று மறுத்துக்கூற எனக்கோ வேதாவிற்கோ நெஞ்சுத் துணிவு வேண்டும். துணிந்து பொய் சொல்ல என் மனச்சாட்சி வேறு இடம் கொடுக்க வேண்டும்......"



"சரிதான். அதற்காக இதை அப்படியே விட்டு விட முடியுமா! என்னதான் அப்படி நேர்ந்து விடப் போகிறது! உங்கள் உயிரே போய் விடுமா!" என்றாள் பரிகாசமாகப் பொன்னி.

"என் உயிர் போய் விடாது. என் கௌரவமும் மதிப்பும் போய்விடும். நான் இவ்வளவு நாளாக டாக்டராவதற்காகப் படித்த படிப்பும், முயற்சியும் அனுபவமும் வீணாகி விடும்" என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, "இப்பொழுது புரிந்ததா உனக்கு! என்னுடைய நிலைமை! இதைத் தவிர இன்னும் வேறுவிதமான இடையூறுகளும் இருக்கின்றன. சுதந்திரமில்லாமல் மரகதத்தின் ஆதரவில் வாழும் வேதா, எது நேர்ந்தாலும் என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சித்தமாய் இருக்க வேண்டும். அவள் இருதயம் எப்படியோ......" என்றார்.

"அப்படி யென்றால் உங்களுக்கு அவள்மீது நம்பிக்கை இல்லையா! அப்படி இல்லாதபோது அவளுக்கு உங்கள் மீது அவ்வளவு பற்றுதலும் உங்களுக்கு அவள்மீது இவ்வளவு பற்றுதலும் எப்படி ஏற்பட்டது!" என்று பொன்னி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"அவள் உன்னிடம் என்னைப் பற்றி ஏதாவது சொன்னாளா! அவள் என் மீது அன்பு வைத்திருப்பதாக உனக்கு ஏதேனும் தெரிந்ததா!" என்று கேட்டார் டாக்டர்.

"ஆமாம்! அவள் பேச்சு அப்படித்தானிருந்தது. நான் அவளிடம் உங்களைப் பற்றி 'ஊரில் எல்லாருக்கும் உங்களிடம் மதிப்பு உண்டு. நீங்கள் மிகவும் நல்லவர். கெட்டிக்காரர்' என்று சொன்னபோது அவளுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருந்தது. தெரியுமா! அவள் இந்தக் காலத்துப் பெண்



"என்னங்க! நீங்கள் ஏதோ ஒரு டிராமாவிலே பீமசேனனாக நடித்தீர்களாமே! நிஜமாகவா?"

"ஆமாம் ஸார்......ஒரு ரேடியோ டிராமாவிலே அப்படி நடித்தேன்."

"அதுதானே பார்த்தேன்!"

னல்ல. இந்தக் காலத்துப் பெண்போல அவள் பழக்கப்பட்டிருந்தால் தன் மனதிலுள்ளதை யெல்லாம் கூச்சப்படாமல் என்னிடம் சொல்லி விருப்பாள். ஆனால் அவள் என் வார்த்தையைக் கேட்ட பிறகுதான் 'அவரை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. ரொம்ப நல்லவர்' என்று வெட்கத்தோடும் நாணத்தோடும் சொன்னாள். இந்த வார்த்தைகளிலிருந்து அவள் மனதில் எத்தகைய எண்ணம் இருக்கிறது என்பதை நான் அறிந்து கொண்டேன். அவள் உங்களிடம் தன் உயிரையே வைத்திருக்கிறாள். அவள் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளப் பூரணமாக விரும்புவாள். நீங்கள் இப்படி மனமொத்துக் கல்யாணம் செய்து கொள்வதை யாரால் தடுத்துவிட முடியும்! உங்கள் வாழ்க்கையை யாரால் கெடுத்துவிட முடியும்!" என்றாள் பொன்னி டாக்டரை வியப்போடு பார்த்துக் கொண்டே.

"நாங்கள் கல்யாணம் செய்து கொள்வதை யாராலும் தடுத்துவிட முடியாது. ஆனால் கல்யாணம் செய்து கொண்டதைக் குற்றமாகக் கருதச் சட்டம் இருக்கிறது. மரகதத்தின் பாதுகாப்பில் இருக்கும் வேதாவை அவளுடைய சம்மதமில்லாமல் கல்யாணம் செய்து கொள்வது சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பாகச் செய்யப்பட்ட காரியமாகக் கருதப்படும். மேலும்......"

"சட்டத்தை யெல்லாம் லட்சியம் செய்யக் கூடாது. நமக்கு நியாயமென்று பட்டதைத் துணிவாகச் செய்ய வேண்டியதுதான்......"

"அப்படிச் சொல்லாதே! என்னைப் போலப் படித்தவனும், கௌரவமான தொழிலை நடத்துபவனும் சட்டத்தை அனுசரித்து நடப்பதுதான் நல்லது. வேதாவிற்குத் தக்க வயதாகவில்லை. மரகதத்தின் இஷ்டத்திற்கு விரோதமாக அவள் ஒருவரையும் விவாகம் செய்து கொள்ள முடியாது. அப்படிச் செய்து கொண்டால் அது சட்டப்படி குற்றமாகும். இதனால் வேதாவை என்னிடமிருந்து பிரித்து வைக்க இடமேற்படும். இதனால் எனக்கு அவமானமும் மதிப்புக் குலைவும் ஏற்படும். மரகதம் பல வழியிலும் என்னை வஞ்சம் தீர்த்துக் கொள்ள வழி தேடுவாள். வேதாவுக்கும் கூடப் பல கஷ்டங்கள் ஏற்படலாம்......"

"இதற்கு வேறு வழியே இல்லையா!"

"எனக்கு எவ்விதமான வழியும் புலனாகவில்லை" என்று சொல்லிய டாக்டர் ஆசனத்தை விட்டு எழுந்து உலாவினார். அவர் முகத்தில் கவலைக் குறி படர்ந்திருந்தது. அவர் சட்டென்று பொன்னியை நெருங்கி, "நான் ஒரு யோசனை சொல்கிறேன். வேதா என்னைப் பூரணமாக நேசிக்கிறாளா என்று இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முயற்சி செய். அதைத் தவிர அவளை நான் ஒரு தடவை நேரில் பார்க்கவும் ஏற்பாடு செய்" என்றார்.

"சரி! நீங்கள் அவளை ஒரு தடவை தனித்துச் சந்தித்தால் போதும் அல்லவா! அவள் உங்களிடம் பூரணமாக அன்பு வைத்திருக்கிறாளா என்று சோதித்துப் பார்க்க நினைக்கிறீர்கள். இல்லையா!"

"ஆமாம்! நான் அவள் இருதயத்தைச் சரியாக அறிந்து கொள்ள வேண்டும். உண்மையாக வேதாவிற்கு என்மீது அந்தரங்கமான காதல் இருக்குமானால் நான் எதையும் துணிகரமாகச் செய்யத் தயங்க மாட்டேன்" என்றார் டாக்டர்.

"நிஜமாக அப்படிச் செய்வீர்களா!"

"நிச்சயமாக. நான் மரகதத்தோடு போராடி வேதாவை மீட்க வேண்டுமென்றால் வேதா என் அபிப்பிராயங்களுக் கெல்லாம் துணிவோடு இணங்கி நடக்க வேண்டும். மரகதத்தை எதிர்த்துக் கொண்டு என்னோடு வருவதனால் தனக்கு எவ்விதமான ஆபத்தும் நேராது. தன் எதிர்கால வாழ்க்கைக்கு அது நலமாகவே முடியும் என்று வேதா திடமாக நம்ப வேண்டும்."

"சரி! நான் வேதாவை நீங்கள் தனிமையில் சந்திக்க ஏற்பாடு செய்கிறேன். எல்லாவற்றிற்கும் நீங்கள் ஏன் உங்கள் மனதிலுள்ளதைத் தெரிவித்து அவளுக்கு ஒரு கடிதம் எழுதி என்னிடம் தரக் கூடாது......!"

"அவளுக்குப் படிக்கத் தெரியுமா!"

"ஏதோ கொஞ்சம் தமிழ் படிக்கிறாள். நீங்கள் கொஞ்சம் தெளிவாக எழுதிக் கொடுத்தால் அவளுக்குச் சுலபமாகப் புரியும்......"

டாக்டரின் கண்கள் சந்தோஷத்தால் மலர்ந்தன. "ஆனால் இது வேதாவிற்கு ஏதாவது ஆபத்தை உண்டாக்கி விட்டால்......மரகதமோ செங்கம்மாவோ இதைக் கண்டு பிடித்துவிட்டால்......" என்று தயங்கினார்.

"பயப்படாதீர்கள். அவர்கள் காணும்படி செய்ய நான் என்ன பைத்தியமா...! நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். எல்லாம் என் பொறுப்பு" என்றாள் பொன்னி.

"இதோ எழுதித் தருகிறேன்" என்று சொல்லி டாக்டர் ஒரு கடிதத்தை எழுதி அதை ஒரு உறையிலிட்டுப் பொன்னியிடம் கொடுத்தார். "ஜாக்கிரதை! உனக்கு மிகவும் சிரமம். இந்த உதவிக்குப் பதில் என்ன செய்யப் போகிறேன்!" என்றார்.

"நீங்கள் எனக்கு ஒரு உபகாரமும் செய்ய வேண்டாம். என் பாட்டிக்கு ஏதேனும் கோளாறு வந்தால் வழக்கம் போல் போய்ப் பார்த்து நல்ல மருந்தாகக் கொடுங்கள். அதுவே போதும். சரி, நான் போய் வருகிறேன்......" என்று சொல்லி விட்டுப் பொன்னி அவர் கொடுத்த கடிதத்தை இடுப்பில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டுக் கிளம்பினாள். (தொடரும்)

அரித்து, எரிந்து கொப்பளிக்கும் எக்ஸிமா 10 நிமிஷத்தில் குணமடைகிறது


நிக்ஸோடெர்ம் கண்டு பிடிக்கப் பட்டதி லிருந்து இனி யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டிகள் ஆகிய சரும வியாதிகளால் அவதி யுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்மினால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனாயாசமாக வைத்துக் கொண்டு, பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் கொடுக்காதீர்கள்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் கண்டு உபயோகித்த இதர களிம் பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவிக் கொள்ளும்போது ஒரு பவுடரைப் போல உணருவீர்கள். சருமத் துவாரங்களி னூடே சென்று வியாதிக்கு மூலமான இடத் தைத் தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைத் தாக்கிக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷங்களில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற் கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப்போல வழவழப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் வேறெதையும்விட சீக்கிரமாக வேலை செய் கிறது. நமைச்சல், எரிச்சல் ஆகியவற்றை சில நிமிஷங்களில் நிறுத்தி விரைவில் சரு மத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழ வழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங் களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி — நாடிய வைத்தியம் கிடைத் ததை உணருவீர்கள். நிக்ஸோடெர்ம் ஆயிரக்



BEFORE AFTER

கணக்கானவர்களுடைய சருமத்தைச் சுத்த மாக்கி புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவ ரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "பன்னிரண்டு வருஷங்களாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்து களுக்குப் பிறகு நிக்ஸோடெர்ம் உபயோகித் தேன். 10 நிமிஷங்களில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற் றத்தில் ஏற்பட்ட மாறுதலைக்கண்ட என் நண் பர்கள் ஆச்சரிய மடைந்தனர்."

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாக சுத்தமாகாதவரை நிக்ஸோடெர்ம் மதிப்பை இழக்கிறது. இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். தோற்றத் தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரி யப் படுவீர்கள். மேலும் ஒரு வாரத்திற்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் அதன் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, நீங்கள் கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். அதற் களித்த உத்தரவாதமே உங்களுக்கு உறுதி.

தி பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு லி-ட்.

(இந்தியாவில் இணைக்கப்பட்டது)

நெ. 3, சிங்காராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ் - 5

போன்: 85834] :: [தந்தி விலாசம்: "EVERMANS"

மாதச் சீட்டு

ஆரம்பிக்கும் தேதி 12-1-52 ★ ஏலத் தேதி 19-1-52

10-12-51 ஆரம்பமான எங்கள் சீட்டுக்கு தேவைக்கு மேற்பட்ட சந்தாதார்கள் சேர்ந்திருக் கிறபடியால் நேயர்களின் சௌகரியத்திற்காக இன்னொரு புதிய சீட்டு ஆரம்பித்திருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். இப் புதிய சீட்டு 12-1-52 அன்று ஆரம்பமாகிறது.

சீட்டு விவரம் வருமாறு:

B	கிளாஸ் டிக்கெட்,	ரூ. 2500/-	மாதம்	ரூ.	100/-
C	,, ,,	ரூ. 1250/-	,,	ரூ.	50/-
D	,, ,,	ரூ. 625/-	,,	ரூ.	25/-
E	,, ,,	ரூ. 500/-	,,	ரூ.	20/-
F	,, ,,	ரூ. 375/-	,,	ரூ.	15/-

ரூ. 20க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாங்கிகள்மேல் செக்குகள் பெற்றுக்கொள்கிறோம். இச்சீட்டில் சேர விரும்புபவர்கள் முழு விவரத்திற்கும் எங்களுக்கு எழுதி சீக்கிரம் இந்த சீட்டில் சேர்த்து கொள்ளவும்.

(போர்டாரின் உத்தரவுபடி)

எம். வி. சுப்ரமணியம்,
மானேஜிங் டைரக்டர்



தெய்வப் பிறவி

எஸ்.டி. ஸ்ரீநிவாஸன்...

“கடைசியாக என்னதான் சொல்கிறார்கள்!”

“கையிலே இரண்டாயிரம் ரூபாய், நகை, பாத்திரம் எல்லாம் மூவாயிரம். இதிலே ஒரு தம்பிடி கூடக் குறையக் கூடாதாம்.”

“ஹூம்! அவ்வளவுக்கு நாம் எங்கே போகிறது! நம் சந்திராவுக்கு அதிர்ஷ்டம் இல்லை......”

இவ்வார்த்தைகளைக் கேட்ட நாகராஜனுக்குக் கோபம்தான் வந்தது.

“போம்மா! இந்த வரன் இல்லாவிட்டால் இதைக் காட்டிலும் ஆயிரம் உசத்தியான வரன் கிடைக்கும். இவர்கள் கேட்கிற அளவுக்குச் செய்ய அப்படித்தான் பிள்ளை என்ன படிப்பு படித்திருக்கிறான்! எஸ். எஸ். எல். ஸி. மூன்றுதரம் 'பெயில்' ஏதோ ஒரு கம்பெனியிலே உத்தியோகம். ஐம்பது ரூபாய் சம்பளம்...” என்றான்.

“என்னமோ நாகராஜா! நம்ம சந்திராவை எவனுக்காவது கட்டிக் கொடுத்து விட்டால் ஒரு பெரிய பாரம் குறைந்து விட்டதுபோல் நிம்மதியாக இருப்பேன்.”

“பிள்ளையைப் பெற்றவர்கள் அப்படித்தான் கேட்பார்கள். ஏதோ ஏறக்குறையச் சொல்லி அந்த வரனையே முடித்து விடேன். இருக்கிற நிலம், வீடு — எல்லாவற்றையும் விற்றாவது கல்யாணத்தை முடித்து விடலாம்......”

குழாயடியில் ஜலம் பிடித்துக் கொண்டிருந்த சந்திராவின் காதில் இந்தச் சம்பாஷணை பூராவும் விழுந்தது. தனக்காகத் தன் அண்ணனும், தாயாரும் படும் சிரமத்தை நினைக்க நினைக்க அவளுக்குக் கஷ்டமாக இருந்தது.

இடுப்பில் குடத்தை எடுத்து வைத்துக்கொண்டு, கூடத்திற்கு வந்தாள். “அம்மா! வீணுக்கு ஏன் உன் மனதைப் போட்டுக் குழப்பிக்கிறே! 'பணம் பணம், பணம்' என்று அதுவே குறியாக இல்லாமல்—நம்மைக் கசக்கிப் பிழிகிறவர்களாக இல்லாமல்—ஒரு வரன் வந்தால்தான் நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். இல்லாது போனால் எனக்குக் கல்யாணமே வேண்டாம், அம்மா! ஏதாவது வேலைக்குப் போய் என் வயற்றுக்கு நான் சம்பாதித்துக் கொள்கிறேன்......” என்றாள்.

சந்திராவின் வார்த்தைகள் அவள் மனத்தில் எழுந்திருந்த வெறுப்பைத்தான் பிரதிபலித்தன.

“...சந்திரா! நீ சிறுபெண். உலகம் தெரியாதவள். ஒரு பெரிய பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்காமல் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருந்தால் என்ன அபவாதம் வரும் என்பதை உன்னால் புரிந்துகொள்ள முடியாது. இப்பவே பார்க்கிறவர்களெல்லாம் என் மனசு புண்படும்படி பேசுகிறார்கள். நாகராஜா! நீ எப்படியாவது இந்த வரனையே முடித்து விடு”—என்றாள் கோமதி கண்களில் நீர் தளும்ப.

நாகராஜன் சைக்கிளை எடுத்துக் கொண்டு எங்கேயோ வெளியே கிளம்பி விட்டான்.

அவன் சென்று இரண்டு நிமிஷங்கள் ஆகி இருக்கும். தெருவில் “போஸ்ட்” என்ற குரல் கேட்டது. சந்திரா ஓடிப்போய் ஒரு கார்டை வாங்கிக்கொண்டு வந்தாள். சமையல் செய்து கொண்டே இருந்த கோமதி, “சந்திரா, யாருடீ போட்டிருக்கா!......” என்று கேட்டாள்.

“பம்பாயிலே இருந்து வந்திருக்கு. மாமா போட்டிருக்கார்......”

“யார் ராமகிருஷ்ணனா!” என்று ஆவலோடு கேட்டாள் கோமதி.

“ஆமாம்.”

“என்ன சமாசாரம்!”

“மாமாவுக்கு மூணு மாசம் லீவு கிடைத்திருக்கிறதாம். மாமியும் மாமாவும் லீவுக்குக் கும்பகோணத்துக்குப் போகப் போகிறார்களாம். போகிற வழியிலே இங்கே வந்து இரண்டு நாள் தங்கப் போகிறார்களாம். வெள்ளிக்கிழமை வருகிறதாக எழுதி யிருக்கிறார்......” என்றாள்.

ராமகிருஷ்ணனும் லலிதாவும் வருகிறார்கள் என்று கேட்டதும் கோமதியின் மனம் எதையெல்லாம் பற்றியோ நினைக்க ஆரம்பித்தது.

அவளுடைய பெற்றோருக்குக் கோமதிதான் மூத்தபெண். ராமகிருஷ்ணன் அவளுக்குப் பின் பிறந்தவன். அவனைவிட இரண்டு வயது சின்ன வள். லக்ஷ்மிதான் எல்லோருக்கும் சின்னவள்.

கோமதி மணமாகிப் புக்ககம் சென்றாள். இரண்டு வருஷங்களுக் கெல்லாம் நாகராஜனும் அதன்பின் சந்திராவும் அவளுக்குப் பிறந்தனர்.

ராமகிருஷ்ணன் பி.ஏ. பாஸ் பண்ணினதும் அவனுக்கும் லலிதாவுக்கும் மணமாகியது.

லலிதா நல்லபெண். நல்ல சீருடன்தான் அவளை ராமகிருஷ்ணனுக்கு மணம் செய்து கொடுத்தார் அவள் தந்தை.

ராமகிருஷ்ணனுக்கு மணமான அடுத்த மாதம் லக்ஷ்மிக்கும் நல்ல வரன் வரவே, அவளுடைய திருமணத்தையும் முடித்து விட்டார் ராமகிருஷ்ண னின் தந்தை. ராமகிருஷ்ணன் ஒரு கம்பெனியில் உத்தியோகத்தில் அமர்ந்தான்.

தன் இரண்டாவது மகளின் திருமணத்திற்குப் பிறகு வெகுநாட்கள் உயிர் வாழவில்லை ராம கிருஷ்ணனின் தந்தை.

மணமான சில மாதங்களுக்குள்ளாகவே லலிதா கணவனுடன் குடித்தனம் செய்ய வந்தாள். அதே சமயத்தில் கோமதியின் கணவன் உத்தியோக விஷயமாக தாற்காலிகமாக ஒரு வருஷம் ரங்கூனில் தங்கவேண்டி யிருந்ததால் கோமதி தன் இரண்டு குழந்தைகளுடன் தம்பி வீட்டிற்கு வந்துவிட் டாள். லக்ஷ்மியின் கணவன் அப்போது பம்பாயில் ஏதோ டிரெய்னிங் படித்துக் கொண்டிருந்ததால், லக்ஷ்மியும் தாய் வீட்டிலேயே இருந்தாள்.

லலிதா புக்ககம் வரும்போதே இரண்டு நாத்த னார்களுடன் குடித்தனம் பண்ண வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

லலிதா படித்தவள். நல்ல பொறுமைசாலி. நாத்தனார்கள், மாமியார், கணவன் எல்லோரையும் திருப்தி செய்யப் பல வழிகளிலும் முயன்றாள்.



லக்ஷ்மியும் சுபாவத்திலேயே நல்லவள். லலிதா வைத் தன் தங்கைபோல் நேசித்தாள். அவளிடம் ரொம்பப் பரிவு காட்டினாள். ஆனால் கோமதியோ அதற்கு மாறுபட்ட சுபாவம் உடையவள். மிக வும் கர்வம் பிடித்தவள். ஆதி முதலே அவளுக்கு லலிதாவைக் கண்டால் பிடிக்கவில்லை. அவளைப் பாடாய்ப் படுத்தி வைத்தாள். தாயாரிடம் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி லலிதாவின் மேல் அவளுக்கு வெறுப்பு ஏற்படும் படி செய்தாள். கோமதியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு ராமகிருஷ்ணனும் லலிதாவைப் பல தரம் திட்டி இருக்கிறான். ஆனால் பொறுமைசாலி யான லலிதா எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டிருந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை. லலிதா தன் நகை களை யெல்லாம் கழற்றி ஒரு சோப்புப் பெட்டியில் வைத்து விட்டு ஸ்நானம் செய்யச் சென்றாள்.

ஸ்நானம் செய்து விட்டு வரும்போது பார்த் தால், சந்திரா அந்தச் சங்கிலியை எடுத்துக் கழுத் தில் போட்டுக் கொண்டிருந்தாள்.

என்ன இருந்தாலும் லலிதாவும் சிறு பெண் தானே. சந்திரா போட்டிருந்த சங்கிலியைக் கேட்டாள். தாயைப்போலத் தானே இருப்பாள்! சந்திரா கொடுக்க மறுத்து விட்டாள்.

லலிதா அவள் கழுத்திலிருந்து மெதுவாக அதைக் கழற்றப் போகும்போது சந்திரா அதை இழுக்கவே சங்கிலி அறுந்து விட்டது. லலிதா ஆத்திரம் தாங்காமல் "அக்கா! சந்திரா என் சங்கிலியை அறுத்து விட்டாள்" என்று கூச்ச லிட்டாள். அக் கூச்சலைக் கேட்டு கோமதியும் அவள் தாயாரும் அங்கு ஓடி வந்தனர். கையில் அறுந்த சங்கிலியுடன் லலிதாவும் அவளுக்கு முன்னால் சந்திராவும் நிற்பதைக் கோமதி கண்டாள். அம்மாவைப் பார்த்ததும் சந்திரா, "அம்மா! மாமிதான் சங்கிலியை அறுத்து விட்டாள்" என்று ஓரேயடியாகக் கத்தினாள்.

நாத்தனாரும் மாமியாரும் லலிதாவைத் திட்டு திட்டு என்று திட்டினர். போதா ததற்கு ராமகிருஷ்ணன் வந்தவுடன் கோமதி, "ராமு இனிமேல் ஒரு நிமி ஷம்கூட என்னால் இந்த வீட்டில் இருக்க முடியாது. நான் எங்கேயாவது பிச்சை எடுத்தாவது பிழைத்துக் கொள்கிறேன். எனக்கு அப்பாவும் இல்லை; அகமுடையா னும் எங்கேயோ யிருக்கான் என்று உன் மனைவி என்னை ரொம்ப சின்னத்தனப் படுத்துகிறாள். என்மேலேயும் என் குழந் தைகள் மேலேயும் அடாத பழியெல்லாம் சொல்லுகிறாள். என் குழந்தைகளைக் கண் டால் அவளுக்கு அடியோடு பிடிக்க வில்லை" என்றாள். அவளுடன் அவள் தாயும் சேர்ந்து கொண்டு, அன்று லலிதா வேண்டுமென்றே தன் சங்கிலி யைத் தானே அறுத்துவிட்டுப் பழியைச் சந்திரா மேல் போட்டதாகக் கூறினாள்.

ராமகிருஷ்ணனுக்குக் கோபம் வந்து விட்டது. லலிதா சொன்ன எந்த சமா சாரமும் அவன் காதுகளில் ஏறவில்லை. ஒருநாளு மில்லாமல் அன்று அவன் லலி தாவை நன்றாக அடித்து விட்டான்.

நிரபராதியான லலிதா தண்டனை அடைந்தது லக்ஷ்மிக்குப் பெரும் வேத னையாக இருந்தது. நேரே தன் சகோதரி கோமதியிடம் சென்றாள்.

கோமு, நீ செய்துவருகிற காரியம் எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. லலிதாவும் நம்மைப் போல ஒரு பெண்தானே. அவளை நீ ரொம்பப் படுத்தி வைக்கறாய். நீயே யோசனை பண்ணிப் பாரு. உனக்கு இதுபோல ஒரு நாத்தனார் இருந்து அவள் உன்னை இப்படிப் படுத்தினால், உனக்கு எப்படி இருக்கும்! கோமு! நான் சொல்றேன்னு பாரு. இந்தப் பாவம் வீண் போகாது. ஒரு அபலையின் வயிற்றெரிச்சலைக் கொட்டிண்டா...... அப்புறம் எனக்குச் சொல்லத் தெரியவில்லை."

"ஆமாம். நீ பெரிய ரிஷி பத்தினி! உன்னுடைய வாக்கு அப்படியே பலித்துவிடப் போகிறது. உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போகாமல் போ. நீ ஒன்றும் எனக்குப் புத்தி மதிகள் சொல்ல வரவேண்டாம்" என்றாள்.

லக்ஷ்மியும் கோபத்துடன் அந்த இடத்தை விட்டு எழுந்து போய் விட்டாள்.

ஒரு வருஷத்துக் கெல்லாம் கோமதியின் கணவன் ரங்கூனில் இருந்து திரும்பி வந்து விட்டான். கோமதி அவனுடன் குடித்தனம் செய்யச் சென்றுவிட்டாள். லக்ஷ்மியின் கணவனுக்கும் டிரெய்னிங் முடிந்துவிட்டது. அவனுக்கும் ஹைதராபாத்தில் ஒரு உத்தியோகம் கிடைத்தது. லக்ஷ்மியை அவன் அழைத்துச் சென்று விட்டான்.

தன் பெண்கள் இருவரும் புக்ககம் சென்ற பின் ராமகிருஷ்ணனின் தாயார் அதிக நாள் ஜீவித்திருக்கவில்லை. அவளும் கண்ணை மூடிவிட்டாள். அதற்குப் பிறகுதான் ராமகிருஷ்ணனுக்கு தன் தாயும் கோமதியும் சேர்ந்து லலிதாவுக்கு இழைத்த தீங்கு தெரிய வந்தது. கோமதியின்மேல் அவனுக்கு அளவில்லாத வெறுப்பு ஏற்பட்டது.

வருஷங்கள் ஓடி மறைந்தன. ராமகிருஷ்ணன் பம்பாய்க்கு மாற்றப்பட்டான். அவனும் லலிதாவும் பம்பாய்க்குச் சென்று விட்டனர்.

நாகராஜன் காலேஜில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தான். சந்திராவும் படித்துக் கொண்டிருந்தாள். அப்போது கோமதியின் கணவர் திடுமென ஜுரத்தில் படுத்தார். இரண்டு நாளில் யாரும் எதிர்பாராத வகையில் இறந்து விட்டார். கோமதி துயரம் தாங்கமாட்டாமல் தவித்தாள்.

விஷயமறிந்த ராமகிருஷ்ணன் பம்பாயிலிருந்து ஓடி வந்தான். கோமதிக்குத் தன்னாலான பொருளுதவியைச் செய்து விட்டு, நாகராஜனை ஒரு வேலையில் அமர்த்தி விட்டுத் திரும்பப் பம்பாய்க்குச் சென்று விட்டான்.

நாகராஜன் கொண்டு வரும் சொற்ப சம்பளத்தில் சந்திராவையும் வைத்துக்கொண்டு கோமதி குடித்தனம் நடத்த வேண்டியதாயிருந்தது. கணவன் இறந்த துக்கத்தோடு வயது வந்த பெண் ஒருத்தியைக் கல்யாணத்திற்கு வைத்துக் கொண்டிருக்கும் கவலை வேறு சேர்ந்து கொண்டு கோமதியை வாட்டின. அவளுக்கு இருந்த ஆஸ்தியெல்லாம் அவள் கணவன் கிராமத்தில் விட்டுப் போயிருந்த ஒரு சிறு வீடும் கொஞ்சம் நிலமும் தான். அவைகளை விற்று எப்படியாவது சந்திராவின் கல்யாணத்தை முடித்து விட்டால் பின் தன் பாரம் சற்றுக் குறையும் என்று நினைத்தாள் அவள். ஆனால் சரியான வரன் ஒன்றும் குதிரவில்லை. ராமகிருஷ்ணனும் இந்த விஷயத்தைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. உலகம் தெரியாத நாகராஜன்தான் தன் தங்கையின் கல்யாணத்திற்காக அலைந்து கொண்டிருந்தான்.



உபாத்தியாயர்:—கிட்டு, இங்கிருந்து சந்திரமண்டலம் அதிக தூரமா? அமெரிக்கா அதிக தூரமா, சொல் பார்க்கலாம்!

கிட்டு:—அமெரிக்காதான், ஸார்!

உபாத்தியாயர்:—எப்படி?

கிட்டு:—இங்கிருந்து சந்திரனை நம்மால் பார்க்க முடிகிறது. அமெரிக்காவைப் பார்க்க முடியாதே.

ஒரு வருஷ காலத்திற்குள் ஒன்றன்மேல் ஒன்றாகத் துயரங்கள் அடுக்கடுக்காக வந்து தன் வாழ்வே குலைந்துவிட்ட போதுதான் கோமதியின் மனச்சாட்சி அவளைக் குத்திக் காட்டியது. லக்ஷ்மி அன்றொரு நாள் சொன்னதுபோல் அபலைப் பெண் லலிதாவைத் தான் படுத்தி வைத்த பாவம்தான் தன்னைச் சூழ்ந்து கொண்டு இப்படி ஆட்டுகிறதோ என்று அடிக்கடி அவள் உள்ளம் நினைக்கும். தான் செய்த தீமைக்குப் பிறகு இந்த ஜன்மத்தில் லலிதா தன் முகத்திலேயே விழிக்க மாட்டாள் என்று நினைத்தாள் கோமதி. ஆனால் இன்று ராமகிருஷ்ணனிடமிருந்து கடிதம் வந்ததும் அவள் ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்தாள்.

*

பம்பாயில் இருந்து வந்த லலிதா கோமதியிடம் எவ்வித துவேஷமும் பாராட்டவில்லை. குழையக் குழைய அவளிடம் பேசிக் கொண்டிருந்தாள். வாய் ஓயாமல் நாகராஜனிடமும், சந்திராவிடமும் பேசிக் கொண்டிருந்தாள். அவள் தன்னிடமும் தன் பிள்ளைகளிடமும் அதிக அன்பு காட்டக் காட்ட கோமதியின் மனச் சாட்சி அவளை மேலும் மேலும் உறுத்தியது.

அன்று இரவு அவர்கள் எல்லோரும் சாப்பிட்டு விட்டு ஹாலில் உட்கார்ந்திருந்தனர். ஏதோ பேசிக்கொண்டே இருந்தபோது கோமதி, "சந்திராவை எங்கேயாவது ஒரு இடத்திலே கல்யாணம் செய்து கொடுத்து விட்டால் என் தலையிலே இருக்கிற பளு இறங்கிவிடும். அதற்கு எப்போது வேளை வரப்போகிறதோ தெரியவில்லை" என்றாள்.

அவள் அந்த வார்த்தைகளைச் சொல்லி வாய் மூடியதும் ராமகிருஷ்ணன் லலிதாவைப் பார்த்து மெதுவாகச் சிரித்தான். அவளும் புன் முறுவல் செய்தாள். கோமதியும் நாகராஜனும் சந்திராவும் விஷயம் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள்.



"சென்ற வாரம் நீங்கள் வாங்கிக் கொண்டு போன குடையைத் திருப்பி வாங்கிக்கொண்டுபோகலாம் என்று வந்தேன்!"

"அடாடா! மன்னிக்க வேண்டும்! நேற்றுத்தான் அதை நான் ஒருவருக்கு இரவல் கொடுத்தேன். அவசியம் குடை வேண்டுமா இப்பொழுது?"

"ஆமாம். எனக்கு ஒன்றும் அவசரமில்லை. எனக்கு அந்தக் குடையை இரவல் கொடுத்த நண்பன் கேட்கிறான்'! குடையின் சொந்தக்காரன் அவனைத் தொந்தரவு செய்கிறானாம்!"

"அக்கா, உன் பாரத்தைக் கீழே இறக்கி வைக்கிற பொறுப்பை வேறு ஒருவர் எடுத்துக் கொண்டாயிற்று. இனிமேல் நீ அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்......" என்றான் ராமகிருஷ்ணன் சிரித்துக் கொண்டே.

ராமகிருஷ்ணனின் இந்த வார்த்தைகள் கோமதிக்குச் சற்று வியப்பை அளித்தன.

"அப்படி எனக்கு யார் இருக்கிறார்கள்! நான் தான் அனாதையாகக் கிடக்கிறேனே" என்று அங்கலாய்த்தாள் கோமதி.

"திடீரென்று விஷயத்தைச் சொல்லி உன்னைத் திகைக்க வைக்க வேணும் என்று நினைத்துத்தான் நான் இதுவரையில் உன்னிடம் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நாங்கள் பம்பாயிலும் நீ பட்டணத்திலுமாக இருந்து கொண்டிருந்தாலும், லலிதா உன்னையும் சந்திராவையும் மறக்கவே இல்லை. உன் பெண்ணுக்காக அவளே எனக்குக்கூடத் தெரியாமல் ஒரு வரனை ஏற்பாடு பண்ணி, எல்லாவற்றையும் முடித்து விட்டாள். நிச்சயதார்த்தம் பண்ணிக் கல்யாணத்தை முடிக்க வேண்டியதுதான் பாக்கி" என்றான் ராமகிருஷ்ணன். ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து விட்டனர் கோமதியும் நாகராஜனும்.

கோமதியின் உள்ளத்தில் மகிழ்ச்சியும் ஏதோ இனந் தெரியாத இன்ப வேதனையும் சேர்ந்து என்னவோ செய்து கொண்டிருந்தன. திறந்த வாய் திறந்தபடி நாகராஜனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"வரன் யார் தெரியுமோ! இவள் தம்பி ராஜாராமன்" என்று லலிதாவைச் சுட்டிக் காட்டினான் ராமகிருஷ்ணன்.

"யார்! நம்ப நாகராஜனோடு நாலு வருஷத்துக்கு முன்னே இண்டர் பாஸ் பண்ணினானே அவனா!" என்று வியப்புடன் கேட்டாள் கோமதி.

"அவனேதான். போன வருஷம் அவன் ஹானர்ஸ் முதல் வகுப்பிலே பாஸ் பண்ணினான். இந்த வருஷம் ஐ. ஏ. எஸ். பரீட்சைக்குப் போய் பாஸ் பண்ணி விட்டான். இப்போ அவனுக்கு 'இன்கம் டாக்ஸ்' டிபார்ட்மெண்டில் மூன்னூறு ரூபாய் சம்பளத்திலே உத்தியோகமும் ஆகி இருக்கு. இன்னும் ஒரு மாதத்திற்குள் உத்தியோகத்தையும் ஏற்றுக் கொள்ளப் போகிறான். அவனும் நம் சந்திராவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதித்து விட்டான். எங்க மாமியாருக்கும் மாமனாருக்கும் திருப்திதான். லலிதாவின் பிடிவாதத்தின் பேரிலே கல்யாணச் செலவையும் தானே ஏற்றுக் கொள்வதாக என் மாமனார் சம்மதித்து விட்டார். ராஜாராமன் உத்தியோகத்திலே சேருவதற்குள் கல்யாணத்தை முடித்துவிட வேணும் என்று கருதிதான் நானும் லலிதாவும் இங்கே புறப்பட்டு வந்தோம். இந்த ஏற்பாட்டிலே உனக்கும் சந்திராவுக்கும் ஆட்சேபணை ஏதும் இருக்காதென்று நினைக்கிறேன்" என்று மூச்சு விடாமல் சொன்னான் அவன்.

கோமதிக்குத் தன் முன் இருந்த ஒன்றையுமே நம்ப முடியவில்லை. தான் கேட்டதெல்லாம் கனவா அல்லது உண்மைதானா என்று அவளால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. தன்னை எங்கேயோ யாரோ தூக்கிக்கொண்டு போவதுபோல இருந்தது அவளுக்கு. அவளுடைய நினைவு இறந்த காலத்தை நோக்கிச் சென்றது.

'தான் அந்தக் காலத்தில் படாதபாடு படுத்தி வைத்தும் லலிதா அவை எல்லாவற்றையும் மறந்துவிட்டுத் தன் பெண்ணை ஒரு பெரிய உத்தியோகம் வகிக்கப்போகும் தன் தம்பிக்கு—தனக்கு ஒரு செலவும் இல்லாமல்—மணம் புரிந்துகொள்ள ஏற்பாடு செய்திருக்கிறாள். அப்படிப் பட்ட உயர்ந்த குணமுள்ளவளுக்கா தான் சொல்ல முடியாத துயரத்தை அளித்தது!'

கோமதியின் தலை சுற்றியது. அவள் பரபர வென்று எழுந்தாள். வேகமாக லலிதா உட்கார்ந்திருந்த இடத்திற்குச் சென்றாள். சட்டென்று அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு "லலிதா! லலிதா! உன்னைப்போன்ற உத்தமியை இந்த உலகத்தில் பார்க்கவே முடியாது. உன் பெருமையை அறிந்து கொள்ளாமல் நான் அந்தக் காலத்தில் அநியாயமாக உன்னைக் கண்கலங்கி நிற்கச் செய்தேன். நீ அதையெல்லாம் மறந்து விட்டு என் பெண்ணின் வாழ்வையே மலர வைக்க முன் வந்திருக்கிறாயே, நீ ஒரு தெய்வம்தான்......" என்று சொல்லிக்கொண்டே அவள் கைகளைத் தன் கண்களில் ஒத்திக் கொள்ளப் போனாள்.

லலிதா சட்டென்று தன் கைகளை விடுவித்துக் கொண்டு, "இதென்ன அக்கா! நீங்கள் எல்லாம் பெரியவர்கள், நீங்கள் என்னிடத்தில் மன்னிப்பு கேட்பதாவது! நான் என்ன பிரமாத காரியம் செய்து விட்டேன். சந்திராவுக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டியது என் கடமையல்லவா! சந்திராவை அடைய எங்கள் ராஜாராமன் கொடுத்து வைத்திருக்கிறான்" என்றாள்.

இவ்வார்த்தைகள் அவள் பெருந்தன்மையை இன்னும் விளக்கிக் காட்டின.

"லலிதா! நீ சாதாரணப் பெண் அல்ல. ஒரு தெய்வப் பிறவிதான்!......" என்றாள் கோமதி. உணர்ச்சிப் பெருக்கால் அவளுடைய கண்கள் நீரைச் சிந்தின.

தூரத்தில் நின்று அவர்களிருவரையும் பார்த்துக் கொண்டிருந்த ராமகிருஷ்ணனின் கண்களிலும் நீர் சுரந்தது. ஆம்! ஆனந்தக் கண்ணீர்தான்.



த்வார்கின்ஸ்

என்றால் நீங்கள்
முற்றிலும் நம்பலாம்.



டோனுரா நெ. 64-3 உச்சஸ்வரம் 2 செட் ரீடுகள், ரம்யமான நாதம் பெட்டியுடன் ... ... ரூ. 95/-

டோனுரா நெ. 55 மேற்கூறியது போலவே ஆனால் ஆர்கன் நாதம் ரூ. 100/-

ரூ. 60/- முதல் ரூ. 450/- வரை இதர மாடல்களிலும் உள்ளன.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுத வேண்டும்

DWARKIN & SON, LTD.

INVENTORS OF HAND HARMONIUM

11, Esplanade, East, CALCUTTA

ஆங்கிலக் கல்வி

தத்தம் இல்லத்திலிருந்தே, பிறர் உதவியின்றி ஒரே வருடத்திற்குள் நான்காம் படிவத்திற் கொப்பான ஆங்கில அறிவைப் பெறலாம். ஆங்கில எழுத்துக்கள் அறியாதவர்களும், இடையில் கல்வியை நிறுத்தியவர்களும் கற்கலாம். 4 அணு ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

●

கேம்பிரிட்ஜ் காலேஜ்

(K) கைதமுக்கு, திருவனந்தபுரம்

N. B:—S. S. L. C. தேறி கல்லூரி படிப்பிற்கு சௌகரியமற்றிருப்பவர்க்கு, பிரைவேட்டாகவே Intermediate தேறலாம். 6 அணு ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

ஒரு கடிதம்

ரஸவாதி

அருமை நண்பா !

மூன்று வருடங்களுக்குப் பிறகு தாய் நாடு திரும்பியிருக்கும் உன்னைப் பார்க்க ஓடோடியும் வர முடியாத நிலையில் இருப்பதற்கு வருந்துகிறேன். நீ என்னை நன்குணர்ந்தவனாகையால் இவ்வளவு நாட்களாக நான் உனக்கு எழுதாததற்கும் இம்மாதிரி உன்னை வந்து பார்க்க முடியாமற் போனதற்கும் வித்தியாசமாய் நினைத்துக் கொள்ள மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். இந்தக் கடிதத்தை நான் எங்கிருந்து எழுதுகிறேனென்று அறிந்தால் நீ வியப்பு அடைவாய் !

ஆம் ! ஆஸ்பத்திரி வாயிற்படியில் கவலையே உருவாக உட்கார்ந்திருக்கும் போது, உன்னைப் பார்க்க வேண்டும். பார்த்துப் பேசி என் உள்ளக் குமுறல்களை, இதுகாறும் உனக்குத் தெரியாமல் வைத்திருந்ததைச் சொல்ல வேண்டும் என்ற ஆவலை ஓரளவு தணிக்கவும், இப்போதுள்ள கவலையைச் சற்று மறக்கவும் வேண்டியே அவசரமாகவும், படபடப்புடனும் இதை எழுதுகிறேன். இந்த மூன்று வருஷப் பிரிவில் என்னுடைய அனுபவங்களை உன்னிடம் அன்றி வேறு யாரிடம் நான் மனது விட்டுச் சொல்லிக் கொள்ள முடியும்!

சீமைக்கு நீ கிளம்பிய மறுமாதம் திடீரென்று எனக்குக் கல்யாணம் செய்ய வேண்டும் என்ற ஏற்பாட்டில் என் தாய் முனைந்து நின்றாள். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். "மருமகள் வந்தால்தான் வீட்டில் லக்ஷ்மியும் நுழைவாளடா பையா !" என்று ஒரு போடு போட்டாள் என் தாயார். அவளுடைய ஆசையைத்தான் கெடுப்பானேன் என்று எண்ணி அதற்குச் சம்மதித்தேன். பெண் எங்கோ ஒரு கிராமத்தில் இருந்தாள். என் தாய் இந்த நாளைய மனுஷி ! ஆகவே அவளும் நானுமாகவே பெண் பார்க்கப் போனோம்.

பெண் பிடித்திருக்கிறதா !

இதுதான் என் உறவினர்களுடைய கேள்வி.

இது என்ன கேள்வி ! இதற்குப் பதில் சொல்லும்போது ஆண் பிள்ளையின் முகம் அடையும் கோணல்களைப் பார்ப்பதற்காகவே இப்படிக் கேட்கிறார்கள் போலிருக்கிறது.

என்னைப் பற்றிய வரையில் அந்தக் கேள்விக்குப் பதில் இதுதான். பெண் நல்ல சிவப்பு. எனக்குப் பொருத்தமான பெண்தான். ஆனால் முகத்தில் குறுகுறுப்பு வசீகரம் போதாதுதான். "கலியாணமானால் தானே களை வந்து விடுமடா !" என்று என் தாயார் பிறகு சமாதானம் சொன்னாள். அவளுக்கு என்னவோ அந்த மனிதர்களை ரொம்பவும் பிடித்துப் போய் விட்டது, அதற்குள். பரவாயில்லை ! பெண் லக்ஷணமாகத்தான் இருக்கிறாள் பார்ப்பதற்கு. ஆனால் என் கற்பனை அழகிக்கும் இவளுக்கும் எவ்வளவு தூரம் ! ஆப்தனான உன்னிடம் உண்மையை அப்படியே சொல்லிவிட வேண்டுமல்லவா ! கேள் ! இவ்வளவு தூரம் அந்தப் பெண்ணைப் பற்றி அபிப்பிராயம் கூறிய நான் இதையும் சொல்லத்தான் வேண்டும். அவளிடம் அலாதியான சாந்தம் நிரம்பி யிருந்தது. அந்த முகத்தைப் பார்த்ததும் அதனுடைய சாத்வீகத் தன்மையில் வசீகரிக்கப்பட்டு எவனும் மரியாதை செய்வான். ஆனால் இந்தக் கவர்ச்சியே வேறு மாதிரி. "இவளைத்தான் நான் மணந்து கொள்வேன்" என்று ஒற்றைக் காலால் ஒருவனை நிற்க வைக்கும் அந்த ரகத்தில் சேர்ந்தது அல்ல. இதைப் படித்து விட்டு நீ சிரிப்பதை நான் உணர்கிறேன் !

எங்களைப் போலவே மத்தியதரக் குடும்பம். "பொறுப்பு மிகவும் வாய்ந்த பெண்ணடா இவள்" என்றாள் என் தாயார். ஒரு மாமியாருக்கு அது தானே வேண்டும் ! "அதற்கென்னம்மா ! உனக்குப் பிடித்தமிருந்தால் நான் ஆட்சேபமே சொல்லப் போவதில்லை" என்று முடிவாகச் சொல்லி விட்டேன் என் தாயாரிடம். கல்யாணத்துக்குச் சம்மதித்ததில் அந்தப் பெண்ணுக்காக என் வாழ்வின் ஏதோ ஒரு உயர்ந்த லட்சியத்தைத் தியாகம் செய்தவன் மாதிரி ஒரு உணர்வு என்னைக் கவ்விக் கொண்டது.

"அந்தப் பெண்ணுக்கு என் மனைவியாக வருவதற்கு வேண்டிய யோக்கியதாம்சங்கள் பூராவும் இருக்கின்றனவா !" என்ற கேள்வி அடிக்கடி எழுந்து என் மன நிம்மதியைக் குலைத்தது. 'வைத்தியக்காரன் ! இவ்வளவு அகம்பாவம் கூடாது உனக்கு' என்கிறாயோ ! என் படிப்பும், அழகும், புத்திசாலித்தனமும் எனக்குக் கர்வத்தை உண்டாக்கியதில் வியப்பு என்ன இருக்கிறது !

ஆனால் நான் யோசனை செய்வதே போல் அந்தப் பெண்ணும் என்னைப்பற்றி மனதில் எடை போடுவாளல்லவா ! அந்தத் தராசில் என் தட்டுத்தான் கீழிருக்கும் என்று திண்ணமாய்ச் சொல்லுவேன் ! ஏனெனில் அன்று அவள் பார்த்த பார்வையிலிருந்தே அவள் என்னை மிகவும் விரும்புகிறாளென்று புரிந்து கொண்டேன் நான். என்னுடைய அழகின் வசீகரத் தன்மையின் சக்திதானே அது !

ஒரு வழியாகக் கல்யாணம் முடிந்தது ! என்னுடைய விரக்தியின், அசிரத்தையின் காரணத்தினால் உனக்குக் கூட அப்போது இதைப்பற்றி நான் தெரிவிக்க விரும்பவில்லை.

"தாலி கட்டுவதோடு சரி. பிறகு மாமியாருக்கு மருமகளாக இருந்துவிட்டுப் போகட்டும் !" என்ற கொடிய எண்ணத்துடன்தான் அவளைக் கல்யாணம் செய்து கொண்டேன்.

ஆனால் அந்தப் பெண் ! என் மனப் போராட்டம் ஒன்றையுமறியாமல் கல்யாணக் களியாட்டங்களில் முழு மனதுடன் சந்தோஷமாக ஈடுபட்டிருந்தாள். அடிக்கடி தைரியமாகப் பந்தலில் என்னை நிமிர்ந்து ஆசையாக ஒரு பார்வை பார்ப்பாள். அவளிடம் என்னையும் அறியாமல் என் இதயத்தின் ஒரு மூலையில் பச்சாத்தாபம்,—பிரியமல்ல—உண்டாயிற்று !

பிறகு இரண்டு மூன்று மாதங்களாக அவள் எனக்கு எழுதிய கடிதங்கள்! அடக்கமே உருவான அந்தப் பேதையின் அன்பு மனம் லேசாக அவைகளில் பிரதிபலிக்கும். சாதகப் பட்சிபோல என் அன்புக்கு ஏங்கும் ஒரு பாவம் தென்படும். அவளுக்கு விஷயம் எப்படியோ தெரிந்து போய் விட்டது ! நான் பூரண விருப்பத்துடன் அவளை மணக்கவில்லை என்பதுதான். அவள் கடிதம் எழுதும் பாணி எனக்குச் சிறிது அவளிடம் மதிப்பை யூட்டியது. அந்தக் கடிதங்களால் அன்பை உண்டாக்க முடியவில்லை !

சென்னையில் எங்கள் குடித்தனம் ஆரம்பமாயிற்று. யந்திரம் போல்தான் அவளிடம் நான் நடந்து வந்தேன். கூடிய வரையில் அவளுடன்

பேசுவதைக் குறைத்துக் கொண்டேன். என் போலிக் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக வீட்டில் சாமான்களை அவர் கேட்குமுன் வாங்கிப் போட்டு விடுவேன். அண்டை அயலில் எங்கள் வாழ்க்கையைப் பற்றி அதிசயித்து, வம்பு பேசும் படி விட்டு விடலாமா!

பெண்களுக்கே இல்லாத மனோராஜ்ய மெல்லாம் உண்டல்லவா! கணவனுடன் கைகோர்த்தவாறு உலவ வேண்டும், பீச், சினிமா இவைகளுக்கு ஆனந்தமாகச் செல்ல வேண்டும் என்பவை அதிலொரு பகுதிதானே! என் மனைவி மட்டும் அதற்கு விதி விலக்கா! ஆனாலும் அவள் மனதை அடக்கிக் கொண்டிருப்பாள். என்னிடம் ஒரு வார்த்தை கூட அவள் ஆசைகளைக் குறித்துச் சொல்லியதில்லை. நானும் பிடிவாதமாக அவளை அழைத்துப் போகாமலேயே இருந்தேன். காரியாலயத்திலிருந்து வந்தவுடன் உடனேயே எங்காவது வெளியே சென்று விடுவேன்; அல்லது எட்டரை மணிக்குத்தான் வீட்டிற்கே திரும்புவேன்.

போதாக் குறைக்கு எனக்குச் சங்கீத ரஸிகர் ஒருவரின் நட்பு கிடைத்தது! அவ்வளவுதான்! அதிலிருந்து எனக்கும் சங்கீதப் பித்து பிடித்து விட்டது. மாலை நேரங்களில் எவ்வளவோ நாட்கள் கடற்கரை மணலில் உட்கார்ந்து சங்கீதத்தைப் பற்றி அலசி ஆராய்ந்து சர்ச்சை செய்வோம். இதில் எனக்கு இன்பமும், நிம்மதியும் கிடைத்தது. ஞாயிற்றுக்கிழமை தவறாமல் கச்சேரிகளுக்குப் போய் விடுவோம். என் மனைவியினிடமிருந்து ஒதுங்கியிருக்கும் விஷயத்தில் எனக்குப் பெரிதும் உதவின இவைகள். அநேக நாட்கள் இரவு ஒன்பதரை மணிக்கு மேல் வீட்டிற்கு வருவேன். சாப்பாட்டை முடித்துக்கொண்டுதான். அவள் கன்னத்தில் கண்ணீர் வடிந்து காய்ந்து போன கறையும், கலங்கிய கண்களும் என் பார்வைக்குத் தப்பாது. ஆனால் மனதைக் கல்லாக்கிக் கொண்டுதானே நான் வீட்டினுள்ளேயே நுழைகிறேன்!—இதில் ஆச்சரியம் என்னவென்றால், நாங்கள் இப்படி இருக்கிறோம் என்று எங்கள் அயலார் ஒருவர்கூடச் சந்தேகித்திருக்க மாட்டார்கள். அவ்வளவு சகிப்புத்தன்மை அவளிடம் இருப்பதைப் பார்த்து எனக்கு என்னவோ அவளிடம் ஒரு மரியாதை உண்டாகியது.

ஒரு சமயம் ஊரில் நல்ல சினிமா ஒன்று வந்திருந்தது. பிரமாதமாகப் பேசிக் கொண்டார்கள் எல்லோரும் அதைப்பற்றி. ஒரு நாள் பகலில் சீக்கிரமாக வந்து விட்டேன் காரியாலயத்திலிருந்து. பாத்திரங்களைத் தானே தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தாள் என் மனைவி. "வேலைக்காரி எங்கே!" என்று கேட்டேன்.

ஒரு கணம் ஏறிட்டு என்னவோ மாதிரி பார்த்தாள் என்னை. பிறகு மெதுவாக "வேலைக்காரி... வந்து...சினிமாவுக்குப் போயிருக்கிறாள். ரொம்ப நல்ல படமாம்!" என்றாள் இழுத்தவாறு. "சரி சரி" என்று உள்ளே வந்துவிட்டேன். தயங்கித்தயங்கி அவளும் என் பின்னாலேயே வந்தாள். அவள் கண்களில் ஒரு அசாதாரண ஒளி வீசியது. உதடுகள் துடித்தன ஏதோ சொல்ல விரும்புபவை போல்.

"என்ன!" என்றேன் அதட்டலாக.

"ஒன்றுமில்லை. வேலைக்காரிகூடச் சினிமாவுக்குப் போகிறாள். நான் மட்டும்......" என்று மென்று விழுங்கினாள். ஆம்! அவள் மனதில் இதுகாறும் குமுறிக் கொண்டிருந்த எரிமலை வெடித்தே விட்டது!

"நான் மட்டும் யோக்கியதை இல்லாதவளா!" என்றுதான் அவள் கேட்க விரும்பினாள்.

"உன் யோக்கியதைக்குச் சினிமா இல்லாமல் குறைந்து போய் விட்டதாக்கும்!" என்று இரக்கமில்லாமல் சீறினேன் நான்.


"தப்பு. தப்புதான் என்பேரில்! வேலைக்காரிக்கும் கீழான என் யோக்யதை தெரிந்த நான் உங்களிடம் என் ஆசையைச் சொல்லி, வெட்கத்தை விட்டுக் கேட்டது பிசகுதான்!" என்றாள்.

"பளா"ரென்று விட்டேன் ஒரு அறை கன்னத்தில். "அம்மா" என்று அலறியவாறு கன்னத்தைக் கையில் தாங்கிக் கொண்டாள் அவள்!

"உன் அழகுக்கும், படிப்புக்கும் உன்னை இதை விட உசத்தியாக ராணிபோல வைத்துக் கொள்ள வேண்டுமா!" என்று இரைந்தேன். தேம்பித் தேம்பி அழுது கொண்டே போய் விட்டாள். வெகு நேரம்வரை என் ஆத்திரம் அடங்கவில்லை!


எதற்கு இவ்வளவு கிராதகத்தனமாய் நடந்து கொண்டோம் என்று பின்னால் வருத்தமாகத்தான் இருந்தது! இன்றுவரை நேரில் கூடப் பேசியறியாத அவள் துணிச்சலுடன் கேட்ட கேள்விகள் என்னைத் திடுக்கிடச் செய்து ஆத்திரமூட்டியபோதிலும் அவளுடைய அந்தக் கேள்விகளில் பொதிந்திருந்த ஆசை, ஏக்கம், உண்மை எல்லாம் என் இதயத்தைத் தொட்டன!

அன்றிரவு நல்ல ஜுரம் வந்து விட்டது அவளுக்கு. எனக்கு உடம்பு பதறிப்போய் விட்டது. "சே! அவ்வளவு மிருகத்தனமாகவா நடந்து கொண்டோம்!" என்று என்னையே சபித்துக் கொண்டேன் மிகவும். உடல் அனலாகத் தகிக்கும் அவளைப் பார்த்தவுடனே எனக்குப் பரிதாபமாக இருந்தது. மெதுவாக, முதல் தடவையாக பெயர் சொல்லி அவளைக் கூப்பிட்டேன், எழுப்பும் உத்தேசத்துடன். கண் திறந்து மெதுவான குரலில், "ஏன்! நீங்கள் இன்னும் தூங்க வில்லையா!" என்றாள் பரிவுடன். பகல் சம்பவத்தை அவள் அதற்குள்ளாகவா மறந்து விட்டாள்!



"என்ன ஸார்! நீங்கள் நம்ம ஆபீஸ்காரர்கள் நடிக்கும் நாடகத்திலே ஏன் ஸ்திரீ பார்ட் போட்டுக் கொள்ளக் கூடாது? நன்றாகப் பொருந்துமே!"

"வேண்டாம் ஸார்! வெட்கமாயிருக்கிறது, ஸார்!"



"என்ன பையன்களா, கார் வருகிறது கூடத் தெரியாமல் வழியை மறைச்சுக்கிட்டு நிக்கறீங்க?"
"நாங்க ரெயில் வண்டி விளையாட்டு விளையாடறோம்......ரெயில் போனப் புறம்தானே கார் போகணும்?"

"இல்லை. தூங்கிக் கொண்டுதானிருந்தேன். நீ அரற்றும் சத்தம் கேட்டு இப்போதுதான் விழித்துக் கொண்டேன். பாவம்! உனக்கு நல்ல ஜுரம் அடிக்கிறதே!" என்றேன் அவள் நெற்றியை வருடியவாறே. அவளை ஸ்பர்சிக்கத் தூண்டியது அவளுடைய பரிவுதான் என்பதை என் உள்ளுணர்வே சொல்லிக் காட்டியது. "அதற்கென்ன! நீங்கள் பேசாமல் படுத்துத் தூங்குங்கள். காலையில் எனக்கு உடம்பு எல்லாம் சரியாகப் போய்விடும்" என்றாள் புன்னகையுடன். அது என்னை என்னவோ செய்தது! யூகலிப்டஸ் ஆயில் புட்டியை எடுத்துவந்து அவள் நெற்றியில் தடவினேன். "நீங்கள் எதற்குச் சிரமப்படவேண்டும். இங்கே கொடுங்கள் அதை" என்று குரக்கே கையை நீட்டினாள். அன்று அவளுடைய செய்கைகள் என் மனதைத்

வாங்கிவந்து என் கையினாலேயே ஊட்டினேன். மொத்தத்தில் என் அன்பு மழையில் அவள் திக்குமுக்காடித்தான் போனாள்!

ஒருநாள் இரவு சாப்பாடானபின் அன்புகனிந்த பார்வையுடன் என்னைப் பார்த்து "உங்களை ஒன்று கேட்கலாமா! என்றாள். "தாராளமாகக் கேளேன்!" என்றேன் நான்.

"இதுவரை நீங்கள் என்னிடம் நடந்து வந்த மாதிரிக்கும் இப்போது கொஞ்ச நாட்களாக நான் தாயாகப் போகிறேன் என்று தெரிந்ததிலிருந்து, நடந்து கொள்வதற்கும் உள்ள வித்தியாசம் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! இவ்வளவு அன்பு உள்ளவர் நீங்கள் என்று எனக்குத் தெரியாமல் போய் விட்டதே! ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் என் உண்மை அன்புக்கு இரங்கி நீங்கள் என்னை உணர்ந்து கொள்வீர்கள் என்று நம்பி வந்தேன். அந்த நம்பிக்கை வீணாக வில்லை! ஆனால் ஒன்று!......என் வயிற்றில் குழந்தை வந்ததிலிருந்துதான் உங்களுடைய பரிபூரண அன்பும் எனக்குக் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. இது உண்மைதானே! குழந்தை பிறந்தவுடன் உங்கள் அன்பு பழையபடி குறைந்து விடுமோ என்று பயப்படுகிறேன். நான் உங்கள் அன்பை நம்பி இருக்கிறேன். என்னைக் கைவிடாதீர்கள்!" என்று உருக்கமாகத் தழுதழுத்த குரலில் கூறியபோது, அவள் கண்களில் சோகத்தின் ரேகை படர்ந்தது.

இதற்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்!

என் மனதில் உணர்ச்சிகள் போராடின! என் இதயம் நெகிழ்ந்தது. அகம்பாவமும் குரூரத்தன்மையும் கரைந்தன. அவளுடைய இந்த அன்புக்கு நான் உரியவன்தானா என்ற சந்தேகம் என்னை மூச்சுத் திணற வடித்தது.

"என்ன அழுகிறீர்களா என்ன!" என்று கேட்டாள் அவள்.

ஆம்! அவள் மடியில் படுத்து விம்மி விம்மி அழுதேன் நான்!

"கண்ணே! இதுவரை உன்னிடம் மிருகம் மாதிரி நடந்து வந்தேன். உன்னைப் போன்ற உத்தமமான குணமுடைய மனைவியை அடைந்திருந்தும், பாவி, உன்னை நன்றாக அறிந்து அன்புடன் நடத்தாமற் போனேன் முட்டாள்தனமாய். இனி என் பழைய வாழ்வு மறைந்தது.


சேவை
யின்
சினனம்
A CENTURY OF SEWING SERVICE
SINGER
SEWING
MACHINES
1851 1951
SINGER
சிங்கர் தையல் யந்திரம் நம்பக மான, நீண்டகால சேவை செய் வதுமின்றி, எந்த விதமான தையல் வேலையையும் அப்பழு க்கற்ற நுணுக்கத்துடன் மிகக் குறைவான நேரத்தில் செய்ய உதவுகிறது. அதன் சிறந்த வேலைப்பாடுதான், கடந்த 100 வருடகாலத்தில்சிங்கர் தையல் யந்திரத்தின் முதன்மையான முன்னேற்றத்திற்குக் காரண மாயிருந்திருக்கிறது. நீங்கள் சிங்கர் தையல் யந்திரத்தை வாங்கும்பொழுது உண்மையி ல் சிறந்த வேலைப்பாட்டையே வாங்குகிறீர்கள்.
ஸிங்கர்*
* சிங்கர் மானுபாக்சரிங் கம்பெனியின் ஒரு டிரேட் மார்க்.



உட்புற சுத்தத்தினுல் மூளை தெளிவாகவும் உடல் சுறுசுறுப்பாகவும் இருக்கும்போது எவ்வளவு நன்ருக ஆடுகிறீர்கள்! மிகச் சிறந்த மலமிளக்கியான நுரைக்கும் ஆண்ட்ரூஸை பருகுவதால் குடல்கள் சுத்தமடைவதுடன் ஜீரணக் கருவிகள் ஒழுங்காக இயங்கி ஆரோக்கியம் தரும்.

ஆண்ட்ரூஸ் வாயை சுத்திகரித்து வயிற்றை துப்புரவாக்கி, குடலை வலுப்படுத்தி, மலபந்தம் ஏற்படாதவாறு தடுக்கிறது. புத்துணர்வு அளிக்கும் பானமாகவும் ஆண்ட்ரூஸை பருகலாம்; ஒரு கோப்பை ஜலத்தில் ஒரு தேக்கரண்டி போட்டாலே உற்சாகம் தரும் குளுமையான பானமாக மாறுகிறது'

ஆண்ட்ரூஸ்

மிகச் சிறந்த மலமிளக்கி




K 243/51

உங்களுக்குத் தெரியுமா—?

—உங்கள் ஜீரணத் தன்மையை வாய் குறிக்கிறது என்று! எல்லாம் ஒழுங்காக இருந்தால் நாக்கு துப்புரவாக இருக்கும்; வாயில் புதுமை உணர்ச்சி இருக்கும். குடல் மந்தம் ஏற்பட்டால் வாயில் வெண்மை படிந்து வாயில் அருவருப்பான ருசி இருக்கும். நுரைக்கும் ஆண்ட்ரூஸ் தேவை—அதன் சுத்திகரிக்கும் தன்மை வாயையும் சீரணபாட்டையும் சுத்திகரித்து புதுமை உணர்ச்சி அளிக்கிறது.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden Poonamallee High Road, Kilpauk, Madras


Rexona
நாளுக்கு நாள் அதிக
தெளிவானதும் அழகா
'னதுமான சருமம்
ரெக்ஸோனுவிலிருக்
கும் 'கேடில்' உங்கள்
சருமத்திற்கு புது
ஆரோக்கியமும்
எழிலும் தரும்
ரெக்ஸோனு
'கேடில்'* கலந்த சோப் இது ஒன்றே
* சருமத்தை மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக்
கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர் இது.
R.P. 71-X30 TM
ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon

